பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 தை 23 வியாழக்கிழமை (05.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:071

## புலம்பெயர்ந்தவர்களை நாடு திரும்ப அழைப்பு

# வெளிநாட்டு நிபுணர்களின் உதவியின்றி படையினர் வெற்றி ஈட்டியுள்ளனர்

### சுதந்திரதின உரையில் ஜனாதிபதி பெருமிதம்



கொழும்பு, பெப்ரவரி05

எந்தவொரு வெளிநாட்டு நிபுணர்களினீ உதவிகளும் இன்றி, படையினர் தமது சொந்த அறிவின் மூலமே யுத்தத்தில் வெற்றி வாகை சூடியுள்ளனர் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு காலிமுகத்திடலில் நேற்று நடைபெற்ற 61 ஆவது சுதந்திர தின நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் பயங்கரவாதம் ஏறக்குறைய முற்றாக அழிக்கப்பட்டிருப்பதால், புலம்பெயர்ந்த இலங்கையர்களான சிங்களவர், தமிழர்,முஸ்லிம்கள், பறங்கியர், மலாயர் உட்பட சகல பிரஜைகளையும் மீண்டும் தாயகம் திரும்புமாறு அவர் தமது உரையில் பகிரங்க அழைப்பு விடுத்தார். (13 ஆம் பக்கம் பார்க்க)

## காயமுற்றோரை வவுனியா கொண்டுசெல்ல இன்று 6 மணி நேரம் போர் நிறுத்தம்

கொழும்பு பெப். 5

வன்னியில் காயமடைந்த பொதுமக்களை வவுனியா பொது வைத்தியசாலைக்குக் கொண்டு வருவதற்காக, அரசு இன்று, அனேகமாக, 6மணி நேரம் போர் நிறுத்தத்தை அறிவித்திருக்கின்றது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த குறித்து சுகாதார சேவைகள் தலைமைப் பணிப்பாளர் டாக்டர் அஜித் மெண்டிஸ் நேற்றிவு பி.பி. ஸிக்குத் தெரிவித்தவை வருமாறு:-

வன்னியிலிருந்து நோயாளர்களை வவுனியா பொது வைத்தியசாலைக்குக் கொண்டு (16 ஆம் பக்கம் பார்க்க)

## தற்காலிகத் தாக்குதல் தவிர்ப்புக் காலத்துக்கு உடன்பட அமெ., பிரிட்டன் கூட்டாக வலியுறுத்து

### ஹிலாரி கிளின்டன் - மில்லிபாண்ட் சந்திப்பை அடுத்து அறிவிப்பு

வாஷிங்ரன், பெப்.5

இலங்கை அரசையும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் தற்காலிகத்தாக்குதல் தவிர்ப்புக் கால அளவீடு ஒன்றுக்கு உடன்படுமாறு அமெரிக்காவும்,பிரிட்டனும் கூட்டாக வலியுறுத்தியிருக்கின்றன.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டன் அம்மையாருக்கும், பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட்டுக்கும் இடையில் வாஷிங்ரனில் செவ்வாயன்று இடம்பெற்ற சந் திப்பை அடுத்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையிலேயே இவ்விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டறிக்கையின் விவரம் வருமாறு:-

இன்று (செவ்வாய்க்கிழமை) காலை அமெரிக்க (02 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீது கொத்துக் குண்டுகள் வீசித் தாக்குதல்!

### ஐ.நா. அதிகாரி உறுதிப்படுத்துகிறார்

கொழும்பு,பெப்.5

புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீது நேற்று கொத்துக் 'கிளஸ்ரர்' குண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்பதை ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான பேச்சாளர் கோர்டன் வெய்ஸ் உறுதி செய்துள்ளார்.

புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித்தாக்குதல் மற்றும் பிற தாக்குதல்களில் 58 பொதுமக்கள் கொல்லப்பட்டு 80 பேர்வரை படுகாயமடைந்தமையையும் அவர் உறுதிப்படுத்தினார்.

இலங்கையில் இடம் பெற்றுவரும் யுத்தத்தில் 'கிளஸ்ரர்' குண்டு பயன்படுத்தப்பட்டதை ஐக்கியநாடுகள் அமைப்பு உறுதி செய்துள்ளமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## போரை நிறுத்தி சமாதானத்தை நிலைநிறுத்துமாறு பாப்பரசர் இரு தரப்புகளிடமும் வேண்டுகோள்

வத்திக்கான், பெப்.5

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஆயுதங்களை கிழே வைத்து, போரை நிறுத்த வேண்டும் என்று பரிசுத்த பாப்பரசர் பதினாறாவது ஆசீர்வாதப்பர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## இன அழிப்பில் ஈடுபடும் இலங்கை அரசுக்கு இராணுவ.உதவி வழங்குவது நியாயமா? - கூட்டமைப்பு

கொழும்பு, பெப்ரவரி 05

ஆயுதங்களை கீழே வைத்து, வன்முறைகளைக் கைவிட்டு, இலங்கை அரசு வழங்கும் மன்னிப்பு வாய்ப்பை ஏற்று அரசியல் தீர்வுக்கான அரசியல் பேச்சுகளில் ஓர் அரசியல் கட்சியாகக் கலந்து கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் கோரிக்கை விடுத்து, இணைத் தலைமைகள் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தி வெளியிட்டிருக்கின்றது.

இனஅழிப்பில் இலங்கை அரசு ஈடுபட்டிருப்பதை நன்கு அறிந்து கொண்டும் கூட அதைத் தடுக்காமல் இலங்கை அரசுக்கு சர்வதேசம் இராணுவம் (16 ஆம் பக்கம் பர்க்க)

## புதுக்குடியிருப்பில் தொடர்கிறது ஷெல் மழை வைத்தியசாலை மூடப்பட்டு வேறு இடத்துக்கு மாற்றம்

கொழும்பு, பெப்.05

புதுக்குடியிருப்பு பகுதியை நோக்கித் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் பீரங்கித்தாக்குதலினால் புதுக்குடியிருப்பு வைத்தியசாலை வேறு இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

அங்கு இருந்த நோயாளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் புதுக்குடியிருப்புக்கு வடக்கே உள்ள வேறொரு பகுதிக்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே கல்விச்சுடர் →
தரம் 5 மாணவருக்கான தயார்படுத்தல் பரீட்சை வினாத்தாள் - II

## உடன்போர் நிறுத்தம் செய்யக்கோரி ஐ.நா.அலுவலகம் முன்பாக 10,000 பேர் ஆர்ப்பாட்டம்

ஜெனிவா, பெப்.5

இலங்கையில் உடன்போர் நிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்று கோரி 10 ஆயிரம் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஐ.நா. அலுவலகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகம் முழுவதும் நேற்றுக் கதவடைப்பு; ஆர்ப்பாட்டம் செய்த ஆயிரம் பேர் கைது!

சென்னை, பெப். 5

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் நேற்று நடத்திய முழு அடைப்பு போராட்டத்தால் தமிழ்நாட்டில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. ரயில்கள், பஸ்கள், ஓட்டோக்கள் உள்ளிட்ட வாகனங்கள் எல்லாப் பகுதிகளிலும் இயங்கவில்லை. பள்ளிகள் மற்றும் அலுவலகங்களும் முழு அளவில் இயங்கவில்லை. மாநிலத்தின் பல பகுதிகளிலும் பெரும்பாலான கடைகள் (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கிர்கிஸ்தானிலுள்ள அமெ. விமானத்தளம் மூடப்படும் என்கிறார் அந்நாட்டு ஜனாதிபதி

மொஸ்கோ, பெப்.5

''கிர்கிஸ்தான் எல்லையிலுள்ள கேந்திர அமெரிக்க விமானப் படைத்தளம் மூடப்படும்'' என ரஷ்ய விஜயத்தை மேற்கொண்டுள்ள கிர்கிஸ்தான் ஜனாதிபதி குர்மன்பெக் பாக்கீவ், ரஷ்யத் தலைநகரான மொஸ்கோவில் தெரிவித்தார்.

முன்னாள் சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்து தனிநாடான கிர்கிஸ்தானின் எல்லையில், தலைநகரான பிஸ்கெக்கிற்கு அண்மையில் மானாஸ் என்னுமிடத்தில் இந்த விமானப் படைத்தளம் அமைந்துள்ளது.

கிர்கிஸ்தான் ஜனாதிபதி குர்மன்பெக், மொஸ்கோவில் பேசுகையில், ''ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கும், அல்-குவைதா தீவிரவாதிகளுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள அமெரிக்க இராணுவ நடவடிக்கைக்கு உதவும் பொருட்டே, 2001 ஆம் ஆண்டு மானாஸில் இவ்விமானத் தளம் அமைக்கப்பட்டது'' என்றார்.




"அமெரிக்க விமானப்படை இதனைப் பயன்படுத்துவதற்கான கால எல்லை முடிவடையும் தறுவாயில் உள்ளது. அதனால், இதனை மூடிவிடுவதற்கு எனது அரசு முடிவெடுத்துள்ளது. அதன்படி இது மூடப்பட்டுவிடும்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்

''ஆப்கானில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அமெரிக்க நேட்டோ படைகளுக்கான உதவிகள், இந்த விமானத்தளத்துக் கூடாகவே சென்றடைகின்றன. மத்திய ஆசியாவிலேயே அமெரிக்காவுக்கு அனுகூலமான விமானத்தளம் இதுவொன்றே ஆகும்'' என மொஸ்கோ பி.பி.ஸி. நிருபர் ரிச் சர்ட் கல்பின் தெரிவித்தார்.

''இவ்விமானத்தளம் மூடப்பட்டால் அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படையும். அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் புதிய நிர்வாகமும் ஆப்கானிலுள்ள அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கத் திட்டமிட்டுள்ளது. விமானத் தளம் மூடப்பட்டால், இத்திட்டமும் பாதிப்புக்குள்ளாகும் '' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

''இது விடயத்தில் ரஷ்யா இராஜதந்திர அணுகுமுறையை மேற்கொண்டுள்ளது. முன்னாள் சோவியத் ஒன்றியத்தில் அங்கம் வகித்த நாடுகள் பிரிந்து தனிநாடுகளாகிவிட்டன. இந்நாடுகளில் ரஷ்யா மீளவும் தன் செல்வாக்கை நிலைநாட்ட முனைந்துள்ளது. இவற்றில் எந்த ஒரு நாடும் அமெரிக்க அணியில் இணைவதை ரஷ்யா விரும்பவில்லை'' என்றும் இந்த நிருபர் விளக்கினார்.

''இவ்விமான நிலையத்தைப் பயன்படுத்து வதற்கு கிர்கிஸ்தான் கோரும் சரியான தொகையை வழங்க அமெரிக்கா முன்வரவில்லை. இதனை ரஷ்யா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முன்வந்துள்ளது. இப்போது ரஷ்யா கோடிக் கணக்கான டொலரை கிர்கிஸ்தானுக்கு கடனாகவும், உதவித் தொகையாகவும் வழங்க முன்வந்துள்ளது. அதனால், கிர்கிஸ்தான் கொள்கையில் மாற்றம் .ஏற்பட்டுள்ளது'' என்றும் அவர் கூறினார்.

கிர்கிஸ்தான் ஜனாதிபதி மொஸ்கோவில் தொடர்ந்து பேசுகையில், ''ரஷ்யா, கிர்கிஸ்தானுக்குப் பெருந்தொகையான நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது. இந்த நிதியில் 200 கோடி டொலர் கடன் நிதியும், 1 கோடியே 50 இலட்சம் டொலர் உதவி நிதியும் அடங்கும்'' எனத் தெரிவித்துக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க இராணுவம் எதிர்ப்பு

வாஷிங்ரன், பெப். 05

''கிர்கிஸ்தான் எல்லையிலுள்ள மானாஸ் விமானத்தளம் எங்களுக்கு அதி முக்கியமானது. ஆப்கானிலுள்ள எங்கள் படைகளுக்குத் தேவையான அனைத்து விநியோகப் பொருள்களும் இதனூடாகவே சென்றடைகின்றன. இதனை கிர்கிஸ்தான் அரசு மூடினால், எமது பணிகள பாதிப்புக்குள்ளாகும்'' என பெண்டகன்பேச்சாளர்ஜியோப் மோரல் வாஷிங்ரனில் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

''இவ்விமான நிலையம் தொடர்பாக, கிர்கிஸ்தான் தலைநகரான பிஸ்கெக்கில் அந்நாட்டு அரசுடன் காத்திரமான பேச்சுகள் நடத்தப்படும். கிர்கிஸ்தான் அரசுடனான எம் நல்லுறவுகளை எம்மால் மேலும் தொடர முடியுமென்ற நம்பிக்கை எமக்குண்டு'' என்றும் அவர் கூறினார்.

# காஸாவில் மீண்டும் வான் குண்டு வீச்சு

ஹமாஸ்களின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள காஸா பகுதியிலிருந்து இஸ்ரேல் நகரான அஸ்க்கெலன் மீது மேற்கொள்ளப்பட்ட றொக்கெட் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் பொருட்டு, இஸ்ரேலிய போர் விமானங்கள் குண்டுவீச்சில் ஈடுபட்டன என இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது.

''எகிப்து வழியாக காஸாவுக்குள் பொருள்கள் கடத்தி வருவதற்கான சுரங்கங்கள் மீது இஸ்ரேலிய விமானங்கள் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. ஹமாஸ்களின் தாக்குதல்கள் நீடிக்குமானால், எமது தாக்குதல்களும் தொடரும்'' என்றும் அது குறிப்பிட்டது.

# வடகொரியாவின் புதிய ஏவுகணை

நீண்ட தூரம் அணுகுண்டுகளை ஏந்திச் சென்று தாக்கவல்ல அதிசக்தி படைத்த ஏவுகணைகளை தற்போது வடகொரியா தயாரித்துள்ளது. இவை பரிசோதனைக்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என அது குறிப்பிட்டுள்ளது.

இந்த ஏவுகணைகள், ஏவுவதற்குப் பொருத்தப்பட்டு, தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளமையை, அமெரிக்க உளவுத்துறைச் செயற்கைக்கோள் வெகுதுல்லியமாகப் படம் பிடித்துள்ளது என இவ்வுளவுத்துறை வட்டாரமும் தெரிவித்துள்ளது.

# போராட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் நூறுபேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்

சென்னை, பெப்.5

இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்பு இயக்கம் நடத்திவரும் முழு அடைப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து சட்டத்தரணிகள் நேற்று சென்னையில் சாலை மறியல் மற்றும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இவர்களுடன் பொதுமக்களும் சேர்ந்துகொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்களைப் பொலிஸார் தடியடி நடத்திக் கலைத்தனர். அத்துடன் சட்டத்தரணிகளைப் பொலிஸார் கைது செய்தனர்.

சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் நேற்று 4 ஆவது நாளாக நீதிமன்றப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். அத்துடன் முழு அடைப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அவர்கள் உயர்நீதிமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சாலை மறியலில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு ஆதரவாகக் கோஷம் எழுப்பியதோடு இலங்கையின் தேசியக் கொடியைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

இச்சம்பவத்தால் என்.எஸ்.சி.போஸ் சாலை முழுவதும் வெறிச்சோடிக் காணப்பட்டது. தொடர்ந்து சட்டத்தரணிகள் பிராட்வே சாலையில் திறந்திருந்த ஒரு சைக்கிள் கடையை மூடச் சொல்லியும்,அவ் வழியாக வந்த மோட்டார் சைக்கிள் மற்றும் கார்களை வழிமறித்து திரும்பிப் போகச் சொல்லியும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போதே அங்கு கூடியிருந்த சட்டத்தரணிகளில் நூறுபேர் கைதுசெய்யப்பட்டனர். (அ-சி)

# ஈரானின் அணுத் திட்டம் குறித்து ஆறு நாடுகள் கூடி ஆராய்வு

வைஸ்பேடன், பெப்.5

சர்ச்சைக்குரிய ஈரானின் அணுத் திட்டம் தொடர்பான ஆறு நாடுகளின் கலந்துரையாடல் நேற்று புதன்கிழமை, ஜேர்மனிய நகரான வைஸ்பேடனில் ஆரம்பமாகியது. பிரிட்டன், அமெரிக்கா, ஜேர்மன், பிரான்ஸ், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இதில் பங்குபற்றியுள்ளார்கள்.

ஈரான் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட செய்மதிக்கோளொன்றை விண்ணுக்கு ஏவிய மறுதினத்தில் இக்கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச்செய்மதிக்கான தொழில்நுட்பம், ஈரானின் ஏவுகணைத் திட்டத்தை அபிவிருத்தி செய்யப்பயன்படுத்தப்படலாம் என அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் குறிப்பிட்டுள்ளன.

ஈரான் அணுகுண்டு தயாரிக்க முற்படுகிறது என்ற சந்தேகம் மேற்கத்தேய நாடுகளின் மத்தியில் தலையெடுத்துள்ளது. அதனால், அணுகுண்டு உருவாக்கத்துக்கு ஏதுவான யூரேனிய செறிவூட்டலைக் கைவிடுமாறு ஈரானுக்கு அந்நாடுகளும், ஐ.நாவும் கோரிக்கை விடுத்தன. ஈரான் இக்கோரிக்கையை நிராகரித்து விட்டது. இதனால், ஐ.நாவில் அந்நாடுகள் புகாரிட்டன.

# கொலம்பிய தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட முன்னாள் மாகாண ஆளுநர் விடுவிப்பு

பொகொட்டா, பெப்.5

கொலம்பிய பார்க் தீவிரவாதிகளால் கடந்த ஏழு வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் மாகாண ஆளுநர் அலன் ஜாரா விடுதலை செய்யப்பட்டார்.

இவர் காகுயிட்டா மாநில வனாந்தரப் பிராந்தியத்திலுள்ள ஓரிடத்தில், தீவிரவாதிகளால், செஞ்சிலுவைச் சங்கப் பிரமுகர்களிடம் ஒப்படைக்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து கிழக்கு பகொட்டாவிலுள்ள விலாவிசின் சியோ நகருக்கு ஹெலிக்கொப்டர் மூலமாக அழைத்து வரப்பட்டார்.

அலன்ஜாரா ஹெலிக்கொப்டரிலிருந்து இறங்கியதும், அழுது புலம்பியவாறு ஓடி வந்து அவரை அவரது பாரியாரும், புதல்வர்களும் கட்டித் தழுவினர். அங்கு அவர் அதிகாரிகள் மத்தியில் பேசுகையில் ''நான் எனது குடும்பத்துடன் மீள இணைந்தமையை எனது வாழ்வில் நிகழ்ந்த ஓர் அற்புத நிகழ்ச்சியாகவே கருதுகின்றேன்'' என்றார்.

முன்னாள் மாகாண ஆளுநரான அலன் ஜாரா, 2001 ஆம் ஆண்டு ஜூலையில், பார்க் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். இவரை விடுவிப்பது தொடர்பாக, அண்மையில், பார்க் தீவிரவாத அமைப்பினருடன், செஞ்சிலுவைச் சங்க மூன்று பிரதிநிதிகளும், கொலம்பிய செனட்டர் பீடாட் கொர்டோபாவும் பேச்சு நடத்தினர்.

இப்பேச்சுகளில் எட்டப்பட்ட உடன்படிக்கைக்கிணங்க, முன்னாள் ஆளுநர் விடுவிக்கப்பட்டார். விலாவிசின்சியோ நகரை வந்தடைந்த ஆளுநர், இங்கு பத்திரிகையாளர் மாநாடொன்றில் உரையாற்றினார்.

அவர் தமதுரையில், ''நூற்றுக் கணக்கானோர் வனாந்தரப் பிராந்தியத்தில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். அவர்களின் விடுதலைக்காக, ஜனாதிபதி யுரிபி, எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவே இல்லை'' என குற்றஞ்சாட்டினார்.

''பார்க் தீவிரவாதிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளால், எவ்வித பலனும் கிட்டாது. பேச்சுகளின் மூலமாக அரசியல் தீர்வே எட்டப்பட வேண்டும். உள்நாட்டு யுத்தத்துக்கு இதன் மூலமாகவே பரிகாரம் காண முடியும்'' என்றும் அவர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

பார்க் தீவிரவாதிகள் டசின்கணக்கான 'அரசியல் கைதி'களையும் தடுத்துவைத்துள்ளார்கள். அதேவேளை, கொலம்பிய சிறைகளில் அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ள தங்களின் முக்கிய சகாக்கள் விடுதலை செய்யப்பட்டால் மட்டுமே, அவர்களுக்கு ஈடாக, அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படுவார்கள் என பார்க் தலைமைப் பீடம் நிபந்தனை விதித்து வருகிறது.

மற்றுமோர் அரசியல் கைதியான முன்னாள் மாகாண எம்.பி.பிரிடோ போபஸ், இன்று வியாழக்கிழமை விடுதலை செய்யப்படுவார் என மேற்கு கொலம்பியாவில் கோர்டோபா, பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.



பிரான்ஸின் விமானம் தாங்கிக் கப்பல் கிலமென்சவ் (இடது). இது ஒரு காலத்தில் அந்நாட்டு கப்பல் படையில் புகழ் பெற்று விளங்கியது. இப்போது சுற்றுச் சூழலுக்கு ஆபத்து ஏற்படும் நிலை உருவாகி உள்ளமையால் இதை உடைப்பதற்கு அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. பிரிட்டனின் ஏபில் யுகே நிறுவனம், இந்தக் கப்பலை உடைப்பதற்கு ஏலம் எடுத்துள்ளது. பிரிட்டனின் வட கிழக்குப் பகுதியிலுள்ள தனது கப்பல் கட்டும் தளத்துக்கு எடுத்துச் செல்வதற்காக பிரான்ஸின் பிரெஸ்ட துறைமுகத்திலிருந்து அந்தக் கப்பலை தள்ளிச் செல்கிறது ஆங்கிலியன் எர்ல் என்ற பிரிட்டிஷ் கப்பல்.

## தற்காலிகத்....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

வெளிவிவகார அமைச்சர் கிளிண்டனுக்கும், பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் மில்லிபாண்ட்டுக்கும் இடையில் நடந்த சந்திப்பின்போது, வடக்கு இலங்கையில் தற்போது இடம்பெற்றுவரும் மோதல்களினால் சீர்கெட்டுச் செல்லும் மனிதநேய நிலைமை குறித்து இருவரும் மிகுந்த கவலையுடன் கலந்தாலோசனை மேற்கொண்டனர்.

இந்த நீண்டகாலப் பிணக்குக்கு அரசியல் தீர்வே அவசியமானது என்ற தமது நிலைப்பாட்டை அவர்கள் வலியுறுத்தினர்.

இலங்கையில் அரசியல் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான தருணம் இதுவே. அத்தகைய நடவடிக்கை தொடர்பாக இணைத் தலைமைகள், இலங்கை அரசு, ஐ.நா. ஆகியவற்றுக்கு அனுசரணை அளிக்க நாம் தயாராக உள்ளோம்.

தாக்குதல் நடத்தாத தற்காலிக கால எல்லை ஒன்றுக்குள் உடன்படுமாறு இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கிளிண்டன் மற்றும் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் மில்லிபாண்ட் ஆகியோர் கோருகின்றனர்.

சிவிலியன் மற்றும் காயமுற்றோர் மோதல் பிரதேசங்களில் இருந்து வெளியேறவும், மனித நேயத் தொண்டு நிறுவனங்கள் அங்கு சென்று வருவதற்கும் இரண்டு தரப்பும் அனுமதி அளிக்கவேண்டும்.

யுத்தம் நடக்கும் வடக்கு இலங்கையில் உள்நாட்டுக்குள் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் சிக்குண்டு இருக்கின்றமை தொடர்பாக டோக்கியோ இணைத் தலைமைகள் (நோர்வே, ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் ஆகியவை) ஆழ்ந்த கவலை தெரிவித்து இன்று (செவ்வாயன்று) வெளியிட்டுள்ள அறிக்கையை நாம் வரவேற்கின்றோம்.

யுத்தத்தில் சிக்கியுள்ள மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் சென்றடைவதை அனுமதிக்கும்படியும் அவசர மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களை மீட்பதற்கு செஞ்சிலுவை சர்வதேசக் குழுவிற்கு ஒத்துழைக்கும் படியும் மருத்துவ மற்றும் தொண்டுப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படியும் இரு தரப்புகளையும் நாமும் வேண்டுகிறோம்.

ஆயுத மோதல்கள் தொடர்பான சர்வதேச சட்டங்களை மதிக்கும்படி இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் கோருகின்றோம் - என்றுள்ளது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கலைஞருக்கு வந்த 'முதுகுவலி'!

இலங்கைத் தமிழர் பிரச்சினையை ஒட்டி தமிழகத்தின் ஆளும் திராவிட முன்னேற்றக் கழகம் நேற்று முன்தினம் கூட்டிய செயற்குழுக் கூட்டத்தின் தீர்மானமும், அங்கு தி.மு.க.தலைவரும் தமிழக முதல்வருமான கலைஞர் கருணாநிதி ஆற்றிய உரையும், அதற்குப் பின்னர் செய்தியாளர்களுக்கு அவர் வழங்கிய பேட்டியும் இலங்கைத் தமிழர் விடயத்தில் கலைஞர் கருணாநிதியினதும், தி.மு.க. தலைமையினதும், அதன் மாநில அரசினதும் முகத்திரையைக் கிழித்து - உண்மைச் சொரூபத்தை அம்பலப்படுத்திவிட்டன என்றே கூறவேண்டும்.

ஈழத் தமிழர்களின் இன்றைய பேரவல நிலையையும் அவர்கள் சிங்களவர்களினால் கொடுமைக்கு உள்ளாக்கப்படும் நிஜத்தையும் கலைஞர் கருணாநிதி இந்தப் பேட்டியில் திரும்பவும் பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருக்கின்றார். தமிழக மக்கள் ஒவ்வொருவரினதும் மன எண்ணத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி நிற்கும் இந்தப் பெரும் கொடூரத்தை மறுக்க - மறைக்க - முடியாது என்பது அவருக்கு நன்கு தெரியும். அதனால் தான் அதை ஒப்புக்கொண்டாரோ தெரியவில்லை.

''இன்று (ஈழத்) தமிழர்கள் - பச்சிளம் குழந்தைகள் கூட - கொல்லப்படுகின்றார்கள். தாய்மார்கள் இழிவாக நடத்தப்படுகின்றார்கள். இந்த நிலையில் தமிழ் நாட்டின் தலைவர்கள் தங்களைக் காப்பாற்றுவார்கள் என்று ஈழத் தமிழர்கள் குரல் கொடுக்கிறார்கள்.'' - எனக் கலைஞரே கூறுகின்றார்.

ஆனால், ஈழத் தமிழரின் அந்த எதிர்பார்ப்பை நிறைவு செய்யாமல் - பதவிக் கதிரையை ஒட்டிப் பிடித்துக் கொண்டிருப்பதில்தான் - 'திண்ணையைக் காலிசெய்ய மாட்டேன்' என அடம் பிடிப்பதில்தான் - உறுதியாக நிற்கின்றார் கலைஞர் கருணாநிதி.

''ஈழத் தமிழர்களின் நலனைப் பாதுகாப்பதற்காகப் பதவியை இழந்து, அரசைத் துறக்கவும் தயார்'' என்று அண்மையில் கூட 'வாய் வீரம்' காட்டிய 'வாய்ப் பேச்சு வீரர்' தான் இந்தக் கலைஞர் என்பதும் மறக்கற்பாலதல்ல.

''இலங்கையில் போரை நிறுத்தச் செய்வதற்கு இந்திய மத்திய அரசு போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறப்படுகின்றதே?'' - என்ற கேள்விக்குப் பதிலளித்த தமிழக முதல்வர் -

''போதுமானதாக இல்லை என்பதுதான் தி.மு.கவின் நிலைமை. ஆனால் போரை நிறுத்தச் செய்யக்கூடிய அதிகாரமும் வலிமையும் மாநில அரசுக்கு இல்லையே'' - எனப் பதிலளித்திருக்கின்றார்.

அவர் கூறுவது போல இலங்கையில் போரை நிறுத்தச் செய்யக்கூடிய அதிகாரமும் வலிமையும் தமிழக மாநில அரசுக்கு நேரடியாக இல்லை என்பது வாஸ்தவம்தான்.

ஆனால் அதனைச் செய்விப்பதற்கான அதிகார வலுவும், ஆளுமைப் பலமும், கட்டளை மிடுக்கும் இந்திய மத்திய அரசுக்கு நிறையவே உண்டு. அந்த வலிமையை இந்திய மத்திய அரசு சரிவரப் பயன்படுத்தவில்லை என்பதுதான் பிரதான குற்றச்சாட்டு. 'மத்திய அரசு போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை' - என்பதை கருணாநிதியே நேரடியாக ஒப்புக்கொண்டமை கூட இந்த அடிப்படையில்தான்.

உண்மையில் இலங்கையில் போரை நிறுத்தச் செய்யும் நேரடி அதிகாரபலம் தமிழக அரசுக்கு இல்லாத போதும் -

அப்படி நிறுத்தச் செய்யும் வலிமை உடைய இந்திய மத்திய அரசை, அத்திசையில் செயற்பட வைக்கும் அதிகாரமும், வலுவும், செல்வாக்கும் கலைஞரின் தி.மு.கவுக்கும், அதன் தமிழக மாநில அரசுக்கும் ரொம்பவே - தாராளமாகவே - நிறையவே - உள்ளன என்பது மறைக்கக்கூடியதேயல்ல.

அவரது தி.மு.கழக எம்.பிக்களின் ஆதரவில்தான் மத்திய அரசு இன்று நிலைத்து நீடிக்கின்றது. மத்திய அரசுக்குத் தான் கொடுத்து வரும் முண்டைத் தி.மு.க. விலக்கிக்கொண்டால், மத்திய அரசு கவிழ வேண்டியதுதான்.

ஆனால், அந்தச் செல்வாக்கை - சாதக நிலையை - ஈழத் தமிழர்களுக்காக இந்திய மத்திய அரசை செயற்பட வைக்கும் விடயத்துக்காக - பயன்படுத்த கலைஞர் விரும்பவில்லை. அப்படி மத்திய அரசை மிரட்டிப் பணிய வைப்பதற்கான 'முதுகெலும்பு' அவருக்கு இல்லை.

அப்படி மத்திய அரசையும், மத்திய அரசின் ஆளும் காங்கிரஸ் கட்சியையும் இதற்காக அச்சுறுத்தப்போய், மத்திய அரசு தமது மாநில அரசின் ஆட்சியில் கைவைத்துக் காலை வாரிவிட்டால் என்ன செய்வது என்ற பயம் - பீதி - அச்சம் கலைஞருக்கு.

அதைத்தான் ஈழத் தமிழர் பிரச்சினையை வைத்து 'அண்ணன் எப்போது சாவான், திண்ணை எப்போது காலியாகும்' எனச் சிலர் எதிர்பார்த்து நப்பாசையுடன் காத்துக் கிடக்கின்றார்கள் என்று கலைஞரே குறிப்பிடுகின்றார்.

ஈழத் தமிழர் நலனுக்காகக் கூடத் திண்ணையை விட்டுக் கொடுக்கும் எண்ணத்தில் கலைஞர் இல்லை என்பதுதான் வெளிப்படை.

தமது முதல்வர் பதவியைக் கூட ஈழத் தமிழருக்காகத் துறக்கத் திராணியற்ற - முதுகெலும்பற்ற - நிலையில் தாம் உள்ளார் என்பதையும், பதவி மீது தமக்குள்ள மோகத்தையும் மேற்படி பேட்டிகளில் வெளிப்படையாகக் கலைஞர் ஒப்புக்கொண்டுவிட்டார் என்பது தெளிவாகின்றது.

முதுகு வலியால் அவஸ்தைப்படும் தாம் மருத்துவமனையில் ஏழு, எட்டு நாட்களாக இருக்கிறார் என்பதையும் இன்னும் ஒருவாரம் இருக்க நேரிடும் என்பதையும் கூட இப்பேட்டியில் அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

'முதுகெலும்பு' இல்லாததால் வந்த முதுகு வலியோ இது.......?!

# சுதந்திர தினத்தையொட்டிய நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றன

யாழ்ப்பாணம், பெப்.5

இலங்கையின் 61ஆவது சுதந்திர தினத்தையொட்டிய நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணத்திலும் பல்வேறு இடங்களில் நடைபெற்றன.

சுதந்திரதினத்தையொட்டி யாழ். குடாநாட்டில் பிரதான வீதியோரங்களில் உள்ள வீடுகள் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகள், தனியார் மினிபஸ்கள், ஓட்டோக்கள் போன்றவற்றில் தேசியக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

இதேவேளை அரச திணைக்களங்களிலும் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டதுடன் வங்கிகளிலும் அவை பறக்கவிடப்பட்டு இருந்தன.




யாழ்.செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சுதந்திரதின நிகழ்வில் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேசியக்கொடி ஏற்றியபோது...

( செய்தி 5 ஆம் பக்கத்தில்)

பிரதான இராணுவ முகாம்கள் அமைந்திருந்த பகுதிகளில் தேசியக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

பொதுவாக வீதிகளில் பொது மக்களின் நடமாட்டங்கள் குறைவாகவும் காணப்பட்டது.

### யாழ்.செயலகத்தில்.....

இதன் பிரதான நிகழ்வு நேற்றுக் காலை யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்றுள்ளது. சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதில் கலந்து கொண்டு தேசியக் கொடியை ஏற்றினார்.

### யாழ்.நகரில்.....

யாழ்.நகரில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள், அரச திணைக்களங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் இராணுவக் காவலரண்கள் என்பனவற்றில் தேசியக் கொடிகள் பரவலாக கட்டப்பட்டிருந்தன.

புத்தக நிலையங்களில் தேசியக் கொடிகள் விற்பனைக்கு வைக்கப் பட்டிருந்தன.

யாழ்.நகரப் பகுதியில் மக்களின் நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டதுடன் வர்த்தக நிலையங்களும் மூடப் பட்டிருந்தன.

போக்குவரத்துச் சேவைகளும் மந்த கதியிலேயே இடம்பெற்றன.

### தென்மராட்சியில்....

இலங்கையின் 61 ஆவது தேசிய சுதந்திரதின நிகழ்வுகள் சாவகச்சேரி நகரின் மத்தியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றன.

சாவகச்சேரி வணிக மன்றத் தலைவர் வீ.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னதாக சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளின் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் விருந்தினர்கள் பஸ் நிலையத்திலிருந்து அழைத்து வரப்பட்டனர்.

தேசியக் கொடியினை தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் ஏற்றி வைத்தார். சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகள் தேசிய கீதம் இசைத்தனர்.

நகரின் சுற்று வட்டத்தில் வணிக மன்றத்தினால் அமைக்கப்பட்ட நிழற்குடையினை வணிக மன்றத் தலைவர் வீ.மகாலிங்கம் திறந்து வைத்தார்.

நிழற்குடைக்குள் அமைக்கப்பட்ட வண்ண விளக்குகளை சாவகச்சேரி நகரசபை ஆணையாளர் திருமதி பொ. ஆறுமுகம் மின் அழுத்தியை அழுத்தி ஆரம்பித்து வைத்தார்.

சாவகச்சேரியின் நகர்ப் பகுதியில் சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் மத்தியில் கிராம சேவையாளர் க.வேலாயுதபிள்ளை சமாதானப் புறாவை பறக்க விட்டார்.

நிகழ்வில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் , சாவகச்சேரி தென் இந்தியத் திருச்சபையின் போதகர் பீ.எச்.வசந்தகுமார் அடிகளார், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதி இணைப்பாளர் ரூ.அலெக்ஸாண்டர் (சாள்ஸ்) உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

### வடமராட்சியில்.....

வடமாரட்சிப் பகுதியில், இலங்கையின் 61 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. வர்த்தக நிலையங்கள் யாவும் சுதந்திரதின விடுமுறையை முன்னிட்டு மூடப்பட்டிருந்தன.

நகர்ப் பகுதிகளில் போக்குவரத்துகள் குறைவாகக் காணப்பட்டது.

(50-203-45-68-6-224-207-9-131-236)

# 'நிஷா'வால் பாதிக்கப்பட்டோருக்கு நெடுந்தீவில் உதவிகள்

நெடுந்தீவு,பெப்.5

நெடுந்தீவில் 'நிஷா' வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் நிவாரண உதவிகள் வழங்கப்படவுள்ளது.

இதற்கென உணவுப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய வீட்டுப் பாவனைப் பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் 'நிஷா' வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று இவை வழங்கப்படவுள்ளதாகவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவு பிரிவுத் தலைவர் எ.அருந்தவசீலன் தெரிவித்தார். (203-111)

# கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கு பிள்ளையான் பொருத்தமானவர் அல்லர்

## நாடாளுமன்ற உறுப்பினர் கருணா தெரிவிப்பு

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கு பிள்ளையான் பொருத்தமானவர் அல்ல என நாடாளுமன்ற உறுப்பினர் கருணா என அழைக்கப்படும் விநாகயமூர்த்தி முரளிதரன் கூறியுள்ளார்.

பிள்ளையானுக்கு தமது பணிகளைச் சரியாக முன்னெடுக்கக் கூடிய திறமை இல்லையென கருணா வேல்ட் ஸ்ரீட்ஜேர்னலுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

திறமையானவர்களே பதவிக்குத் தேவை. பிள்ளையானுக்குத் திறமை இல்லாததால் அவரால் சமாளிக்க முடியாதுள்ளது என கருணா தெரிவித்தார்.

அதே நேரம் கருணா தனது உறுப்பினர்களை இக்கட்டான சூழ்நிலையில் விட்டுச் சென்றதாக பிள்ளையான் அந்த ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியாத வகையில் மத்திய அரசாங்கம் தனது கைகளைக் கட்டிப் போட்டிருப்பதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் கூறினார்.

(50-201)

# கோப்பாய் கோட்டத்தில் சில பாடசாலைகள் முடிவடையும் நேரத்தில் முரண்பாடான நடைமுறை

## பாதிக்கப்படுவதாக ஆசிரியர்கள் முறைப்பாடு

அச்சுவேலி,பெப்.5

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிக்கான பயிற்சிகளை முன்னிட்டு பாடசாலைகள் முடிவடையும் நேரத்தில் முரண்பாடான நடைமுறை பின்பற்றப்படுவதாக ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வருடாந்த விளையாட்டுப் போட்டிக்கான பயிற்சியைக் காரணங்காட்டி கோப்பாய் கோட்டத்தில் உள்ள ஒரு சில பாடசாலைகள் முடிவடைய வேண்டிய நேரம் ஒரு மணி நேரம் வரை பின்தள்ளி பிற்பகல் 3 மணி வரை நடைபெறுவதாக ஆசிரியர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

பாடசாலைகள் முடிவடையும் நேரத்துக்குப் பின்னர் முடிவடையும் பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்கள் தமது பயண வசதியைக் கருத்திற் கொண்டு நடத்தப்படும் பஸ்களைப் பயன்படுத்திப் பயணம் செய்ய முடியாமல் இருப்பதாகவும், பிற்பகல் வேளையில் நீண்ட நேரம் பஸ்ஸிற்காகக் காத்து நிற்க வேண்டியிருப்பதால் போக்குவரத்துச்சபை பஸ் பயணத்துக் குப் பெற்றுக் கொண்ட பருவகாலச் சீட்டுக்களைக் கூடப் பயன்படுத்த முடியாமல் உள்ளதாகவும் கூறுகின்றனர். அத்துடன் தனியார் மினிபஸ்களில் பயணம் செய்ய வேண்டி இருப்பதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி வி.எஸ்.சித்திரவடிவேல் கருத்து தெரிவிக்கையில்:

''பாடசாலைகளில் தொடக்கம் மற்றும் முடிவு நேரங்களில் மாற்றம் செய்யப்படில் உரிய முறையில் முன் அனுமதி பெறப்பட வேண்டும். ஒரு சில அதிபர்களின் தன்னிச்சையான செயற்பாடுகளினால் ஆசிரியர்கள் எதிர்பாராத சிரமங்களுக்கு உள்ளாக வேண்டி ஏற்படுகின்றது. இந்த வகையில் சில பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கும் தயங்குகின்றனர்'' - எனத் தெரிவித்தார். (50-11)

## நாளை

| | |
|---|---|
| தை 24 | 06.02.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | துவாதசி |
| | பி.இ.03.45 வரை |
| நட்சத்திரம்: | மிருகசீரிடம் |
| | காலை 08.17 வரை |
| சுபநேரம்: | 06.35 - 08.05 |
| ராகுகாலம்: | 11.05 - 12.35 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்' என்னும் பொருளில் கருத்தரங்கும் கருத்தாடல் நிகழ்வும் ஞாயிறன்று

கோப்பாய், பெப்.5

நல்லூர் கோவில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள அகில இலங்கை இந்துமா மன்ற மண்டபத்தில் உயர்தர பட்டப்படிப்பு மாணவர்களை மையப்படுத்தி 'பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்' என்ற பொருளில் கருத்தரங்கும் கருத்தாடல் நிகழ்வும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இந்துமாமன்ற உபதலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் 'பெரிய புராணம் தோன்றிய காலச் சூழல்' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும், 'பெரியபுராணம் காட்டும் இளமை' என்ற தலைப்பில் கலாநிதி மனோன்மணி சண்முகதாசஸும் கருத்துரைகளை வழங்குவர்.

தொடர்ந்து இடம்பெறும் கருத்தாடல் நிகழ்வை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் செல்வி த.செல்வஅம்பிகை, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ஆசிரியை திருமதி ஆ.கேதீஸ்வரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ம.பா.மகாலிங்கசிவம், கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை அதிபர் ச.லலீசன் ஆகியோர் வழிப்படுத்துவர்.

பங்கு பற்றுவோருக்கு கையேடுகள் இலவசமாக வழங்கப்படுமெனவும் ஆர்வமுள்ள எவரும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளலாம் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (203-72)

## சேவை நலன் பாராட்டு



பிரதி அதிபர்
செல்வி இராசமலர் இராசதுரை
S.L.T.S -1 ஆரம்பக்கல்வி
விசேட பயிற்சி
யா/அச்சுவேலி புனித தேரேசாள்
மகளிர் கல்லூரி

அர்ப்பணிப்புடனான ஆசிரிய சேவையில் இருந்து 28.01.2009அன்று ஓய்வுபெற்ற இவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவரது ஓய்வுக்காலம் உடல் ஆரோக்கியத்துடனும், மனமகிழ்வுடனும் அமையப் பெற்று, மேலும் இவரது சமூக, சமயப் பணிகள் தொடரவும் எல்லாம் வல்ல நெல்லி ஞானவைரவப் பெருமானின் அருள் ஆசி கிடைக்கவும் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

நெல்லி ஞானவைரவர் ஆலயத்தினரும்,
கலைமகள் சனசமூக நிலைய சமூகத்தினரும்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1060 நீலம்

வெற்றி இலக்கங்கள்

தனுசு

09 33 37 41

03-02-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 400435141 - 400455553

ஜக்பொட் பரிசு ரூபா. 7,444,425/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 221,148 | 20/- | 4,422,960/- |
| 2 இலக்கங்கள் | 20,318 | 40/- | 812,720/- |
| 1 இல. + லக்கினம் | 20,234 | 60/- | 1,214,040/- |
| 2 இல. + லக்கினம் | 1,900 | 200/- | 380,000/- |
| 3 இலக்கங்கள் | 548 | 1000/- | 548,000/- |
| 3 இல. + லக்கினம் | 41 | 10,000/- | 410,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 7,444,425/- | - |
| மொத்தம் | | | 8,387,720/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 264,197 | | 8,887,720/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 7,938,875/-

தொடர் இலக்கம் 500447035 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2009 பெப்ரவரி 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 400448320-3-22 |
| திருகோணமலை | 400446089-6-03 |
| பதுளை | 400445790-6-31 |
| கம்பஹா | 400443810-0-38 |
| மொனராகலை | 400452314-9-46 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## தவறிவிட்டது

LG கைத் தொலைபேசி ஒன்று கொம்பாஸ் பெட்டியுடன் தாவடிக்கும் யாழ்ப்பாணத் திற்கும் இடையில்தவறிவிட்டது. கண்டெ டுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே: 0602216118, 4590319, 0773912198

## தவறிவிட்டது

கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு, சுண்டிக்குளி யாழ்ப்பாணம் எனும் முகவரியுடைய யோசவ் அன்ரனி ஜோய்சுபைஷன் என்பவரின் தே.அ.அட்டை (913301048V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

மந்துவிலூர்
இளைப்பாறிய அதிபர்
அமரர் சுந்தரம் சின்னத்தம்பி
அவர்களின் 6ம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 . 03 . 1914 | 12 . 02 . 2003 |

வெற்றிகள் பல நாம் பெற வித்திட்ட தந்தையே
எம்மை வெற்றிடமாக்கிப் போனாயே தந்தையே..!

திதி : 2009.02.05

தகவல் :
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
28 லோறன்ஸ் றோட்
கொழும்பு -04
தொ-பேசி : 011-2593092
077-7423510

## மரண அறிவித்தல்

### திருமதி அப்புத்துரை சிவபாக்கியம்



ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்புத்துரை சிவபாக்கியம் நேற்று (04.02.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அப்புத்துரையின் அன்பு மனைவியும் சத்தியசீலனின் அன்புத் தாயும், சுகந்தினியின் அன்பு மாமியாரும், சஜித்தா, சரணி, சங்கவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இராசம்மா, துரைராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2009) வியாழக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொக்கணை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

தகவல்:
சத்தியசீலன் (மகன்)

## செய்தி மடல் வெளியீடு

கிராம அபிவிருத்தித் திணைக்கள செய்தி மடல் வெளியீட்டு விழா நாளை பி.ப. 2 மணிக்கு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தி தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராகவும் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (203-111)

## சீருடை தையல் கூலியை அதிகரித்து வழங்கக் கோரிக்கை

அரச திணைக்கள ஊழியர்களுக்கு வழங்கப்படும் சீருடைத் தையல் கூலியை அதிகரித்து வழங்குமாறு ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சீருடைக்கான தையல் கட்டணம் 2001 ஆம் ஆண்டு பொது நிர்வாகச் சுற்றறிக்கைப் பிரகாரம் வழங்கப்படுவதாகவும் தற்போது உடுப்புகளின் தையல் கட்டணம் அதிகரித்த போதிலும் சீருடைத் தையல் கட்டணமாக தற்போதைய தையல் கட்டணத்தின் நான்கிலொரு பங்கு மட்டுமே வழங்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

தற்போதுள்ள தையல் கட்டணப் பிரகாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் உரிய அதிகாரிகளை ஊழியர்கள் கோரியுள்ளனர். (203)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் தாதியக் கல்லூரியில் 2004 'A' பிரிவில் தாதிய மாணவியாக கல்வி பயின்ற
செல்வி தேவராசா கஜேந்தினி
அவர்கள் தாதிய உத்தியோகத்தராக முல்லைத்தீவு உடையார்கட்டு வைத்தியசாலையில் கடமைபுரிந்து கொண்டிருந்த வேளையில் அகால மரணமடைந்துள்ளார். இவரின் பிரிவால் துயருறும் பெற்றோர், உறவினர்கட்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதியக் கல்லூரிச் சமூகம், யாழ்ப்பாணம்.

## கண்ணீர்க் காணிக்கை



கிளிநொச்சி வைத்தியசாலையில் பணிபுரிந்த (தற்பொழுது உடையார்கட்டு ) தாதி உத்தியோகத்தர்
செல்வி கஜேந்தினி தேவராசா
அவர்கள் 02.02.2009 அன்று அகால மரணம் அடைந்ததையிட்டு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் எமது கண்ணீர் அஞ்சலியினையும் காணிக்கையாக்குகின்றோம்.
அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்
2004 'A' பிரிவு தாதிய உத்தியோகத்தர்கள்,
யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் ஸ்ரீ கனகசுந்தரலிங்கம் (சுந்தரம்)
(சுந்தரம் ஸ்ரோர்ஸ் - அப்புத்தளை)



காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும் அப்புத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் ஸ்ரீ கனகசுந்தரலிங்கம் நேற்று (04.02.2009) புதன்கிழமை கொழும்பில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்- இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் அமரர் சோமசுந்தரம் மற்றும் பராசக்தி தம்பதியினரின் அன்பு மருமகனும் யோகாம்பிகையின் அன்புக் கணவரும் செந்தில்குமாரின் (பிரான்ஸ்) அன்புத் தந்தையும் அருளானந்தம் (அப்புத்தளை), இராசேந்திரம் (பிரான்ஸ்), திருநாவுக்கரசு (பிரான்ஸ்), நாகேஸ்வரி (பண்டாரவளை), லோகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவராஜசிங்கம் (அம்பிகா ஸ்ரோர்ஸ், அப்புத்தளை), இந்திராணி (யாழ்ப்பாணம்), நாகேஸ்வரி (யாழ்ப்பாணம்), ஞானாம்பிகை (காரைநகர்), அகிலாண்டேஸ்வரி (கொழும்பு), மகேஸ்வரன் (அம்பிகா ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.09,1/1, உருத்திரா மாவத்தை,
வெள்ளவத்தை. T.P 011 2361561

தகவல்:
சோ.பராசக்தி (மாமி)
இல.307, பலாலி றோட், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

### திருமதி பரமு சிவசுந்தரம் நாகேஸ்வரி



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் தற்போது அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமு சிவசுந்தரம் நாகேஸ்வரி நேற்று (04.02.2009) புதன்கிழமை அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமு சிவசுந்தரத்தின் அன்பு மனைவியும் சந்திரவதனா (கனடா), றோசாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற சுகுனா, வனசா (கொழும்பு, ஜேர்மன் தூதரகம்), நேசதாஸ் (பொறியியலாளர், அமெரிக்கா), விமலாதேவி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அமரர் லோகசுந்தரம் மற்றும் கார்த்திகேசு (இளைப்பாறிய ஆசிரியர்), கதிரவேலு (கொழும்பு), ஆசீர்வாதம் (கணக்காளர், கொழும்பு), சுந்தரலிங்கம் (விரிவுரையாளர், அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுவர்ணா பஞ்சலிங்கம் (சுவிஸ்), கோமதி ரகுபவன் (கனடா), கேமலதா, காண்டீபன் (ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி கிளை முகாமையாளர்), கஜேந்திரன் - தவரூபி, முகுந்தன் - உதயா, தேவா (கொழும்பு), றொகான் - றீங்கிதா (துபாய்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் துவாஸ், மதூஸ், சரன்ராஜ், கிசோக்குமார், பிரியங்கா, டேனுகா, சுதர்சனா, சுபாசினி, சுனேத்திரா, சுபானா, சங்கீதா, சுவேதா, சதுர்த்திகா, ஜிலுக்ஸ்சன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (07.02.2009) சனிக்கிழமை அமெரிக்காவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*242, கச்சாய் வீதி,*
*சாவகச்சேரி.*
T.P.No. *0779154184.*

தகவல்:
இ.காண்டீபன் (பேரன்)
(கிளை முகாமையாளர், சாவ.ப.நோ.கூ.சங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுதந்திரதினத்தை முன்னிட்டு குடாநாட்டுப் பாடசாலைகளின் நூலகங்களுக்குப் புத்தகங்களை வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.இராணுவ மக்கள் தொடர்பகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட யாழ்.நகரப் படைத்தளபதி பிரிகேடியர் ஜே.எவ்.குலதுங்க, மேஜர் எல்.எம்.அனுரசேன, மேஜர் ஜெயகாந், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், பிரிகேடியர் குலதுங்க உரை நிகழ்த்துவதையும் முதல் இரண்டு படங்களில் காணலாம்.

பிரிகேடியர் குலதுங்கவிடமிருந்து நூலகங்களுக்கான புத்தகங்களை முறையே வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி க.பொன்னம்பலம், யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் ஏ.தெய்வேந்திரராஜா, யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம் ம.வி.அதிபர் அருட்சகோதரி எம்.ரி.லடிஸ்லாஸ் ஆகியோர் பெற்றுக்கொள்வதை அடுத்துள்ள நான்கு படங்களிலும் காணலாம்.

(படங்கள்: லக்ஷ்மன்)

# யாழ்.மாணவர்களின் கல்வி, விளையாட்டு வளர்ச்சிக்கு இராணுவத்தினர் போதிய ஒத்துழைப்பை வழங்குவர்

## யாழ்.நகரப் படைத்தளபதி பிரிகேடியர் குலதுங்க

யாழ்ப்பாணம்,பெப்.5

யாழ்.மாவட்ட மாணவர்களின் கல்வி, விளையாட்டுத் துறைகளின் வளர்ச்சிக்கும் இராணுவத்தினராகிய நாம் போதிய ளவு ஒத்துழைப்பை வழங்குவோம். அத்துடன் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தை அனைத்து வசதிகளையும் கொண்ட முதல்தர மைதானமாக மாற்றியமைப்பதற்கும் நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.நகரப் படைத்தளபதி பிரிகேடியர் ஜே.எவ்.குலதுங்க.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் நூலகங்களுக்கும் புத்தகங்களைப் பாடசாலை அதிபர்களிடம் வழங்கும் நிகழ்வு 61ஆவது சுதந்திர தினமான நேற்றுக் காலை யாழ்.இராணுவ மக்கள் தொடர்பகத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே பிரிகேடியர் குலதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள இளம் பிள்ளைகள் நல்லவர்களாகவும் ஒழுக்கம் மிக்கவர்களாவும் உள்ளார்கள் என்பதை அண்மையில் நடைபெற்ற கண்காட்சியின் போது அவதானிக்கக் கூடியதாக இருந்தது. பெற்றோர்கள் பிள்ளைகளை நல்ல முறையில் கவனித்து வருகிறார்கள்.

கல்வி, விளையாட்டுத் துறைகள் உட்பட ஏனைய அபிவிருத்திப் பணிகளுக்குமான செயற்பாடுகளை முன்னெடுத்து மக்களுக்கு உதவுவதுடன் யாழ்.நகரை ஒரு புதிய நகரமாக்கக் கூடியதான திட்டங்களையும் நடைமுறைப்படுத்த நாங்கள் ஆவலாக உள்ளோம். யாழ்.மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தை வசதிகள் கொண்ட முதல்தர மைதானமாக 'கொக்காகோலா' நிறுவனத்தின் உதவியுடன் மாற்றியமைக்கவுள்ளோம். மத்திய கல்லூரியில் அமைக்கப்படும் நீச்சல் தடாகத்தை யூலை, ஒகஸ்ட் மாதங்களுக்கு முன்பாக நிறைவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களை வழங்கவும் முயற்சிகள் எடுக்கப்படும். பாதைகள் மூடப்படுவதாலும் போதிய பஸ்சேவைகள் இன்மையாலும் மாணவர்கள் உரிய நேரத்தில் பாடசாலைக்குச் சமூகமளிக்க முடியாதிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலைகளில் உள்ள தேவைகள், குறைகள் குறித்து தொடர்பு கொள்ளும்போது அதற்கான தேவைகளைக் கவனிப்பதில் அக்கறை காட்டப்படும். அதிபர்கள் கல்வி வளர்ச்சிக்கான தேவைகள் குறித்து எந்தவேளையிலும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம் - என்றார்.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி.செல்வரத்தினம் தெரிவிக்கையில் கல்வி வளர்ச்சிக்காக எடுத்துவரும் அனைத்து நடவடிக்கைகளும் மகிழ்ச்சிக்குரியது. எமது மாணவர்களின் கல்வி, விளையாட்டுத் துறைகளை ஊக்குவிக்கத் தொடர்ந்தும் இராணுவத்தினர் மேற்கொள்ளும் உதவிகள் பயனுள்ளதாக இருக்கும் - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம், யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம், வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, முத்துத்தம்பி வித்தியாசாலை ஆகியவற்றின் அதிபர்கள் தமது பாடசாலைகளுக்கான நூல்களை யாழ்.நகரத் தளபதியிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் மேஜர் எல்.எம்.அனுரசேன, மேஜர் ஜெயகாந் ஆகியோர் கலந்து கொண்டனர். (50-111)

# ஜனாதிபதி மஹிந்தவுக்கு பராக் ஒபாமா வாழ்த்து

கொழும்பு, பெப்.5

இலங்கையின் 61ஆவது சுதந்திர தினத்தை ஒட்டி அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி பராக் ஒபாமா, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பராக் ஒபாமா, ஜனாதிபதி மஹிந்தவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருப்பவை வருமாறு:-

அமெரிக்கா, இலங்கையுடனான உறவை மதிக்கிறது. எதிர்காலத்தில் ஜனநாயகம், சுதந்திரம், பன்முகத்தன்மை போன்ற விடயங்களில் இரு நாடுகளிற்கிடையிலான உறவு மேலும் வலுப்பெறும் என நான் நம்புகிறேன்.

இரு அரசுகளும் இணைந்து இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் சமாதானம், ஸ்திரத்தன்மை போன்றவற்றை ஏற்படுத்த பணியாற்ற முடியும் எனவும் நம்பிக்கை இருக்கிறது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# அடுத்த வருடத்தின் சுதந்திர தினத்தை யாழ்ப்பாணத்தில் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோம்

## யாழ்.செயலக நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் உரை

யாழ்ப்பாணம்,பெப்.5

அடுத்த வருடத்தின் சுதந்திரதினத்தை யாழ்ப்பாணத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களுடன் இணைந்து முழுமையான மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

இவ்வாறு தெரிவித்தார் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாண விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா.

இலங்கையின் 61 ஆவது சுதந்திர தினத்தையொட்டி நேற்றுக்காலை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விசேட வைபவத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கை நாட்டின் 61ஆவது சுதந்திர தினத்தை இன்று நாம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடிக்கொண்டிருப்பது எமக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதுடன் மகிழ்ச்சியைத் தந்தாலும், வன்னியில் எமது மக்கள் புலித் தலைமையின் தான்தோன்றித்தனமான அழியும் [illegible] சொல்லொணாத் து[illegible]வுகளுக்கும் உட்பட்டு வருகின்றனர் என்பதை எண்ணி வேதனையாக இருக்கிறது.

இந்த அழிவு யுத்தத்தில் எமது மக்களாகட்டும், படைத் தரப்பினராகட்டும், புலித்தலைமையால் பலாத்காரமாக யுத்தத்தில் இணைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளாகட்டும், சிறுவர்களாகட்டும் எல்லோரும் இந்த நாட்டின் மக்களே. அவர்கள் பாதிக்கப்பட்டும் உயிரிழப்புகளுக்கு உட்பட்டும் வருகிறார்கள்.

இந்த நிலைமை வெகு விரைவில் மாறும் என்பதில் சந்தேகமில்லை - என்றார்.

இந்த வைபவத்தின்போது, அமைச்சரினால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டதுடன் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வைபவத்தில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி உட்பட் மாவட்ட செயலக அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

# 'டிஜிற்றல் சொலூசன்' நிறுவனத் திறப்பு விழா

ஐ.டீ.எம் கணனி நிறுவனத்தின் 'டிஜிற்றல் சொலூசன்' நிறுவனத் திறப்பு விழா இன்று காலை 9 மணிக்கு இல.114 நாவலர் வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் நிறுவனத் தலைமை நிர்வாகி பி.ஜெயக்குமாரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி கே.தேவராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் சிறாணி மில்ஸ், ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மின் பதில் முகாமையாளர் எஸ்.சிவநாதன், வடமாகாண தொழிலாளர் திணைக்கள உதவி ஆணையாளர் சிவ.முத்து[illegible]மாரசாமி, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் வி. ஞானகாந்தன், ஸ்ரீலங்கா இன்சு[illegible]ஸின் யாழ்.பிராந்திய விற்பனை முகாமையாளர் பி.சத்தியன், எக்ஸ்போ ஏவியேசன் [illegible]றுவன முகாமையாளர் கே. வசீகரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

இந்நிறுவனத்தின் கலைவிழா நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (203-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் பல நோ.கூ.சங்கத்தினரால் சங்கத் தலைவர் ப.கிரிதரனைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சங்க மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் பொது முகாமையாளர் எஸ்.மனோகரன் மற்றும் சங்க ஆளணி முகாமையாளர் செல்வி சிவஜெயந்தி ஆகியோர் திரு திருமதி கிரிதரனுக்கு விருதும் பரிசில்களும் வழங்கிக் கௌரவிப்பதை முதலாவது படத்திலும் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சமாசப் பொது முகாமையாளர் அ.பஞ்சாட்சரம் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்தில் காணலாம்.

(படங்கள்: லக்ஷ்மன், குமார்)

## கிராம அபிவிருத்தித் திணைக்கள செய்தி மடல் வெளியீடு

நல்லூர்,பெப்.5

கிராம அபிவிருத்தித் திணைக்கள செய்திமடல் வெளியீட்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தி தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் பிரதம விருந்தினராகவும் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

செய்தி மடலில் முதல் பிரதியை யாழ். அரச அதிபர் பெற்றுக்கொள்வார். திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திருமதி இ.மோகனேஸ்வரன் ஆய்வுரை நிகழ்த்துவார்.

(203-111)

## உழைப்பு ஒன்றுதான் அனைத்தையும் மாற்றியமைக்கக் கூடியது எனவே அதில் ஒவ்வொருவரும் அக்கறையுடன் இருக்க வேண்டும்

### மீள் எழுச்சித்திட்டப் பணிப்பாளர் சுகததாச சொல்கிறார்

இணுவில்,பெப்.5

உழைப்பு ஒன்றுதான் உங்களையும் உங்கள் குடும்பத்தையும், கிராமத்தையும், நாட்டையும், உலகத்தையும் மாற்றி அமைக்கக்கூடியது. எனவே நாம் ஒவ்வொருவரும் உழைப்பில் மிக அக்கறையுடன் இருத்தல் வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் சமூகத்தைக் கட்டி எழுப்பும் அபிவிருத்தி அமைச்சின் திட்டப் பணிப்பாளர் பி.எச்.சுகததாச.

வலி.கிழக்குப் பிரதேசத்திற்குட்பட்ட உரும்பிராய் கிராமத்தில் சமூகத்தைக் கட்டி எழுப்பும் அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித்திட்ட அலுவலகம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய திட்டப்பணிப்பாளர் பி.எச். சுகததாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 30-40 வருடங்களுக்கு முன்னர் நீங்கள் மிகவும் உன்னதமான நிலையில் வாழ்ந்து வந்தீர்கள்.

இந்த மண்ணில் ஏற்பட்ட நிகழ்வுகள் படிப்படியாக உங்கள் கண்களுக்குப் புலப்படாமல் உங்களை அடக்கி வைத்துள்ளது.

பொருளாதார வாழ்வாதாரங்களை வசதி வாய்ப்புகளை இல்லாது அழித்தொழித்துள்ளது.

உங்கள் தோட்டங்களிலும், தொழில் நிலையங்களிலும் நீண்ட நேரம் தொழில் செய்து உழைத்து உன்னதமாக வாழ்க்கை நடத்திய நீங்கள் இன்று அவற்றை இழந்து மிகச்சிறிய தொகைக்காக - உதவிகளுக்காக உதவி நிறுவனங்களிடம் கையேந்தி நிற்கிறீர்கள். நீங்கள் அப்படி வாழ்ந்து பழக்கப்பட்டவர்களல்லர் என்பது எமக்குத் தெரியும்.

நீங்களும் உங்கள் சந்ததியினரும் இழந்துபோன, அந்த வாழ்வை மீண்டும் பெறவேண்டும். நானோ அரசாங்க அதிபரோ அந்த வாழ்வை உங்களுக்குத் தரமுடியாது. நீங்கள்தான் அதை மீட்டெடுக்க வேண்டும். அதற்காக எங்களாலான உதவிகளைத் தருவதுதான் எங்களது மீள் எழுச்சித்திட்டம்.

#### அனைவரும் உழைக்க வேண்டும்

பாடசாலைகளை விட்டு வெளியேறிய இளைஞர்களை யுவதிகளைப் புதிய உழைப்பாளர்களாக மாற்றவேண்டும். தந்தையும் தாயும் மட்டுமல்ல குடும்பத்திலுள்ள வயது வந்தவர்கள் அனைவரும் உழைக்க வேண்டும்.

உங்களது மாதர்சங்கம், வீசி எறியும் சிரட்டைகளைக் கொண்டு சிறந்த கைவினைப் பொருள்களைச் செய்து முன்மாதிரியாகத் திகழ்கின்றது.

உங்களது கைவினைப் பொருள்கள் உலகத்தரம் வாய்ந்தவை. அவற்றை என்னுடன் எடுத்துச் சென்று நிச்சயம் அவற்றுக்கு நல்ல சந்தை வாய்ப்பைப் பெற்றுத் தருவேன்.

இவ்வாறாக நீங்கள் முன்னெடுக்கும் ஏனைய நடவடிக்கைகளுக்கு எங்களாலான சகல உதவிகளையும் எமது அமைச்சு உங்களுக்கு வழங்கத் தயாராக உள்ளது - என்றார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய மீள் எழுச்சித்திட்ட யாழ். மாவட்ட பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் வி.விஸ்வலிங்கம் தெரிவிக்கையில்:

உரும்பிராய் கிராமத்தின் ஒற்றுமையையும், கூட்டாக உழைக்கும் தன்மையையும், உங்கள் திறமைகளையும், பொருளாதார வளங்களில் பின்தங்கிய நிலையையும் கவனத்தில் கொண்டே இந்தக் கிராமம் மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டது - எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மேற்படி கிராம மாதர் சங்கத்தினால் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட கைவினைப் பொருள்கள் கண்காட்சியில் சிரட்டைகளாலான கைவினைப் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

(203-201-45)

## ஆரியகுளத்தில் படர்ந்துள்ள சல்பீனியா அகற்றப்பட்டது

யாழ்.ஆரியகுளத்தில் படர்ந்து வரைந்திருந்த சல்பீனியா என்ற களைகள் அகற்றப்பட்டுள்ளன. யாழ்.மாநகரசபைச் சுகாதாரப் பகுதியினரால் இந்த கல்பீனியா களைகள் அகற்றும் பணிகள் இடம்பெற்றன. குளத்தில் அடர்ந்து வளர்ந்திருந்த சல்பீனியா வருடந்தோறும் அகற்றப்பட்டு வந்தாலும் இக்களைகள் மீண்டும் படர்ந்து வருவதாகவும் இதனை முழுமையாக அழிக்க முடியாதுள்ளதாகவும் யாழ்.மாநகரசபையினரால் தெரிவிக்கப்பட்டது.

(203-224)


**காணி விற்பனை**

யாழ். மாநகர எல்லைக்குள் யாழ்.பிரதான வீதி, புதிய நீதிமன்றத்திற்கு தெற்குப் பக்கமாக 4 பரப்பு கிணற்று வசதியுடன் கூடிய காணி உடன் விற்பனைக்கு.

தொ.பே:
தொடர்பு 0779522521,
சிறி 0775924843, 0776111419.



IDM DIGITAL Solutions

**DIGITAL Solutions (Pvt) Ltd**
(Member of IDM Group of Companies)

All IT Solutions Under One Umbrella

- ICT Training Solutions
- Hardware Solutions
- Business Solutions
- IT Care Solutions
- Network & Security Solutions

**OPENING CEREMONY**

Date : 05/02/2009
Time : 9.00a.m.
Venue : IDM Digital Solutions (pvt) Ltd.
114, Navalar Road, Jaffna.

**President:**
Mr.B.Jeyakumar
Head Operations
IDM Digital Solutions (pvt) Ltd, Jaffna.

**Chief Guest:**
Mr.K.Thevarajah
(Dean, Faculty of Management Studies
University of Jaffna)

**Special Guest:**
Mrs.Shiranee Mills
Principal - J/Uduvil Girls' College

Mr.S.Sivanathan
Regional Manager - Sri Lanka Telecom, Jaffna

Mr.Siva. Muthukumaraswamy
Zonal Asst.Commissioner
Department of Labour, North.

Mr.V.Gnanakanthan
Principal - J/ Hindu Primary School

Mr.P.Sathian
Branch Sales Manager - Sri Lanka Insurance, Jaffna.

Mr.K.Vaseekaran
Manager
Expo Aviation (pvt) Ltd, Jaffna.

**Thereafter you are cordially invited to our Kalaivizha at the Navalar Hall.**

Head - Operations, Branch Coordinators, Staff, Students
IDM, Jaffna District Branches.


## புதுக்குடியிருப்பிலிருந்தும் மக்கள் இடம்பெயர ஆரம்பம்

கொழும்பு,பெப்.5

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீது கடந்த சில நாள்களாகத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து பொதுமக்கள் அங்கிருந்து வெளியேறி வேறு இடங்களுக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைக்குழு இதனை உறுதி செய்துள்ளது.

புதுக்குடியிருப்பு மருத்துவமனை பாதுகாப்பற்றது எனக் கருதத் தொடங்கியுள்ளதால் அவர்கள் அங்கிருந்து வெளியேறத் தொடங்கிவிட்டனர் என செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் பேச்சாளர் சரசி விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

செஞ்சிலுவைச் சங்கம் பாதுகாப்பு உத்தரவாதங்களை எதிர்பார்க்கிறது என மேலும் குறிப்பிட்டுள்ள அவர், சர்வதேச சட்டங்களின் கீழ் பொதுமக்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

புதுக்குடியிருப்பு மருத்துவமனை ஒருவார காலப்பகுதிக்குள் நான்கு தடவைகளுக்கு மேல் ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளமை [illegible] (அ.சி)


**உபநயன பிரம்மோபதேச அழைப்பு**



அன்புடையீர்,

அரசடி சித்தி விநாயகரின் திருவருளை முன்னிட்டு நிகழும் சர்வ மங்களகரமான சர்வதாரி வருஷம் தை மாதம் 24 ஆம் நாள் (06.02.2009) வெள்ளிக்கிழமை மிருகசீரிட நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 07.06 மணிமுதல் 08.11 மணிவரையுள்ள கும்பலக்கின சுபமுகூர்த்தத்தில்

| மாதகல் | வியாபாரிமூலை |
|---|---|
| கதிர். செல்லப்பாக் குருக்கள் | க.சண்முகரத்தின சர்மா |
| தம்பதிகளினது | தம்பதிகளினது |
| பௌத்திரனும் | பேரனும் |

எமது சிரேஷ்ட குமாரனுமாகிய

சிரஞ்சீவி ம.திவ்விய பிரகாஷ சர்மனுக்கு


அரசடி சித்தி விநாயகர் தேவஸ்தான மண்டபத்தில் சௌயக்ஞோபவீததாரண பிரம்மோபதேசம் செய்து வைப்பதற்கு இறைவன் அருள் கூடியுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்ட மித்திர குடும்ப சமேதராய் சமுகம் தந்து குமாரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

அரசடி பிள்ளையார் கோயிலடி,
மாதகல்.

கதிர் செ.மங்களேஸ்வரக் குருக்கள்
தம்பதிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் நெடுந்தீவு மலேரியா தடுப்பு உத்தியோகத்தர் பி.இராசநாயகம் மங்களவிளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் புதிய மாணவர்கள், விருந்தினர்கள், அதிபர், ஆசிரியர்களுடன் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# சுன்னாகம் பொலிஸாரின் திடீர் நடவடிக்கை; கசிப்பு உற்பத்தியாளர்கள் ஐவர் கைதாகினர்

வலி.வடக்கு,பெப்.5

சுன்னாகம் பொலிஸார் புன்னாலைக் கட்டுவன், பொக்கணை, குப்பிளான் பகுதிகளில் மேற்கொண்ட சுற்றி வளைப்புத் தேடுதலின்போது கசிப்பு உற்பத்தியாளர்கள் ஐவரைக் கைது செய்துள்ளார்கள்.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லுடாவை தலைமையில் சென்ற குழுவினரே இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்தச் சுற்றிவளைப்பின்போது பெருமளவான கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்த தேடுதலின்போது கைது செய்யப்பட்ட ஐவரும் மல்லாகம் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

(203-86)

## கூட்டங்கள்

உடுவில் கல்விக் கோட்ட விளையாட்டுக் குழுவுக்கான கூட்டம் இன்று பி.ப. 12.30 மணியளவில் உடுவில் கல்விக் கோட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

உடுவில் கல்விக்கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. குபேரநாதன் கேட்டுள்ளார். (9)

* * *

வேம்படி மகளிர் உயர்தரப் பாட சாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு பெற்றோர், ஆசிரியர்கள் அனைவரையும் சமுகமளிக்கும்படி சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (201)

# பதவி உயர்வுப் பரீட்சைக்கான பிரத்தியேக வகுப்புகள்

மத்திய- மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் சனி, ஞாயிறு ஆகிய விடுமுறை நாள்களில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்று வந்த முகாமைத்துவ உதவியாளர் சேவையின் பதவியுயர்வுப் பரீட்சைக்கான பிரத்தியேக வகுப்புகள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றவுள்ளது.

கடந்த மாதம் 31 ஆம் திகதி நடைபெறவிருந்த முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிசிறப்புத் தரத்திற்கான பதவியுயர்வுப் பரீட்சை பிற்போடப்பட்டு இருப்பதாலும், இலங்கை நிர்வாக சேவைக்கான பதவியுயர்வுப் பரீட்சை நடைபெறவுள்ளதாலும் மேற்படி பிரத்தியேக வகுப்புகள் தொடர்ந்து நடைபெறவுள்ளன.

இலங்கை நிர்வாக சேவை மற்றும் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி சிறப்புத்தரம் ஆகியவற்றின் பதவியுயர்வுப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரும் மேற்படி வகுப்பில் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (201)

# மூன்று வகையான மக்கள்

*பரந்து விரிந்த இவ்வுலகில், விரிந்த மனித சமுதாயத்தினரிடையே, மூன்று வகையான மக்களை நாம் காண்கிறோம். முதலில் புஷ்டி ஜீவர்கள், அடுத்தது சமஷ்டி ஜீவர்கள், மூன்றாவது பிரவாக ஜீவர்கள்.*

*புஷ்டி ஜீவர்கள், முற்பிறவிகளில் செய்த புண்ணிய செயல்களின் பயனாக, இப்பிறவியில் சடங்குகள், மறைநூல்கள் படித்தல், ஞானியர் தரிசனம், புனிதஸ்தலங்கள் யாத்திரை போன்ற நற்செயல்கள் செய்யாவிடினும், இறைவன் திருவருளை நிரம்பப் பெறுகிறார்கள். முந்தைய பிறவியில் அவர்கள் செய்த புண்ணியத்தின் பயனாக, அவர்கள் இறைவனது கூட்டுறவில் எப்போதும் ஆனந்தமாக இருக்கிறார்கள். இறைவனது நல்லாசிகளை அனுபவித்து ஆனந்த நடனம் செய்கின்றனர். சமையல் முடிந்த பின்னர் விறகுக்கட்டை எவ்வாறு தேவைப்படுவது இல்லையோ, அதுபோல சாதனையின் குறிக்கோளை அவர்கள் அடைந்து விட்டதால், ஆன்மீக சாதனைகள் புரிய வேண்டிய அவசியம் இனி அவர்களுக்கில்லை. இத்தகையவர் ஆன்மீகப் பயிற்சிகள் எதுவும் செய்வதில்லை. ஆனால் அவன் உண்மையான வாழ்க்கையை நடத்தி, பிரம்மானந்தம், நித்யானந்தம், அத்வைத ஆனந்தம், பரமானந்தம் ஆகியவற்றை அனுபவிக்கிறான். அத்தகையவனுக்கு ஆன்மீகத்தேட்டம் எதுவும் தேவையில்லை.*

*இரண்டாவது வகையான சமஷ்டி ஜீவன் மறைநூல்கள் பல படிக்கிறான். பண்டிதன் என்ற பேரும் புகழும் பெறுவதில் மிகவும் தீவிரமாக இருக்கிறான். தனது பாண்டியத்தில் அவனுக்கு கர்வம் இருப்பதால், இறைவன் அருளுக்குப் பாத்திரமாக அவன் எந்த முயற்சியும் எடுப்பதில்லை. வாழ்க்கை முழுவதிலும் படிப்பதிலேயே செலவழித்தால், இலட்சியங்களை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்கான நேரம் அவனுக்கு ஏது? கருத்தரங்குகளில் அவர்கள் பங்கு கொள்ளலாம். சான்றோரையும் சாதுக்களையும் தரிசிக்கலாம். ஆனால் அவர்கள், இறைவனது திருவருள் பெறாது விலகியே இருக்கிறார்கள். காரணம் என்ன? அவர்களுக்கு இறைவனைப் பற்றி நினைக்கவோ, இறைவனைத் தன் இதயத்தில் வைத்துக் கொள்ளவோ நேரமில்லை. சமஷ்டி ஜீவன் என்று கூறப்படும் மக்கள் வகையினர் இவரே.*

*பிரவாக ஜீவர்கள் என்று கூறப்படும் மூன்றாவது வகையினர், உடல் சுகங்களையும், உலகியல் இன்பங்களையும் தேடுகின்ற லௌகீகச் செயல்களிலே எப்போதும் ஈடுபட்டிருப்பர். அவர்கள் இறைவனைப்பற்றி நினைப்பதில்லை; தாம் வேண்டியவையெல்லாம் சாதித்துக் கொள்ளும் வல்லமை பெற்றவர்கள் என்று நினைத்துக் கொள்கிறார்கள். கெட்டவர்கள் துன்பம் நேரும் சூழ்நிலைகளிலாவது இறைவனைப்பற்றி நினைக்கிறார்கள். பிரவான ஜீவனுக்கு தெய்வத் துவத்தை அடைவதற்கான வாய்ப்பே இல்லை. அவர்கள் மறுபடியும் மறுபடியும் பிறக்கிறார்கள். அவர்கள் முக்தியடைவதற்கான வாய்ப்பே இல்லை. சிலருக்கு, நல்[illegible] உணர்ச்சிகள் உள்மறைந்து இருக்கலாம். அவர்க[illegible] ஸத்ஸங்கத்தைச் சேருவதில்லை; நன்னடத்தை[illegible]யைப் பின்பற்றுவதில்லை; தர்மத்தின்படி நடப்பு[illegible] இறைவ[illegible]லை. சிலருக்கு அவர்களது இதயத்தில் [illegible] குடிகொண்டிருப்பதைப் பற்றிய உணர்வு இருக்கலாம்.*



சாயி சிந்தனை

# தையல் பயிற்சி நெறியின் நிறைவுநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.5

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் கோப்பாய்ப் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் நடத்திவந்த தையல் பயிற்சிநெறியின் நிறைவுநாள் நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நீர்வேலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கோப்பாய்ப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸ் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (203)

## வாசகர் திருமுகம்

# கூடிய விலையில் எரிபொருள் விற்கப்பட்டால் அறியத்தரவும்

03.02.2009ஆம் திகதி ''உதயன்'' பத்திரிகையில், வாசகர் தீருமுகம் பகுதியில், சங்கானையைச் சேர்ந்த ஒரு வாகனப் பாவனையாளர், வலி.தென்மேற்கில் இயங்கி வரும் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் ஒரு லீற்றர் பெற்றோல் ரூபா 135 ஆக விற்பனை செய்யப்படுவதாகவும், இந்நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்கும் எவருமில்லையா எனவும் கேட்டிருந்தார்.

மேற்படி செய்தி தொடர்பாக, இன்றுவரை எமக்கு நேரடியாகவோ அல்லது தொலைபேசியூடாகவோ எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை என்பதைத் தெரியப்படுத்துவதுடன், மேற்படி விடயம் தொடர்பாக வலி.தென்மேற்கிலுள்ள சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும், எமது அதிகாரிகளால் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதுடன், அவர்களின் அறிக்கை கிடைக்கப் பெற்றபின் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

மேலும், சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும், பாவனையாளர் முறைப்பாட்டுப் புத்தகம் வைக்கப்பட்டுள்ளதால், பாவனையாளர்கள் தமது முறைப்பாடுகளை அப்புத்தகத்தில் பதியுமாறும் அல்லது நேரடியாகவோ அல்லது 021 222 2033 என்ற இலக்கத் தொலைபேசியூடாகவோ எமக்கு அறியத்தருமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

**பிராந்திய முகாமையாளர் (வடக்கு),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**யாழ்ப்பாணம்.** **வி.சண்முகநாதன்.**

# கல்வி அதிகாரிகள் கவனிப்பார்களா?

கனகசபை வித்தியாலயம் என்ற பெயரில் இளவாலை சிறுவிளானில் முள்ளானை என்னும் கிராமத்தில் ஒரு கல்விச்சாலை உண்டு. இப் பாடசாலை ஒரு சைவப் பாடசாலையாகும். கனகசபை என்பவரால் உருவாக்கப்பட்டது. இப்பாடசாலையில் தலைமை வாத்தியார் தவிர 3 ஆசிரியர்களும் ஒரு தொண்டர் ஆசிரியரும் உள்ளதாக அறிகின்றோம். இருந்த போதிலும் பிள்ளைகளின் எண்ணிக்கை 10இற்கும் குறைவாகவே உள்ளது. போதிய இடவசதி, தளபாடவசதி, ஆசிரியர்வசதி இருந்த போதிலும் இப் பாடசாலையில் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளமையால் அரசாங்க வளங்கள் வீணடிக்கப்படுகின்றது போல் தெரிகிறது.

வளங்கள் யாவும் சிறந்த முறையில் பயன்படுத்தப்பட கல்விப் பணிப்பாளரும் ஏனைய அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

**இளவாலை.** **ம.திருச்செல்வம்.**

# உணவுப் பொருள்கள் விலை குறைந்தாலும் தின்பண்டங்களின் விலை குறையவில்லையே

அண்மைக் காலங்களில் பல உணவுப் பொருள்களின் விலைகளில் மாற்றம் கண்டு வருகின்றது. குறிப்பாக சீனி, மாவு, தேங்காய் எண்ணெய், அரிசி, உழுத்தம் பருப்பு, தேங்காய், செத்தல் மிளகாய் என்றெல்லாப் பொருள்களின் விலைகளில் சரிவுகள்ஏற்பட்ட வண்ணமுள்ளன.

பொருள்களின் விலைகள் எதிர்பாராத அளவுக்கு குறைந்ததுள்ள போதிலும் உணவகங்களில் இன்னும் பலகார வகைகள் மற்றும் உணவுகளின் விலைகளில் மாற்றம் ஏற்பட்வேயில்லை. உணவுப் பண்டங்களின் விலைகளைக் குறைக்கும்படி யாழ்.அரசாங்க அதிபர் அவர்கள் அறிவித்தல் விடுத்துள்ள போதிலும் இன்று வரை உணவுப் பண்டங்களின் விலைகளில் துளியேனும் மாற்றமேற்படவில்லை.

ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெய் 300 ரூபாவிற்கு மேல் விற்கப்பட்ட போதும் ஒரு கிலோ மாவு 90 ரூபாவுக்கு மேலும் ஒரு தேங்காய் 80 ரூபாவுக்கு மேலும் விற்கப்பட்டிருந்த காலத்தில் என்ன விலைகளில் விற்பனை செய்தனவோ அதே விலைகளுக்குத்தான் இப்போதும் விற்கப்படுகின்றன.

உணவுச்சாலைகள் என்பது பசித்துப் பசிக் க[illegible]ளையுடன் வருபவர்களுக்கு உணவளிக்கும் உன்னதமான பணிக்குரிய நி[illegible]றுவனமாகும். உணவுப் பொருள்களின் விலைகள், எரிபொருள்களின் வி[illegible]லைகள் என்பன உயரும்போது தாங்களும் விலைகளைக் கூட்டத்துடிக்கு[illegible] வர்த்தகர்கள் குறைவடையும் போது குறைக்கத் தயங்குவதேன்?

[illegible]மாவின் விலை குறைந்தமையால் பாண், பணிஸ், பிஸ்கட்வகைகளின் விலைகள் பெருமளவு குறைந்துள்ளன. பாணின் விலையில் மாற்றம் வரலாமென்றால் இடியப்பம், பிட்டு, தோசை, வடை, அப்பம் என்பன பழைய விலைகளிலேயே விற்கப்படுகின்றன. அதேபோல்தான் தேநீரின் விலையும்.

இந்த வகையான செயற்பாடுகளைத் தட்டிக் கேட்க அதிகாரிகள் இல்லையா? விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் இப்போது யாழ்ப்பாணத்தில் சேவையாற்றுகின்றனர். அவர்கள் தங்களின் பணிகளை செய்யாமல் இருப்பது ஏன்?

**[illegible]** **ம.உதயகுமார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. வங்கி - ..........................................

52. தபால் நிலையம் - ..........................................

53. மருந்தகம் - ..........................................

54. அச்சகம் - ..........................................

* பின்வரும் பழமொழிகளில் விடுபட்டுள்ள இடங்களை உரிய சொற்களைக் கொண்டு நிரப்புக.


55. தொட்டில் ............................ சுடுகாடு வரைக்கும்.


56. ............................ காலை விடாதே.


57. ஸ்ரீலங்கா தேசிய கீதத்தில் முதல் இரண்டு வரிகளும் தரப்பட்டுள்ளன. அதைத்தொடர்ந்து வரக்கூடிய இரு வரிகளையும் எழுத்துப்பிழையின்றி எழுதுக.


ஸ்ரீலங்கா தாயே நம் ஸ்ரீலங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
..........................................
..........................................


* பின்வரும் பின்னங்களை அதற்குச் சமமாக நிழற்றப்பட்ட உருக்களுடன் சரியான முறையில் தொடர்புபடுத்துக.

58. 3/7 

59. 3/4 

60. 7/10 

61. 5/6 

62. 3/8 

63. இலங்கை மக்களால் விளையாடப்படக்கூடிய கிராமிய விளையாட்டுக்கள் இரண்டைப் பெயரிடுக. _ _ _ _ _ _ _ _ _ _

64. மருந்து மூலிகைகளாகப் பயன்படும் வித்துவகை இரண்டின் பெயர்களை எழுதுக.
_ _ _ _ _ _ _ _ _ _ _

* பின்வரும் விலங்குகளைக் கொண்டு 65 - 70 வரை தரப்பட்டுள்ள விவரங்களுக்கேற்ப விலங்குகளைத் தெரிவுசெய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக. ( முள்ளம்பன்றி, ஆமை, துருவக்கரடி, குதிரை, மண்புழு, எறும்பு )

65. பனிப்பிரதேசங்களில் வாழும் மீன் இதன் பிரதான உணவாகும்.
..........................................

66. எதிரிகளைக்கண்டால் இது தன் உடலிலுள்ள முட்களைச் சிலிர்த்துக்கொண்டு வரும்.
..........................................

67. சுறுசுறுப்பை நாம் இதனிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.
..........................................

68. நின்றுகொண்டே உறங்கும் அதிவேகமாக ஓடும்.
..........................................

69. கடினமான ஓடு ஒன்றை முதுகில் சுமந்தபடி நகரும்.
..........................................

70. கமத்தொழிலுக்கு உதவி புரிவதால் விவசாயியின் நண்பன் ஆகும்.
..........................................

* பின்வரும் வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

71. நான் நண்பனுடன் பட்டம் விட்டு விளையாடினேன்.
..........................................

72. வேகமாகக் காற்று அடித்ததில் முற்றத்திலிருந்த மரம் வேரோடு விழுந்தது.
..........................................

73. ''நான் ஒரு தேனீ ஆனால் ..... '' எனும் தலைப்பில் 6 வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் 4 சொற்களுக்குக் குறையாமல் அமைந்திருப்பதோடு எழுவாய் பயனிலைகள் திருத்தமாக அமையவேண்டும்.

ஆக்கம்:-புன்னியாமீன் &
மஸீதா புன்னியாமீன்,
கண்டி.

கல்விச்சுடர் தொடர்பான விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்க.
011-2399666 (125/3) / 071-6850005 /

**கடந்த 29.01.2009 இல் வெளிவந்த பகுதி 1 இன் விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 - 2 | 02 - 2 | 03 - 3 | 04 - 1 | 05 - 2 | 06 - 1 | 07 - 3 | 08 - 2 |
| 09 - 1 | 10 - 3 | | | | | | |
| 11 - 2 | 12 - 3 | 13 - 3 | 14 - 4 | 15 - 3 | 16 - 2 | 17 - 2 | 18 - 2 |
| 19 - 2 | 20 - 2 | | | | | | |
| 21 - 1 | 22 - 3 | 23 - 3 | 24 - 1 | 25 - 2 | 26 - 1 | 27 - 3 | 28 - 2 |

## அன்பு மாணவர்களே!

வினாக்கள் தொடர்பான சந்தேகங்களுக்கு நேரடியாக உரிய ஆசிரியரிடம் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு சந்தேகங்களைத் தெளிவுபடுத்துவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

* கல்விச்சுடர் தொடர்பான முறைப்பாடுகளுக்கும் விமர்சனக்களுக்கும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும் 0714273035, 0716850005.



அச்சுவேலி, இடைக்காடு மகாவித்தியாலயத்தில் கற்கும் மாணவர்களுக்கு கரித்தாஸ்-கியூடெக் நிறுவனம் கற்றல் உபகரணங்களை வழங்கியது.
அதிபர், ஆசிரியையுடன் உதவி பெற்ற மாணவர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்.
(படம்: த.பரமலிங்கம்)



சாந்திகம் சிறுவர் பாதுகாப்பு இலங்கை நிறுவனம் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது.
நிறுவனப் பிரதிநித ஒருவர் மாணவிக்கு உபகரணங்கள் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.
(படம்: கர்ணன்)



உடுவில் மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற பரிசில் வழங்கும் நிகழ்வில் அதிபர் ஷிரானி மில்ஷிடமிருந்து மாணவி சி.கஜன்சிகா பரிசில் பெறுகிறார்.



வல்வை சிவகுரு வித்தியாசாலையின் ... விழாவில் எடுக்கப்பட்ட படம்.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்... ஆங்கில ஆசிரிய ஆலோசகர் செ.பரராஜசேகரம், சிறப்பு விருந்தினர் ம.வெங்கடாசலபிள்ளை, அதிபர் ...தன், பிரதி அதிபர் திருநாவுக்கரசு, பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.தர்மகுலசிங்கம் ஆசிரியோருடன் முகமாக மாணவர்கள் பரிசுப் பொருள்களுடன் காட்சி தருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் - 05 மாணவர்களுக்கான
# தயார்படுத்தல் பரீட்சைத் தொடர் – 2009
**வினாத்தாள் - II** **நேரம் : 75நிமிடங்கள்**

சகல வினாக்களுக்கும் விடையளிக்குக.

* இல. 01 - 07 வரையிலான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் உரைப்பகுதியை வாசிக்குக.

நீங்கள் மேலே பாய்ந்தால் கீழே விழுவீர்கள். அது ஏன் தெரியுமா? புவியீர்ப்பு விசை தான் அதற்குக் காரணம். புவியினால் உண்டாக்கப்படும் ஈர்ப்பு விசையினாலேயே நாம் கீழ்நோக்கி இழுக்கப்படுகிறோம். புவி தன்னைத்தானே சுற்றுகின்றபோதும் நாம் புவியில் விழாமல் நடப்பதற்கு புவியீர்ப்பு விசையே துணைபுரிகின்றது. புவியிலிருந்து ஒரு குறிப்பிட்ட உயரத்துக்கு மேலே புவியீர்ப்பு விசை தொழிற்படுவதில்லை. மேலே கூறப்பட்டுள்ள விவரணத்தின் படி பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடைப்புக்குள் எழுதுக.

01. நாம் விழாமல் நடப்பதற்கு புவியீர்ப்பு அவசியம்.
(..............)
02. வானவெளியில் புவியீர்ப்பு விசை தொழிற்படுவதில்லை.
(..............)
03. புவியீர்ப்பு விசை என்பது சூரியனால் உண்டாக்கப்படுகிறது.
(..............)
04. புவியீர்ப்பு விசை இல்லை எனில், நாம் புவியில் நடக்க முடியாது.
(..............)
05. புவியிலிருந்து ஒரு குறித்த உயரத்தில் இருக்கும் பொருள் மீது புவியீர்ப்பு விசை தாக்கும்.
(..............)
06. புவி என்பதற்கு இரு ஒத்தகருத்துச்சொற்கள் எழுதுக.
— — — —   — — — —
07. ''விழுவீர்கள்'' எனும் சொல்லுக்கான எதிர்க்கருத்தை எழுதுக.
(..............)

* பின்வரும் வினாக்களில் மிகச்சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

08. பச்சையாக உண்ணக்கூடிய ஒரு மரக்கறி எது?
1) பூசணிக்காய். 2)வெண்டிக்காய். 3)வெள்ளரிக்காய். 4) கத்தரிக்காய்.

09. மிக விரைவில் பழுதடையக்கூடிய ஓர் உணவுப்பொருள்,
1) சீனிச்சம்பல் .2)பாற்சோறு. 3)அச்சாறு. 4) ஊறுகாய்.

10. பாடசாலையொன்றில் நடைபெறும் வைபவமொன்று அல்லாதது,
1) பரிசளிப்பு விழா. 2) கலை விழா. 3)விளையாட்டு. 4) திருமண விழா.

11. இலங்கையின் மிக உயர்ந்த நீர்வீழ்ச்சியாக இருப்பது,
1) பம்பரகந்த. 2)துன்கிந்த. 3)தியலும. 4) விக்டோரியா.

12. கடலில் வள்ளமொன்றைச் செலுத்துவதற்குத் தேவையான உபகரணம்,
1) சுக்கான். 2)கைப்பிடி. 3)துடுப்பு. 4) மிதி.

13. அதிகமான மக்களையும் பொருட்களையும் ஒரே நேரத்தில் ஏற்றிச்செல்வதற்குப் பொருத்தமான தரைவழிப் போக்குவரத்துச் சாதனம்,
1) பேரூந்து. 2)தொடரூந்து. 3) வானூர்தி. 4) பாரவூர்தி.

14. ஒருவர் இலகுவாய் நிற்றல் என்பது,
1) கைகளை நேராக வைத்து கால்களைச் சேர்த்து வைத்தலாகும்.
2) கைகளைப் பின்னால் கட்டி கால்களைச் சேர்த்து வைத்தலாகும்.
3) கைகளைப் பின்னால் கட்டி கால்களைச்சற்று அகட்டி வைத்தலாகும்.
4) கைகளை நேராக வைத்து கால்களைச்சற்று அகட்டி வைத்தலாகும்.

15. இடி இடிக்கும் சந்தர்ப்பத்தில் காணக்கூடிய காட்சியொன்று அல்லாதது,
1) வானம் கருநிறமாக இருத்தல். 2) வெண்மேகங்கள் வானில் பரவியிருத்தல்.
3) மின்னல் ஒளி பளிச்சிடுதல். 4) இலேசான மழைத்தூறல்.

16. தேசியக்கொடியில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறம்,
1) பச்சை. 2)செம்மஞ்சள். 3) மஞ்சள். 4) சிவப்பு.

17. இலங்கையில் புராதன சுவரோவியங்களுக்குப் பிரசித்தி பெற்றுள்ள இடம்,
1) சிவனொளிபாதமலை. 2)சிகிரியா. 3)அநுராதபுரம். 4) தம்புள்ளை.

18. தாவரங்களில் பூவொன்று காயாவதற்கு உதவி செய்யும் காரணி ஒன்று அல்லாதது,
1) சூரியஒளி. 2) காற்று. 3) நீர். 4) விலங்குகள்.

19. பலகையொன்றை மட்டப்படுத்துவதற்கு உதவும் உபகரணம் பின்வருவனவற்றுள் எது?
1) அடிமட்டம். 2)மூலைவிட்டம். 3) மட்டப்பலகை. 4) சீவுளி.

20. நீலநிற ஊடுகாட்டும் தாளினூடாக மஞ்சள் நிறமான ஒரு பொருளைப் பார்க்கும்போது தென்படும் நிறம் எது?
1) நீலம். 2)மஞ்சள். 3)வெள்ளை. 4) பச்சை.

21. விளையாட்டு மைதானமொன்றில் நடைபெறக்கூடிய விபத்து ஒன்று,
1) நீரில் மூழ்குதல். 2)மின்னல் தாக்குதல். 3)எலும்பு முறிவு. 4)தெரு விபத்து.

22. இலைகளில் சித்திர வடிவப் பிளவுகள் கொண்ட தாவர வகை எது?
1) மா. 2) பலா. 3) வாழை. 4 )பப்பாசி.

23. மண்ணெண்ணெய் சிறிதளவுடன் நீரைச்சேர்க்கும்போது காணக்கூடிய மாற்றம்,
1) நீரும் மண்எண்ணெயும் நன்கு கலக்கும்.
2) நிறமாற்றம் ஏற்படும்.
3) நீரில் மண்எண்ணெய்த் துளிகள் மிதக்கும்.
4) மண்எண்ணெயில் நீர்த்துளிகள் மிதக்கும்.

24. மனிதனுக்கு நன்மை செய்யக்கூடிய ஒரு பூச்சி இனம்,
1) வண்டு. 2) வெட்டுக்கிளி. 3) கறையான். 4) தேனீ.

25. உலர்வலயப் பிரதேசமொன்றில் பயிரிடக்கூடிய தானியவகை,
1) இறுங்கு. 2) நெல். 3) பயறு. 4) கௌபி

* கட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ள சொற்களைக்கொண்டு கருத்துள்ள 4 வாக்கியங்களை எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது 4 சொற்களேனும் இருக்கவேண்டும். ஒரு வாக்கியத்தில் இடம்பெற்ற சொல் இன்னுமொரு வாக்கியத்தில் இடம்பெறக்கூடாது)

| | | | | |
|---|---|---|---|---|
| ஆசிரியை | சென்றோம் | விமானம் | அறிவுரை | செய்தார் |
| வேண்டும் | எச்சரிக்கை | நாங்கள் | ஏழைகள் | பார்க்க |
| நூதனசாலை | எமக்கு | செய்தது | ஆகாயவிமானம் | |
| மேகத்தினூடு | ஆதரித்த | கூறினார் | பயணம் | பெரியோர் |

26. ......................................................................

27. ......................................................................

28. ......................................................................

29. ......................................................................

* பின்வரும் உருக்களிலுள்ள பொருட்களின் தமிழ்ப்பெயரை எழுதுக.

30. 
31. 
32. 
33. 

— — — —   — — — — —   — — — — —   — — — — —

* எனது தாயார் பூங்கன்றுகளை வாங்கி விற்பனை செய்வதைப் பகுதிநேரத் தொழிலாகக் கொண்டுள்ளார். கடந்தவாரம் அவர் பூங்கன்று விற்பனை நிலையத்திற்குச்சென்று வாங்கி வந்த பூங்கன்றுகளின் விலைப்பட்டியல் வருமாறு:-

| பூங்கன்றின் விலை | வாங்கிய தொகை | ஒன்றின் விலை | மொத்த விலை |
|---|---|---|---|
| ரோசா சிவப்பு | 12 | ரூபா 25.00 | ரூபா ......... |
| அந்தூரியம் | 20 | ரூபா 18.00 | ரூபா ......... |
| போகன்விலா | ........ | ரூபா 8.00 | ரூபா 80.00 |
| ரோசா மஞ்சள் | 5 | ரூபா ........ | ரூபா 200.0 |

34. சிவப்பு ரோசா கன்றுகளை வாங்குவதற்கு எவ்வளவு செலவானது?
ரூபா ......................

35. அந்தூரியம் 20 கன்றுகளினதும் விலை என்ன?
ரூபா ......................

36. எத்தனை போகன்விலாக் கன்றுகள் வாங்கப்பட்டன?
— — — —

37. மஞ்சள் ரோசாப்பூக்கன்று ஒன்றின் விலை என்ன?
ரூபா ......................

38. அம்மா மொத்தமாக எத்தனை பூங்கன்றுகளை வாங்கியுள்ளார்?

39. எல்லாப் பூங்கன்றுகளுக்குமாக அம்மா கொடுத்த மொத்தப்பணம் எவ்வளவு?
ரூபா ......................

40. கடந்தவாரம் 7 அந்தூரியம் கன்றுகளை ஒன்று ரூபா 22.00 படி அம்மா விற்பனை செய்தார் எனின், அம்மாவுக்குக் கிடைத்த பணம் எவ்வளவு?
ரூபா ......................

41. பின்வரும் வாக்கியங்களில் கட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ள இடத்தில் உரிய நிறுத்தற்குறிகளை எழுதுக.
அன்புள்ள அண்ணா ☐ அடுத்த மாதத்தில் உங்களால் வீட்டுக்கு வரமுடியுமா ☐

* பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க்கருத்தை எழுதுக.

42. தே பொ(b)ன்ன - ......................................
43. புட்டுவ - ......................................

* பின்வரும் தமிழ்ச்சொற்களின் சிங்கள வடிவத்தைத் தமிழ்ச்சொற்களைக்கொண்டு எழுதுக.

44. சீப்பு - ......................................
45. எலி - ......................................

* பின்வரும் ஆங்கிலச்சொற்களின் தமிழ்க்கருத்தை எழுதுக.

46. Door - ......................................
47. Picture - ......................................

* பின்வரும் தமிழ்ச்சொற்களின் கருத்தை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

48. குழந்தை - ......................................
49. காகம் - ......................................

* பின்வரும் நிறுவனங்களிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்கள் ஒவ்வொன்று வீதம் எழுதுக.

50. நூல் நிலையம் -

## அன்பு மாணவர்களே!

இப்பகுதியில் வெளியாகியுள்ள வினாத்தாள் - 11 இற்கான விடைக்குறிப்புகளுடன் வினாத்தாள் - 12 எதிர்வரும் வியாழக்கிழமை பிரசுரமாகும். இப்பகுதியில் தொடர்ச்சியாக வெளிவரும் வினாத்தாள்களை நேரங்கணித்துப் பயிற்சிசெய்து இவ் வருடம் நடைபெறவுள்ள அரசாங்கப் பரீட்சைக்கு இன்றே தயாராகுங்கள். உங்கள் விடைகளை ஆசிரியரின் விடைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்க மறவாதீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மொழியாம் தமிழுக்கு அணிசேர்த்த முத்தமிழ் விழா

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவச்செய்து செம்மொழியாம் தமிழ்மொழிக்கு முத்தமிழில் அணி செய்து செப்பமுறப் பணி செய்யும் முத்தமிழ் விழா ஒன்று இணுவில் மத்திய கல்லூரி மடி மீது நிகழ்ந்தது.

ஈராண்டுகள் முயன்று இருநாள் விழா எடுத்தார். முதல்நாள் விழாக்கண்டு முகம் மலர்ந்தார் தமிழ் சுவைத்தோர்.

கடந்த இரண்டு நாள்களாய் களைகட்டி இருந்த மத்திய கல்லூரிச் சூழல் 24.01.2009 காலை புதுக்கோலம் பூண்டது. மாவிலை, தோரணம், மாலைகள் ஆட வாசலில் மாணவர் வந்தனம் கூற பாதையில் பதாகைகள் தமிழ் மணம் தீண்ட மாணவர் தூரிகை தீட்டிய சித்திரம் மானுடம் வென்ற தாய் மனதினுள் துளிர்க்க ஔவை அரங்கிற்கு அணைத்தது அனைவரையும்.

உரிய நேரத்தில் பிரதம விருந்தினர் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராசா அவர்களும் சிறப்பு விருந்தினர்களான உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் தேசிய சேமிப்பு வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் ந.பகீரதன் ஆகியோர் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பிரமுகர்களால் புடைசூழ மாலை சூட்டி விழாக்காணும் ஔவை அரங்கிற்கு அழைத்து வரப்பட்டனர்.

பிரதம விருந்தினர் மங்கல விளக்கேற்றி வைக்க தேவாரம் ஓதி, அதிபர் கொடி ஏற்றிவைக்க கல்லூரிக்கீதம், தமிழ்த்தாய் வாழ்த்து என்பன இசைக்க முத்தமிழ் விழா ஆரம்பமானது.

ஆசியுரை கூறிய செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தமிழ் விழாக்கள் அருகிப் போன இன்றைய நாள்களில் முத்தமிழ் வளர்த்த இணுவை மண்ணில் முத்தமிழ் விழா முன்னெடுக்கப்படுவது பாராட்டத்தக்கதென் றார். மேலும் தமிழ் வளர்த்த இணுவையூர் பெரியார்கள் பலரைப் பட்டியலிட்ட அவர் மகாவித்துவான் வீரமணி ஐயர் பற்றிக் குறிப்பாக எடுத்துக்கூறி நினைவு கூர்ந்தார்.

அடுத்து அதிபர் தமது தலைமையுரையில் மாணவர்களைக் கலை இலக்கியத் துறையில் வழிநடத்திச் செல்வதற்குப் பாடசாலைச் சமூகத்துடன் பெற்றோர்களும் ஒத்துழைக்க வேண்டும். கலைத்துறை, விளையாட்டுத்துறை போன்றவற்றில் பங்களிப்புச் செய்யும் மாணவர்கள் தங்கள் ஆளுமையை விருத்தி செய்து பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகளைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய நிகழ்வுகளில் பங்கேற்கும் மாணவர்களே அதற்கு நல்ல உதாரணமாவார்கள் என்று கூறினார்.

தொடர்ந்து இன்றைய நிகழ்வுகள் இணையத்தளம் மூலமாக உலகின் திசைகள் யாவற்றுக்கும் எடுத்துச்செல்லப்படவேண்டும் என்று சிறப்பு விருந்தினர் பகீரதன் வேண்டுகோள் விடும் அளவுக்கு இயல், இசை நிகழ்வுகள் சிறப்பாக அமைந்திருந்தன.

குறிப்பாக ஆசிரியர் மகாலிங்கசிவம் தலைமையில் நடைபெற்ற நகைச்சுவை நயம் தோய்ந்த சிந்தனையைத் தொட்டுத் தூண்டி நின்ற ''மனிதனை மனிதனாக வாழவைப்பது சட்டமா? சமயமா?'' என்ற பட்டிமன்றம் மாணவர்களின் திறனை வெளிக்காட்டி பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. அடுத்து சிறப்பு விருந்தினர் உரையில் - செ.குபேரநாதன் -

சிறந்த துல்லியமான தலைமைத்துவ வழிகாட்டல் செய்துவரும் அதிபர், ஆசிரியர்களின் பங்களிப்பால் மணவர்கள் பட்டை தீட்டப்பட்டு மிளிர்கின்றார்கள். அதனால் தமது கோட்டக்கல்வி அலுவலகம் மாகாண மட்டத்தில் தலைநிமிர்ந்து நிற்கிறது - என்று கூறினார்.

தொடர்ந்து கல்லூரியின் இசை நாடக வளர்ச்சித் துறைக்கு அரும்பணி ஆற்றிவரும் பலரும் இசை நாடகத்துறையில் கல்லூரி மாகாண மட்டத்தில் முதன்மை பெற்றுத் தேசிய மட்டம் வரை சென்றுவர உழைத்தவரும் கலையரசு சொர்ணலிங்கத்தின் வாரிசும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவருமாகிய நாடக நற்குருசில் சு.மனோகரன் இசை நாடகத்துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராசா அவர்களால் ''கூத்திசைக்கோ'' என்னும் பட்டம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டார். மாணவர்கள் மாலை சூட்டி மரியாதை தெரிவிக்க பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வாழ்த்துப்பா இசைத்து கூத்திசைக்கோவைப் பாராட்டினார்கள்.

தொடர்ந்து பேராசிரியர் சிவலிங்கராசா தமது பிரதம விருந்தினர் உரையில் இணுவில் பிரதேசத்தின் தமிழ், சமயம், கலை போன்றவற்றின் பாரம்பரியங்களை நினைவுபடுத்தினார். மேலும் நாங்கள் மலருகள் இல்லை நல்ல மரபுகளை உற்பத்தி செய்திருக்கிறோம். அந்தவகையில் இந்தப் பாடசாலை மாணவர்களுக்கு நல்ல அத்திவாரங்களைப் போட்டிருக்கிறது. இசையும், கலையும், நாடகமும் நல்ல புரிதலைத் தரவல்லவை. இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் கல்வியை, மொழியை, கலாசாரத்தை, பண்பாட்டை பாதாளத்தில் தள்ளுகிறது. இணுவில் பிரதேசமும் இந்தப் பாடசாலையும் அதைத் தடுத்துநிறுத்தி எமது கலைப் பாரம்பரியத்தைத் தூக்கி நிறுத்துகிறது - என்றார்.

இறுதியாக ''கூத்திசைக்கோ''வின் நெறியாள்கையில் ஔவையார் இசை நாடகம் மாணவர்களால் சிறப்புற மேடையேற்றப்பட்டது. மாலை 4.30 மணிக்கு முதல்நாள் நிகழ்வு முற்றுப்பெற்றது.

ரசிகன்


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு: 05.05.1951

உதிர்வு: 06.01.2009



செல்வி பரமேஸ்வரி செல்லையா

கடந்த 06.01.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (05.02.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

அந்நிகழ்விற்கு வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'செல்வபதி', கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

அமரர்

# நாகலிங்கம் கந்தசாமி



தோற்றம்: 17.01.1956

மறைவு: 06.01.2009

அன்பின் திருவுருவே!
எம் குடும்பத்தின் குலவிளக்கே!!
இன்றுடன் முப்பத்தொரு நாள்கள் இது மாதமுடிவல்ல
உங்கள் மானுட வாழ்வு முடிந்துவிட்ட நாள்கள்
நினைக்கக் கூட முடியவில்லை...
நீங்காத உங்கள் நினைவலைகள்
நிழலாகத் தொடருதையா...
தான் உருகி மெழுகுவர்த்தி ஒளி கொடுக்கும்
நீர் உருகி ஒளிகொடுத்தீர் எம் வாழ்வு சிறந்திடவே
கடமையிலே கண்ணெனவே ஒளிர்ந்தவரே
காலனவன் கணப்பொழுதில் பிரித்துவிட்டான்
நிலவில்லா வானம் போல நாமிங்கே
நினைவிழக்க முடியாமல் நீந்துகின்றோம் கண்ணீரில்
அப்பா... அப்பா என்றழைத்தால் சொர்க்கம் தோன்றுமே
சொர்க்கம் நீர் சென்றதால் துக்கம் எமக்கானதே
நயினை நாகம்மை பாதமதில் உம் ஆத்மா சாந்திபெற
அஞ்சலிகள் செய்கின்றோம் பெறுக நீ சாந்தி ஐயா.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கடந்த 06.01.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் நாகலிங்கம் கந்தசாமி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05.02.2009) வியாழக் கிழமை கங்காதரணி தீர்த்தக் கரையிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நடைபெறும். தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**நீங்கா நினைவுகளுடன்:**
மனைவி, மக்கள், மருமக்கள்
குடும்பத்தினர்.

5 ஆம் வட்டாரம், நயினாதீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித் துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## நிறோஜா இராசரத்தினம்

பெறுபேறு: 3ஏ (சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்)

எனது சொந்த இடம் பொன்னாலை. நாங்கள் 1990ஆம் ஆண்டளவில் இடம் பெயர்ந்து வந்தோம். எனக்குப் பத்து வயது ஆகும் போது அப்பா இறந்து விட்டார். அம்மாவின் பொறுப்பில் மட்டுமே நானும் எனது சகோதரர்களும் வளர்ந்தோம். என்னுடைய இந்தப் பெறுபேற்றிற்கு முதற் காரணம் எனது அம்மா. நான் உயர்தரம் வரை படித்து இத்தகைய பெறுபேற்றை எட்டுவதற்கு அம்மாதான் எனக்குப் போதியளவு ஊக்கம் தந்தார். அடுத்து எனது அக்கா இராம நாதன் நுண்கலைப்பீடத்தில் நடன பாடத்தைக் கற்று தற்பொழுது முடித்து விட்டார். அவரும் எனக்குப் போதிய ஊக்கம் தந்தார்.

நான் தரம் 1முதல் உயர்தரம் வரை சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்திலேதான் கல்வியைப் பயின்றேன். எமது பாடசாலையில் முதற்தடவையாக 3ஏ எடுத்த மாணவியாக நான் விளங்குவதையிட்டு பெருமைப்படுகின்றேன். என்து வகுப்பாசிரியை திருமதி ச.முருகவேள் அவர்கள் எனக்கு தன்னாலான உதவிகளை செய்து என்னை முன்னேற்றுவதற்கு உதவி புரிந்தார். அவர் இப்பொழுது எங்களுடன் இல்லை.

நான் இரண்டாவது முறையாகப் பரீட்சையில் தோற்றியே இப்பெறுபேற்றை அடைந்தேன். முதற் தடவையில் எனக்கு மிகக் குறைந்த பெறுபேறே கிடைத்தது. அதனால் மனமுடைந்து இரண்டாவது தடவையாக பரீட்சைக்குத் தோற்ற மறுத்தேன். அவ்வேளையிலே எனக்குக் கற்பித்த ஆசிரியர்களும், என் குடும்பத்தாரும், எனது நண்பர்களும் எனக்குப் போதிய அறிவுரைகளை வழங்கி என்னை இரண்டாவது முறை பரீட்சைக்குத் தோற்ற வைத்தனர்.

இரண்டாவது முறையாக பரீட்சைக்குத் தோற்றும் போது திரு.ஜெசிந்தன் ஆசிரியர் அவர்கள் எனக்கு தமிழ் பாடத்தை கற்பித்தார். அவர் பரீட்சை எழுதும் நுட்பங்களை மிகவும் விளக்கமாகக் கூறி என்னை பரீட்சைக்கு தயாராக்கியிருந்தார். அதாவது பரீட்சைத் தாளின் எண்ணிக்கை அவசியமில்லை, வினாக்களிற்கான விடையை தெளிவாக, சுருக்கமாக கொடுக்க வேண் டும் என்றார். நான் தமிழ், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களிற்கு விடையளிக்கும் போது அவர் கூறிய இவ்விடயமே மனதில் தெளிவாகத் தோன்றியது. அதனால்தான் நான் குறைந்த நேரத்தில் அதிகமான கருத்துக்களைச் சுருக்கமாக எழுதி 'ஏ' பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

அடுத்து புவியியல் பாடத்தினை டினேஸ்குமார் ஆசிரியரிடம் இரண்டாவது தடவை கற்றேன். அவரின் ஊக்குவிப்பும், உதவிகளும், பரீட்சைகளும் எனது பெறுபேற்றிற்கு பெரிதும் துணை புரிந்தன. முதற் தடவையாக புவியியல் பாடத்தில் 'எஸ்' எடுத்த நான் இரண்டாவது முறை 'ஏ' எடுப்பதற்கு முதற்காரணம் ஆசிரியர் டினேஸ்குமார் அவர்களே. இந்துநாகரிகப் பாடத்தை கற்பித்த சுரேஸ் ஆசிரியரும் எனக்கு போதிய ஊக்கமளித்து 'ஏ' பெறுபேற்றினை அடைய வைத்தார். எனது பாடசாலை அதிபர் திருமதி யோகேஸ்வரன் அவர்களும் எனக்கு போதியளவு ஊக்கம் தந்திருந்தார். எனது பாடசாலையில் உயர்தரத்தில் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் மட்டுமல்லாது தரம் 1 முதல் 12 வரை கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுமே எனக்கு அறிவுரைகளைக் கூறி என்னை இப்பெறுபேற்றை அடைய வைத்துள்ளனர்.



## பிறேமலா சிவகுமார்

பெறுபேறு: 3ஏ (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

க.பொ.த. [சா.த.] பரீட்சை போலல்லாது க.பொ.த.[உ.த.] பரீட்சை எமது எதிர்காலத்தையே தீர்மானிக்கும் பரீட்சை என்பதால் மிகுந்த கவனத்துடன் கலைப்பிரிவைத் தேர்வு செய்தேன். இருப்பினும் கலைப்பிரிவில் கற்கும் எமக்கிடையே மிகுந்த போட்டி காணப்பட்டது. இவர்களுக்கு மத்தியில் நல்ல பெறுபேறு பெற வேண்டும் என்பதால் அந்த இலக்குடன் சிறப்பாக கல்வி கற்று சிறந்த பெறுபேற்றை அடைந்தேன்.

சிறப்பான பெறுபேறு அடைய நான் கலைப்பிரிவில் கொண்ட ஆர்வமும் காரணம் எனலாம். நான் தமிழ், அளவையியல், இந்துநாகரிகம் ஆகிய பாடங்களை கற்றுக் கொண்டேன். அவற்றைப் பல தடவைகள் மீட்டிப் பார்ப்பதனூடாகவும் கடந்தகாலப் பரீட்சை தாள்களை பார்ப்பதனூடாகவும் எனது சந்தேகங்களை நண்பர்கள், ஆசிரியர்கள் மூலம் நீக்கியதன் மூலமும் எனது வாசிப்புத் திறனை ஓரளவு விருத்தி செய்ததனாலும் சிறந்த பெறுபேற்றைப் பெற்றேன்.

பெறுபேற்றை அறிந்ததும் என் மீது அக்கறையும், பாசமும் காட்டிய பெற்றோர், குடும்பத்தினர், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் அனைவரது விருப்பையும் நிறைவேற்றிய மகிழ்ச்சியில் மிக ஆனந்தப்பட்டேன்.

என்னுடைய இச்சாதனைக்கு உறுதுணையாக இருந்தவர்களில் எனது பெற்றோர், சகோதரர், சகோதரி என்னைக் கல்வி கற்க ஊக்கப்படுத்திய அதிபர், ஆசிரியர்கள், எனது நண்பர்கள், உறவினர்கள், தனியார் கல்வி நிறுவனத்தார், சக மாணவர்கள் எனப் பலர் ஆக்கமும், ஊக்கமும் தந்தார்கள்.

பல ஆண்டுப் பரீட்சைக் கேள்விகளை ஆராய்ந்ததாலும் சிறப்பான ஆசிரியர்களின் வழிகாட்டலாலும் பரீட்சையில் வந்த வினாக்களை இலகுவாக எதிர்நோக்க முடிந்தது. அத்துடன், நான் எதிர்பார்த்த வினாக்கள் பரீட்சையில் வந்தன. எனது குடும்பத்தில் உயர்தரக் கல்வியை என்னால் மட்டுமே முழுமையாகத் தொடர முடிந்தது. இது எனது குடும்பத்திற்கு அளப்பரிய சந்தோஷம். கலைப்பிரிவில் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்திபெற விரும்பினேன். அதற்கேற்ப பாடங்களை தெரிவு செய்து எனது குறிக்கோளை எய்தியுள்ளேன். இவற்றுக்கெல்லாம் வழிகாட்டிய எனது பெற்றோர்க்கும், அதிபர், ஆசிரியர்களுக்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கும் இத்தருணத்தில் நன்றி கூற விரும்புகிறேன். இனி வரும் காலகங்களில் பரீட்சையை எதிர்நோக்கும் மாணவ, மாணவிகள் எந்தப் பிரச்சினைகளையும் சமாளித்தும் தமது வாசிப்புத் திறனை விரிவுபடுத்தியும் நல்ல பெறுபேற்றைப் பெற்று யாவருக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்பதே எனது ஆசை. 2009ஆம் ஆண்டிலிருந்து எமது கல்லூரியில் க.பொ.த.உ.த. கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பிக்கப் படவுள்ளதை நினைத்தால் பெருமகிழ்ச்சியாக உள்ளது. வாழ்க வளர்க எம் கல்லூரி.



## மரியதாஸ் விமல்ராஜ்

பெறுபேறு: 2ஏபி (நெடுந்தீவு மகாவித்தியாலயம்)

எனது குடும்பம் மிகவும் கஷ்டமான நிலையில் உள்ளது. தந்தையார் கடற்றொழில் செய்பவர். வருமானம் குறைவு என்பதற்காக பிள்ளைகளின் படிப்பை நிறுத்தக் கூடாது என்பது எனது பெற்றோர்களின் அபிப்பிராயம். அதனால் எனது சகோதர, சகோதரியையும் படிக்க வைப்பதில் ஆர்வம் காட்டினார்கள். எனது சகோதரர் தற்சமயம் கல்வியற் கல்லூரியில் படிக்கின்றார்.

அவரைப் பார்த்து நானும் படிக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் இருந்தேன். அது எனது எதிர்காலத்திற்கு ஒரு நல்ல வழியைத் தந்திருக்கிறது என்று நம்புகிறேன். நான் பரீட்சைக்குத் தோற்றிய சமயம் இங்கு பட்டதாரி ஆசிரியர்கள் இருக்கவில்லை. அது ஒரு குறையாக எனக்குத் தெரியவில்லை. அந்த அளவுக்கு எனது பாடசாலை அதிபர் திருமதி சாரதா கிருஷ்ண தாஸ், ஆசிரியர் பீரிஸ் ஜேக்கப் ஆகியோர் கூடுதல் அக்கறை காட்டினார்கள். எனது ஆரம்பக் கல்வியே இங்குதான். குடும்ப கஷ்ட நிலை காரணமாக தனியார் கல்வி நிலையங்களை என்னால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை.தமிழ், அரசியல், கிறிஸ்தவம் ஆகிய பாடங்களை நான் தேர்ந்தெடுத்திருந்தேன். நாங்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற வேண்டும் என்பதில் அதிபரும் ஆசிரியர்களும் மிகுந்த ஈடுபாடு காட்டுகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு கற்பித்தலை அவதானமாகக் கேட்டும் தேவையான குறிப்புகளை எடுத்துப் படித்தால் தனியார் கல்வி நிலையங்களுக்கு ஓடவேண்டிய அவசியம் இல்லை என்பது எனது எண்ணம்.

அன்று முதல் இன்று வரை பாடசாலையையும் இங்குள்ள அதிபர், ஆசிரியர்களையும் நம்பித்தான் கல்வியைத் தொடர்ந்தேன். இரவில் நீண்டநேரம் கண்விழித்துப் படிப்பேன். சுற்றிவர மின் வெளிச்சங்கள் இருந்த போதும் எங்கள் வீட்டில் அது கிடையாது. விளையாட்டைப் பொறுத்தவரை பக்கத்தில் போவது கூட கிடையாது. இனிமேல்தான் அதிலும் சிறிது கவனம் எடுக்க வேண்டும். எனது கல்விக்கு கல்வி அமைச்சு இலங்கை வங்கியினூடாக உதவியிருந்தது. முன்பு போலன்றி இப்போது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக அரசாங்கமும் அரசசார்பற்ற அமைப்புக்களும் பலதரப்பட்ட உதவிகளை வழங்கிவருகின்றன. இந்த உதவிகளை உரிய முறையில் பயன்படுத்தினால் ஒவ்வொரு மாணவனும் எதிர்காலத்தில் சிறந்து விளங்க முடியும். வீண் பொழுதுகழிக்காது முயற்சியுடையவனாக மாற வேண்டும். நான் ஒரு நல்ல ஆசிரியராகி எதிர்காலச் சந்ததி ஒரு நல்ல ஒழுக்கமும் கல்வியும் நிறைந்த சமுதாயமாக வளர உதவ வேண்டும் என்பதே விருப்பம்.

சந்திப்பும், படங்களும்: ஓஎன்யன், கவிநேசன், ம.பா.மகாலிங்கசிவம், லக்ஸ்மன்

12



## சஜீபா சுந்தரலிங்கம்

பெறுபேறு: 2ஏபி (நயினாதீவு மகா வித்தியாலயம்)

யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் க.பொ.த.சாதாரண தரம் வரை கற்றேன். அங்கு ஆசிரியர்களின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப சிறந்த பெறுபேற்றைப் பெற்று க.பொ.த.சாதாரணதரம் சித்தியடைந்தேன். அப்பாடசாலையில் உயர்தர வகுப்புக்கள் இல்லாமையினால் அயல் பாடசாலை ஆகிய யா/நயினாதீவு மகா வித்தியாலயத்தில் உயர் கல்விக்காக இணைந்தேன்.

எனது பாடசாலையில் கலைப்பிரிவு வகுப்புக்கள் மட்டுமே உள்ளன. அத்துடன் தமிழ், அரசியல், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கு மட்டுமே ஆசிரியர்கள் இருந்தமையினால் இம் மூன்று பாடங்களையும் எனது சக மாணவர்கள் அனைவரும் கற்றோம்.

பெற்றோரின் கஷ்ட நிலையினைப் பார்த்து நான் படித்துப் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஆரம்பத்திலிருந்தே மூன்று பாடங்களிலும் சம அளவு முக்கியத்துவம் கொடுத்துக் கற்றேன். கடந்த கால வினாத் தாள்களினை அடிப்படையாகக் கொண்டு பயிற்சிகளை மேற்கொண்டேன். கடினமான பகுதி, சுலபமான பகுதி என்று கருதாது முழுமையாகப் படித்தேன். இதனால் இப்பெறுபேற்றைப் பெற முடிந்தது. இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு பாடசாலை அதிபர், ஆசிரியர்களே பூரண ஒத்துழைப்பை வழங்கினர். அத்துடன், எனது விடாமுயற்சியும் இறையருளும் காரணமாய் அமைந்தது.

எனக்குக் கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்திய பெற்றோர், உறவினர்கள், பாலர் பாடசாலையிலிருந்து உயர்கல்வி வரை கற்பித்த அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## வசந்தச்சந்திரன் மேரிடினோகா

பெறுபேறு: ஏ2பி (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

நான் எனது ஆரம்பக் கல்வியை யா/குளமங்கால் றோ.க.வித்தியாலயத்தில் பயின்று தரம் 6 இல் யா/மகாஜனக் கல்லூரியில் கற்க ஆரம்பித்தேன். எனது சிறு வயதிலிருந்து உருவான ஆசையை நிறைவேற்றும் நோக்கில் திடசங்கர்ப்பம் பூண்டு உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவைத் தேர்ந்தெடுத்தேன். எனது தந்தையார் கூலித் தொழில் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு எனது கல்வி நடவடிக்கைக்கு எவ்வித இடையூறும் தராமல் நான் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற நோக்கத்திற்காக எனது குடும்பம் தங்களையே அர்ப்பணித்துள்ளது. "3ஏ" எடுக்க வேண்டும் என்ற நோக்கில் நம்பிக்கையுடன் நான் கற்றபோது எனது பெறுபேறுகள் சற்று குறைந்திருந்தாலும் மாவட்ட நிலையில் முன்னணியிலே இருப்பதை நினைத்து மகிழ்வடைகின்றேன். நான் இப்பெறுபேற்றை பெறுவதற்கு ஒத்துழைப்பும், ஊக்கமும் அளித்த என் ஆசிரியர்களையும், என் குடும்பத்தையும் நன்றி உணர்வோடு நினைக்கின்றேன்.

வர்த்தகப் பிரிவைச் சேர்ந்த மாணவர்களின் பரீட்சையின் போது பெரும்பாலும் நேரப்பிரச்சினை இடையூறாக நிற்கும் என்ற காரணத்தினால் விளக்கமின்மைகளை ஆசிரியர்களிடம் கூறி அவற்றை தெளிவுபடுத்தி மீண்டும் அவற்றை செய்து பார்ப்பேன். இவ்வாறான செயற்பாடுதான் என்னை இந்நிலைமைக்கு உயர்த்தியுள்ளது என்று கூறுவதில் எவ்வித ஐயமுமில்லை. உயர்தரத்தில் பயின்று கொண்டிருக்கும் வேளையில் எனது துறை ஆசிரியர்களும், கலை, விஞ்ஞானத்துறை ஆசிரியர்களும் சிறந்த பெறுபேற்றை பெற வேண்டும் என்று அடிக்கடி கூறி எனக்குள் நம்பிக்கை ஒளியை ஏற்றி வைத்தனர். மேலும் எமது பங்குத்தந்தையும் ஏனைய அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் நான் சிறந்த பெறுபேற்றை பெறுவதற்காக ஒரு சில அபிப்பிராயங்களைக் கூறியதுடன், விடாமுயற்சியுடன் கற்கவும் வழி சமைத்துள்ளனர். அவர்களுக்கும் எனது நன்றிகள்.

சிறந்த ஒரு கணக்காளர் ஆக வேண்டும் என்ற என் கனவு நிறைவேற வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.



## அபிராசா டில்லிபரீனா

பெறுபேறு: 2ஏபி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

தமிழ், சங்கீதம், அரசியல் போன்ற பாடங்களைத் தெரிவு செய்தேன். 3ஏ பெறுபேற்றினை எதிர்பார்த்தேன்.கிடைக்கவில்லை என்ற ஏமாற்றம், அதிலிருந்து இன்றுவரை மீள முடியவில்லை.

நான் உயர்தரம் படிப்பதென்பதே பெரிய சவாலாகவே அமைந்தது. நான் சாதாரண தரப் பரீட்சை எழுதி முடிந்ததும் எனது அப்பாவுக்கு வருத்தம் வந்து விட்டது. அவரால் உழைக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டது. இதனால் குடும்பத்தில் பொருளாதார நிலை படுமோசமாக அமைந்தது. மேலும் படிக்காமல் சாதாரண தரத்தோடு முற்றுப்புள்ளி வைப்போம் என்று முடிவெடுத்தேன்.

இந்தச் சூழ்நிலையில் எனது பெரியப்பா, சித்தப்பாமார்கள் எல்லோரும் உதவி செய்வதாகவும் என்னைப் படிக்கச் சொன்னார்கள். இன்றும் கூட அவர்கள்தான் எங்கள் குடும்பச் சுமைகள் அனைத்தையும் சுமக்கிறார்கள்.

அவர்களின் எதிர்பார்ப்பு நான் படித்து நல்ல நிலைக்கு வர வேண்டுமென்பதே. எனவே அவர்களின் எதிர்பார்ப்பை மனதில் நிறுத்தி வைராக்கியத்துடன் படித்தேன்.

கல்லூரியிலும் அதிபர் வ.ஸ்ரீகாந்தன், பிரதி அதிபர் இ. ஆனந்தநடராசா, ஆசிரியர்களான குகபரன், திருமதி யசோ ஆகியோர் சிறந்த முறையில் என்னை வழிப்படுத்தினார்கள். அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நன்றிகளைத் தெரிவிக் கிறேன்.

தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றியுள்ளேன். சிந்து நடைக் கூத்து மாகாண மட்டம் வரைக்கும் வெற்றி பெற்றது. ஆக்கத் திறன் சார்ந்த கவிதை, கட்டுரை ஆகிய துறைகளில் அதிக ஈடுபாடு உள்ளது.

எதிர்காலத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி கல்விச் சேவை புரிய வேண்டும் என்பதே எனது எதிர்கால இலட்சியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுதந்திரதினத்தையொட்டி யாழ்.நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் வாகனங்கள் போன்றவற்றில் தேசியக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. அவற்றைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:நேசன்)

## நெடுந்தீவுப் பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது

நல்லூர், பெப்.5

நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலையில் கணனி அறை அமைப் ப[illegible] 23 லட்சம் ரூபாவும், நெடுந்தீவு [illegible]களிர் கல்லூரிக்கு 20 லட்சம் [illegible] மாகாண சபை நிதியில் வழங் க[illegible]ள்ளது என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. (203-111)

## நாடகமும் அரங்கியலும் செய்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப்.5

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகினால் 2007 ஆம் ஆண்டுக்கான வெளிவாரிப் பரீட்சையின் பொதுக் கலைமாணித் தேர்வுப் பகுதி- II 2004,2005 (வெளிவாரி) நாடகமும் அரங்கியலும் பாடத்திற்கான செய்முறைப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி செய்முறைப் பரீட்சை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங் கில் நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.பல்கலைக் கழகப் பதில் பதிவாளர் அறிவித்துள்ளார். (201)

## உள்ளூராட்சித் திணைக்கள தலைமை அலுவலகம் நடத்திய சீட்டிழுப்பு முடிவு

யாழ்ப்பாணம், பெப்.5

திருகோணமலை தலைமைச் செய லக ஊழியர் நலன்புரிச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப் பின் முடிவுகள் சகல உள்ளூராட்சி சபைக ளுக்கும் அறிவிக்கப்பட் டுள்ளன.

வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் அந்தந்த உள்ளூராட்சி சபைகள் ஊடாக வழங்கப்படுமென சங்கச் செயலாளர் என்.செல்வராணி அறிவித்துள்ளார்.

*முதலாம்பரிசு*-அகிலேஸ்வரசர்மா- திருகோணமலை, 2 ஆம் பரிசு-ஆர் புஸ்பகரன், செட்டிகுளம், 3 ஆம் பரிசு- ஏ.ஏ. நடராசா, நகரசபை, பருத்தித்துறை.

*ஆறுதல் பரிசுகள்*-திருமதி ர.மகேஸ் வரன் மாநகரசபை, யாழ்ப்பாணம், கே.சுஜிதா- திருகோணமலை, யதுர் என்டர் பிறைஸ்- வவுனியா, கே.வன்னி யசிங்கம்- நகரசபை, பருத்தித்துறை, ஜே.பிரகாஸ்- அல்வாய் வடக்கு, பெரியான் வேடச்சி- சாவகச்சேரி, எம்.தயாகுமாரன்- சங்கத்தானை, ரி.ஜெய ராசா-திருகோணமலை, என்.மயூரன்-திரு கோணமலை, ரி.வலசெயி- இணுவில் கிழக்கு. (203-207)




நல்லூர், பெப்.5

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தின் வரு டாந்த மெய்வன்மைப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் க.தர்மகுண சிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் பிரதம விருந்தினராக வும், வேலணை கோட்டக் கல்விப் பணிப் பாளர் கு.சரவணபவானந்தன் சிறப்பு விருந் தினராகவும் கலந்து கொள்வர். (203-111)

* * *

அச்சுவேலி, பெப்.5

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல் லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரிய றொசாரியோ தலைமையில் நடைபெறும் போட்டியில், வலி.கிழக்கு பிரதேச செய லர் சி.ஏ.மோகன்றாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்க ளாக அச்சுவேலி பங்குத் தந்தை பீற்றர் துரை ரத்தினமும் யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவகு மாரும் கலந்து கொள்கின்றனர். (9-11)

* * *

யாழ்ப்பாணம், பெப்.5

மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியா லய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் கு.கதிர்காம சேகரர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் கலந்து கொள்வார். (223-207)

* * *

கோப்பாய், பெப்.5

அச்செழு சைவப்பிரகாச வித்தியாசா லையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற் பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதா னத்தில் அதிபர் ச.வேலழகன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. குமாரசாமியும், சிறப்பு விருந்தினராக இப்பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியர் செ.சிவஞானசுந் தரமும் கலந்து கொள்வர். (203-72)

## வாகனங்களின் ஆவணங்கள் அடங்கிய தபால்கள் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில்

**உரியவர்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்து**

யாழ்ப்பாணம், பெப்.5

கொழும்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினரால் அனுப்பி வைக்கப் பட்ட வாகன ஆவணங்கள் உள்ளடக்கிய பதிவுத் தபால்கள் முகவரியில் உரியவர்க ளிடம் இல்லாமையால் சாவகச்சேரி அஞ் சல் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

பின்வரும் முகவரிகளை உடையோர் உடனடியாக தமது கடிதங்களைப் பெற் றுக் கொள்ளுமாறும் தவறின் அவை திணைக்களத்திற்கு திருப்பி அனுப்பப் படுமென அஞ்சலக வட்டாரங்கள் தெரி வித்தன.

ஏ. சிவபாலன்- ஐயர் வீதி, கல்வயல், சாவகச்சேரி, எஸ்.பரமேஸ்வரன்- நுணா வில் மேற்கு, யு.தேவகுமார்-சங்கம் வீதி, சங்கத்தானை, எஸ்.சின்னக்குட்டி- சாவகச் சேரி வடக்கு, எம்.சிவசுப்பிரமணியம்- சங்கத்தானை ஒழுங்கை டச்சு வீதி, சாவகச் சேரி,ஈ.சின்னத்துரை-கல்வயல், சாவகச் சேரி, ரி.பொன்னம்பலம்-மட்டுவில் தெற்கு.

இவற்றுடன் சாவகச்சேரி டச்சு வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த மொகமட் ரசீத், மொகமட் அஜீத் என்பவரின் சாரதி அனுமதிப் பத்திரமும் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## இலங்கை வங்கி வல்வெட்டித்துறைக் கிளையின் விரிவாக்கற் கிளை ஞாயிறன்று அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், பெப்.5

வல்வெட்டித்துறை இலங்கை வங்கி விரிவாக்கற்கிளையின் அங்குரார்ப்பண விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்.வீதி விஷ்ணுசுந் தரம் கட்டடம், வல்வெட்டித்துறை எனும் முகவரியில் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கி, யாழ்.அதிமேற்தரக் கிளை பிரதான முகாமையாளர் கே.பி. ஆனந்த நடேசன் தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட் ணம் கலந்து கொள்வார்.

நிகழ்வில் ஆசியுரைகளை வல்வை சிவன் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ மனோ கரக் குருக்கள், வல்லை முத்துமாரி அம் மன் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர், வல்வை நெடிய காட்டுப் பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ நந்தகோபால்க் குருக்கள், வல்வை புனித செபஸ்தியார் தேவாலய பங்குத் தந்தை ம.பத்திநாதர் அடிகளார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (9)




## விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு திருநெல்வேலியில் புதிய கட்டடம் அமைப்பு

யாழ்ப்பாணம், பெப்.5

குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுற வுச் சங்கத்திற்கென பல லட்சம் ரூபா செலவில் புதிதாக பெரிய அளவிலான கட் டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

திருநெல்வேலி விவசாய திணைக்க ளத்திற்கு அருகில் அமைக்கப்பட்டு வரும் இந்த கட்டடத்தின் கட்டுமாணப் பணிகள் யாவும் நிறைவுபெறும் நிலையில் உள்ளன.

மாவட்ட அரச அதிபர் மற்றும் பிரதி விவசாயப் பணிப்பாளர் ஆகியோரின் முயற்சியின் பயனாக இந்த விதை உற்பத்திக் கூட்டுறவு சங்கத்திற்கான கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த கட்டுமாண பணிக்கான நிதி உத விகளை யு.என்.டி.பி மற்றும் வேல்ட் விஷன் ஆகிய அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங் கியுள்ளன.

புதிய கட்டடம் திறக்கப்பட்டதும் மரக்கறி விதை பாதுகாப்பது மற்றும் சந் தைப்படுத்துவது, விதை உற்பத்தி சம்பந் தமான ஆய்வுப் பணிகள் போன்றன இடம் பெறும் என்று கூறப்பட்டது. (202-224)

## கூட்டுறவுப் பணியாளர்களுக்கு மேலும் 2,500 ரூபா வாழ்க்கைச் செலவுப்படி

**கூட்டுறவு ஆணைக்குழு வழங்க நடவடிக்கை**

யாழ்ப்பாணம், பெப்.5

கூட்டுறவுப் பணியாளர்களுக்கான மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படியை மேலும் 2,500 ரூபாவால் அதிகரிப்பதற்குக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நடவ டிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

தற்போது மாதாந்தம் கூட்டுறவுப் பணி யாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படி யாக 2 ஆயிரத்து 825 ரூபா வழங்கப்படு வதற்கான சுற்றறிக்கை கடந்த ஆண்டில் வெளியிடப்பட்டது.

இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் குடா நாட்டில் உள்ள சில கூட்டுறவுச் சங்கங் கள் வாழ்க்கைச் செலவுப்படியை மாதாந்தம் முழுமையாகவும் கட்டங்கட்டமாகவும் வழங்கி வருகின்றன.

இந்த நிலையில் இந்த வாழ்க்கைச் செலவுப் படியை மேலும் 2 ஆயிரத்து 500 ரூபாவால் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு அதிகரிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பதாக அறிய முடிகிறது.

இதேவேளை எதுவித சம்பள அதிகரிப் பும் இன்றி குறைந்த வேதனத்துடன் பணி யாற்றும் குடாநாட்டுக் கூட்டுறவுப் பணி யாளர்கள் சம்பள அதிகரிப்பின்மை குறித்து விசனம் தெரிவித்துள்ளனர்.

சில கூட்டுறவு அமைப்புகள் தமது பணி யாளர்களுக்கான மாதாந்த வாழ்க்கை செல வுப்படியை கூட வழங்காது இருப்ப தாகவும் பணியாளர் விசனம் தெரிவிக்கின் றனர். (203-204)

## குடாநாட்டில் பெரும்போக செய்கையை மேற்கொள்ள உற்பத்தியாளரிடமிருந்து விதை நெல் கொள்வனவு

**விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் தகவல்**

யாழ்ப்பாணம், பெப்.5

குடாநாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள அடுத்த பெரும்போக நெற்செய்கைக்கென விதை நெல் உற்பத்தியாளர்களிடம் இருந்து 4 ஆயிரத்து 500 புசல் விதை நெல் கொள் வனவு செய்யப்படவுள்ளது.

குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுற வுச் சங்கத்தின் பொது முகாமையாளர் த.சிவலோகநாதன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் தெரி வித்தவை வருமாறு:-

அடுத்த பெரும்போக நெற்செய்கைக் கென ஒப்பந்த அடிப்படையில் நூறு விதை நெல் உற்பத்தியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தற்போது இவர்களால் மேற்கொள்ளப் படும் தரமான பீ ஜீ 406, பீ.டபிள்யூ 361 போன்ற விதை நெல்களை சங்கம் கொள் வனவு செய்துள்ளது.

இந்தச் சங்கத்தின் தலைவரும் மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளருமான எஸ். சிவகுமார் மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகளின் மேற்பார்வையுடன் இந்த விதை நெல் உற்பத்தித் திட்டம் வெற்றி கரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

விதை நெல் உற்பத்தி எஸ்.டி.சீ நிறு வனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப் படுகின்றது.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த விதை நெல்களில் தரமானவை இந்தச் சங்கத்தால் கொள்வனவு செய்யப் பட்டு அடுத்த பெரும்போக நெற்செய் கைக்குப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன- என்று கூறினார். (203-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சாவகச்சேரி நகரின் மத்தியில் நடைபெற்ற தேசிய சுதந்திர தின விழாவின் போது எடுக்கப்பட்ட படங்களை இங்கே காணலாம்:

1) விழாவில் கலந்து கொள்வதற்காக பஸ் நிலையத்தில் திரண்ட மக்களில் ஒரு பகுதியினர்.
2) ''பான்ட்'' வாத்திய சகிதம் விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.
3) சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகள் தேசிய கீதம் இசைக்கின்றனர்.
4) தேசியக் கொடி ஏற்றப்பட்டிருக்கிறது.
5) சுதந்திரதின நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்டோர் மேடையில் காணப்படுகின்றனர்.
6) நேற்றுத் திறந்து வைக்கப்பட்ட நிழற்குடையின் கீழ் வைக்கப்பட்டுள்ள சமாதானப் புறாவுடனான இலங்கைப்படம்.

# நாட்டின் எந்தப் பகுதியிலும் அனைத்து சமூகங்களும் வாழக்கூடிய காலம் நெருங்கி வருகிறது

## யாழ்.படைகளின் தளபதி சுதந்திரதினச் செய்தி

யாழ்ப்பாணம், பெப்.05

வட முனையில் இருந்து தென் முனைக்கும் கிழக்கில் இருந்து மேற்கிற்கும், எமது தாய் நாட்டின் எந்த பகுதிகளிலும் அனைத்து சமூகங்களும் சுதந்திரமாக வாழக்கூடிய காலம் நெருங்கி வருகிறது.

இலங்கையின் 61 ஆவது சுதந்திரதினத்தையொட்டி யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் எம்.சி.எம்.வி. சமரசிங்க விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தமது செய்தியில் தெரிவித்திருப்பதாவது:

பிரித்தானிய காலனித்துவ நாடாக இருந்த எமது நாட்டிற்கு 1948 பெப்ரவரி 04ஆம் திகதி டொமினிக் முறையிலான சுதந்திரமும் பொது நலவாய நாடுகளின் அங்கத்துவமும் கிடைத்தது. அந்தச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இந் நாட்டுத் தலைவர்கள் மேற்கொண்ட போராட்டத்தின் போது இன, மத பேதங்கள் இருக்கவில்லை. அவர்களின் மனங்களிலே இந்த நாட்டு பிரஜைகள் என்ற மனப்பான்மையும் அந்நிய நாட்டின் காலனி ஆட்சியில் இருந்து விடுபட்டு சுதந்திரமாக தமது நாட்டில் வாழ வேண்டும் என்ற பொது மனப்பான்மையையே கொண்டிருந்தனர்.

பயங்கரவாதத்தால் எமது நாடு இழந்த சௌபாக்கியத்தை மீண்டும் கட்டியெழுப்பவும் நாட்டின் அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழவும் அரசாங்கமும் பாதுகாப்புப் படையினரும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் காரணமாக தற்போதைக்கும் சமாதானத்தின் மொட்டுக்கள் தளிர்விட்டுள்ளன. அது இந் நாட்டில் வாழும் தமிழ், சிங்களம், முஸ்லிம் உட்பட அனைத்துச் சமூகங்களினதும் அதிஸ்ரமென்பதுடன், உங்கள் அனைவருக்கும் வட முனையில் இருந்து தென் முனைக்கும், கிழக்கில் இருந்து மேற்கிற்கும் எமது தாய் நாட்டின் எப் பகுதியிலும் சுதந்திரமாக வழக்கூடிய காலம் நெருங்கி வருவதை உணர்த்துவதாக இருக்கின்றது.

மனிதாபிமானநடவடிக்கையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்று வன்னி மற்றும் யாழப்பாணம் உட்பட வடக்கில் வாழும் உங்களுக்கும் அந்தச் சமாதானச் சூழலை ஏற்படுத்தும் முகமாக கரடுமுரடான இந்தப் பயணத்தை விஸ்திரப்படுத்தி 99 வீதம் நிறைவு செய்யபப்பட்டுள்ளது. அதனபடி பூநகரி, கிளிநொச்சி, ஆனையிரவு, முல்லைத்தீவு போன்ற பயங்கரவாதத்தில் சிக்குண்டிருந்த பிரதேசங்களை தற்போதைக்கு மீட்டுள்ளதுடன், இன்னும் ஒரு வீதம் மாத்திரமே மீட்கப்படவிருக்கிறது. அந்தப் பகுதியை யும் மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் எமது பாதுகாப்புப் படையினர் மீட்டெடுப்பர் என்பது உறுதியே. எமது தாய்நாட்டில் இருந்து பயங்கரவாதத்தை ஒழித்து சமாதானத்தை மலரச் செய்யும் பட்சத்தில் தென்பகுதியிலுள்ள உங்கள் உறவுகளை சந்திக்கவும் உங்கள் உற்பத்திகளுக்கு தென்பகுதியிலே கப்பம் வரியின்றி சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. அதற்காகவே வடக்கையும் தெற்கையும் இணைத்து ஏ-9 வீதியை சமாதானத்தின் வீதியாக மீட்டெடுத்துள்ளதுடன், அதன் அபிவிருத்திப் பணிகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, கூடிய விரைவில் உங்களுக்கு தரைவழிப் பாதையூடாக நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கு சென்றுவரக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட உள்ளது.

எமது தாய்நாட்டின் 61 ஆவது சுதந்திர தினமான இந்த சிறப்பான நாளில் பாதுகாப்புப் படையினர் சார்பாக நான் உங்களிடத்தில் வேண்டி நிற்பது எதிர்கால சந்ததிகளுக்காக சௌபாக்கியமுடைய இலங்கையைக் கட்டியெழுப்ப இன்று நாம் எமது கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து எவ்வித குறைபாடும் இன்றி எமது தாய்நாட்டிற்கு வழங்கி திறன்மிக்க எதிர்கால சந்ததிகளை உருவாக்க ஒத்துழைப்பு வழங்குமாறு பாதுகாப்புப் படையினர் சார்பில் உங்களிடத்தில் கேட்டுக் கொள்கிறேன். (அ)

## அரியாலையில் சுதேசிய கொண்டாட்டங்கள்

90 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவை ஒட்டி அரியாலையில் வடமா காண ரீதியில் சுற்றுப் போட்டிகள் நடத்தப் படவுள்ளன.

இந்தச் சுற்றுப் போட்டிகளில் துடுப்பாட்டம் 6பேர் 5ஓவர், கரப்பந்தாட்டம் (ஓவர் கேம் முறையில்) ஆகிய போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் இம் மாதம் 10ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப் பப் படிவங்களைப் பெற்று ந.சுரேன், 15/8, மலர் மகள் வீதி, அரியாலை, கே.நாகேந்திரம், 423., நாவலர் வீதி, அரியாலை ஆகிய முகவரியில் ஒப்படைக்குமாறு விளையாட்டுக் குழுத் தலைவர் பி.பஞ்ச லிங்கம் அறிவித்துள்ளார். (201)

# வெளிநாட்டு நிபுணரின் உதவியின்றி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் கௌரவமான சமாதானத்தை உருவாக்கக்கூடியதொரு நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அதிசிறந்த சந்தர்ப்பத்தை தமது தாய்நாட்டுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு எமது படைவீரர்கள் தமது உடலின் அங்கங்களை மாத்திரமல்ல தமது உயிரையே தாய்நாட்டுக்காகத் தியாகம் செய்தார்கள்.

அப்பாவித் தமிழ் மக்களுக்கு கஷ்டமேற்படுவதற்கு இடமளியாமல் மிகக் கவனமாகப் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தை எமது படைவீரர்கள் வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்றார்கள்.

உருவாகிக் கொண்டிருக்கின்ற கௌரவமான சமாதானம் வேறு எந்த நாட்டிலும் வாழுகின்ற மக்கள் அனுபவிக்கின்ற சமாதானத்தைவிட மிக முக்கியத்துவம் வாய்ந்ததற்கான காரணம், அந்தப் படைவீரர்களின் அளப்பரிய தியாகத்தினால் அந்தச் சமாதானம் ஏற்பட்டமையே.

இந்த வெற்றியின் பின்னால் பல காரணிகள் உள்ளன. பொருளாதாரக் கஷ்டங்களுக்கு மத்தியில் வாழுகின்ற எமது சகோதர மக்கள், எவ்வித பேதமுமின்றி இந்த வெற்றியைப் பெற்றுத் தந்தார்கள்; எங்களுக்கு ஒத்தாசை வழங்கினார்கள்.

பிரிவினைவாதப் பயங்கரவாதத்திற்கு எதிராக சரியானதொரு போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம் என்பதை அவர்கள் சரியாகப் புரிந்து கொண்டுள்ளார்கள்

சரித்திரத்தில் எந்தவொரு காலத்தையும் விட எமது நாட்டின் தாய்மார், தந்தைமார் தமது பிள்ளைகளைப் பாதுகாப்புப் படைகளுக்கு, பொலிஸுக்கு, சிவில் பாதுகாப்புச் செயலணிக்கு பெருமளவில் பெற்றுத் தந்திராவிட்டால் எமக்கு இந்தப் போராட்டத்தில் ஒரு நாளும் வெற்றிபெற முடியாது போயிருக்கும்.

### படையினரின் அர்ப்பணிப்பாலேயே நாடு முழுவதிலும் தேசியக் கொடி பறக்கிறது

நண்பர்களே, அவர்களுடைய பாரிய அர்ப்பணிப்பு எந்தவிதத்திலும் வீண்போகவில்லை. அந்தப் பாரிய அர்ப்பணிப்பின் பெறுபேறாகவே இன்று நாடு முழுவதிலும் தேசியக் கொடி பறக்கின்றது

தமது அறிவின் மூலமே எமது படையினர் இந்த வெற்றியைப் பெற்றுத் தந்தார்களே தவிர வேறெந்த வெளிநாட்டு விசேட நிபுணர்களின் உதவியை எமது படைகள் பெற்றுக் கொள்ளவில்லை. அதேபோன்று எமது படையினுள் விசேட தன்மைகள் நிலவின.

அதனால்தான், எந்த நேரத்திலும் அவர்கள் எங்களை [illegible] வில்லை. "நாட்டுக்காக நாங்கள் இப்பணியை எப்படியாவது செய்துமுடிக்க வேண்டும்" என்பதை மாத்திரமே அவர்கள் எப்போதும் சிந்தித்தார்கள். அவ்வாறு சிந்தித்துப் பணியாற்றக்கூடிய தைரியம் எமக்கு இருந்தமையினால்தான், எமது நாட்டுக்கு இந்த வெற்றி கிடைத்தது.

ஒன்றை மறந்துவிடவேண்டாம்! அண்மைக்காலச் சரித்திரத்தில் உலகத்தின் பல நாடுகளில் நிலவிய பிரிவினைவாதப் பயங்கரவாத இயக்கங்கள் அங்கெல்லாம் அநேகமாக வெற்றிபெற்றன. ஆயினும், இலங்கையில் பயங்கரவாதத்தைத் தோல்வியுறச் செய்து, பிரிவினைவாதத்தையும் தோல்வியுறச் செய்து, நாட்டின் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க எம்மால் முடிந்துள்ளது.

உலகத்தில் எத்தனை நாடுகள் இருந்தாலும், ஒருவருக்கு தான் பிறந்த நாடு போன்று பாதுகாப்பானதொரு இடம் வேறு இருக்காது. இருபது ஆண்டுகளுக்கும் மேலான இந்த துரதிஷ்டவசமான பிணக்கினால், தாய்நாட்டை விட்டுச்சென்று வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் தாம் பிறந்த நாட்டுக்கு, தாம் வாழ்ந்த கிராமத்துக்கு திரும்பி வருவதற்கு இப்போது சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. யுத்தத்தின் காரணமாக நாட்டைவிட்டுச் சென்ற இலங்கையர்களான சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர், மலாயர் உட்பட எல்லாப் பிரஜைகளையும் மீண்டும் பிறந்த தேசத்துக்கு வருமாறு நான் இச்சந்தர்ப்பத்தில் முழு தேசத்தின் சார்பில் பகிரங்க அழைப்பு விடுக்கின்றேன்.

### பிரிவினை வாதப் பயங்கரவாதத்தை சில நாள்களில் முற்றாக ஒழிப்போம்

சிலர் தோல்வி அடையச் செய்யமுடியாது என அடிக்கடி சொன்ன பிரிவினைவாதப் பயங்கரவாதத்தை இன்னும் சில நாட்களில் முற்றுமுழுதாக தோல்வியுறச் செய்வோம் என்பதில் எனக்கு நல்ல நம்பிக்கையுண்டு. ஆனாலும், அத்துடன் எம் முன்னுள்ள சவால் முழுமையாக முடிந்துவிட்டது என நாம் சிந்திக்கக் கூடாது.

சுதந்திரத்திற்குப் பிறகு இலங்கை சில துறைகளில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளது. சிறுவர் சுகாதாரம், கல்வி ஆகிய துறைகளில் நாம் திருப்தியடையக்கூடிய நிலையைப் பெற்றுள்ளோம். எமது பிள்ளைகளில் நூற்றுக்கு 97 வீதமானோர் கல்வி பெறுவதற்காகப் பாடசாலைகளுக்கு உட்பிரவேசிக்கின்றனர். உலகத்தின் பல நாடுகளில் இலவச சுகாதார சேவை, இலவசக் கல்வி போன்றவை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்படாத போதிலும் நாம் அந்தச் சமூகப் பொறுப்புக்காக அர்ப்பணித்த அரசொன்றை உருவாக்கியுள்ளோம். ஆயினும், எந்தவொரு [illegible] இவ்வாறான விடயங்கள் இருந்தாலும், எம்மால் வெற்றிபெற வேண்டிய பல சவால்கள் எஞ்சியுள்ளன.

### வறுமையைத் தோல்வியுறச் செய்ய வேண்டும்

பாடசாலைக்கு அனுமதிக்கப்படுகின்ற பிள்ளைகளுக்கு இதைவிடக் கூடுதலான திறனுள்ள, தேசத்தின் எதிர்காலப் பயணத்திற்கு பொருத்தமான கல்வியை நாம் பெற்றுக் கொடுக்க வேண்டும். வறுமை எங்கு தலைத் தூக்குகின்றதோ, அதே இடத்தில் நாம் அதை தோல்வியுறச் செய்தல் வேண்டும். மனோபாவ ரீதியில் மாற்றமுள்ள அரசசேவையொன்றை நாம் மீண்டும் உருவாக்கவேண்டும்.

தனது எஜமான் மக்கள்தான் என்று கவனிக்கக்கூடிய நிலைக்கு அரசசேவை கொண்டுவரப்படல் வேண்டும். மோசடிக்கும், வீண் விரயத்துக்கும் இடமளிக்காத நல்லாட்சி கொண்ட - சௌபாக்கியமானதும், சுபீட்சமானதுமான தேசமொன்றை உருவாக்கவேண்டிய உண்மையான சவால் எம் அனைவரின் முன்னால் உள்ளது.

எம் முன்னால் எழுந்திருந்த பலம்வாய்ந்த ஓர் எதிரியை எமது தேசம் இப்போது தோல்வியுறச் செய்துகொண்டிருக்கின்றது. அதேபோன்று, எம் முன் எழுந்துள்ள ஏனைய உள்நாட்டு எதிரிகளையும் தோல்வியுறச் செய்வதற்கு இப்போது எமக்கு முடியுமானதாக இருத்தல்வேண்டும். இந்தப் புதிய சவால்களுக்குத் தேவையான விதத்தில் எம்மை மாற்றியமைத்துக்கொள்ள நம் அனைவருக்கும் இயலுமானதாக இருத்தல்வேண்டும். தேசம் என்ற வகையில் ஒன்றுபட்ட குறிக்கோள்களுடன் சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் ரீதியாக எழுந்து நிற்கக் கூடிய புதியதொரு சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டுள்ளமை நல்லதொரு காரியமாகும்.

### தேசியக் கொடிக்கு புதிய சக்தி; தேசிய கீதத்துக்க புதிய வலு

இன்று எமது தேசியக் கொடிக்கு புதியதொரு சக்தி ஏற்பட்டுள்ளது. தேசிய கீதத்திற்கு புதியதொரு வலு ஏற்பட்டுள்ளது. படைவீரர்கள் வடக்கிற்குக் கொண்டு சென்ற தேசியக் கொடிகள் இன்று வட்பகுதி மக்களின் கைகளில் பறக்கின்றன. மக்கள் அனைவரும் தேசயக் கொடியின் நிழலில் ஒன்றுபட்டு, தமது நாட்டின் அடுத்த சவாலுடன் போராடுவதற்குத் தயாரான மானசீகத்துடன் இன்று வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். அவர்கள் சரித்திரத்தில் என்றுமில்லாதவாறு மிகக் கூடுதலாகத் தமது தேசத்தின்மீது அன்பு செலுத்துகின்றனர்.

காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுபட்டு 61 ஆண்டுகளுக்குப் பின், தேசத்தை மீண்டும் மகத்துவத்துடன் உயர்த்தி வைப்பதற்கு சரித்திரம் எமக்குப் பெற்றுத்தந்துள்ள இந்தப் புதிய சந்தர்ப்பத்தை விரயமாக்காமல் சரியாக உள்வாங்கிக் கொள்வதற்கு நாம் அனைவரும் இப்போது தயாராக வேண்டும். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழப் பிரச்சினையில் தமிழரின் காதில் பூச்சுற்றிவிட்டது தி.மு.க

## டாக்டர் ராமதாஸ் குற்றச்சாட்டு



வேலூர்,பெப்.5

ஈழத் தமிழர் பிரச்சினையில் உலகத் தமிழர் ஒவ்வொருவரின் காதிலும் பூச் சுற்றிவிட்டது தி.மு.கவின் செயற்குழு முடிவு - என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

மேலும், போர்நிறுத்தம் குறித்து செயற்குழுவில் ஒரு வார்த்தை கூட வலியுறுத்தப்படவில்லை. போர்நிறுத்தம் இல்லாமல் எப்படி பேச்சைத் தொடங்க முடியும், அமைதி ஏற்படும், அதிகாரப் பகிர்வு ஏற்படும். இது மஹிந்த ராஜபக்ஷ கட்சியின் தீர்மானம் போல் உள்ளது. மொத்தத்தில் அன்றாடம் செத்து மடியும் இலங்கைத் தமிழர்களை தி.மு.கவும், ஆளும் தி.மு.க. அரசும் கைவிட்டுவிட்டன. தமிழர்கள் நிர்க்கதியாக விடப்பட்டுள்ளனர் - என்றும் அவர் வேதனைப்பட்டார்.

வேலூரில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

தமிழக அரசை நடத்தி வரும் கருணாநிதி ஒட்டுமொத்த தமிழக மக்களின் பிரதிநிதியாக விளங்குவதால், அவருடைய கட்சி இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எடுக்கும் முடிவால் தீர்வு ஏற்படும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் இந்த எதிர் பார்ப்பையும், ஏக்கத்தையும் நிறைவு செய்யும் வகையில் தி.மு.க. செயற்குழுவின் முடிவு இல்லை.

இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை என்ற அமைப்பை உருவாக்கி இருக்கிறார்களாம், இதன் மூலம் தமிழகம் முழுவதும் விளக்கக் கூட்டம், பேரணி, மனிதச் சங்கிலி, மாநாடு, அறப்போராட்டம் இதையெல்லாம் நடத்தி இலங்கை அரசுக்கும், மத்திய அரசுக்கும் எட்டுமாறு எழுச்சிப் பயணத்தை தொடங்கப் போகிறார்களாம்.

இதன் மூலம் உலகிலுள்ள ஒவ்வொரு தமிழரின் காதிலும் பூச் சுற்றியுள்ளனர். இந்த முடிவின் மூலம் இலங்கைத் தமிழர்களைக் காப்பதில் தி.மு.க. 50 ஆண்டுகளுக்குப் பின்நோக்கிச் சென்றுள்ளது.

வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு சுயாட்சி, முழுமையான அதிகாரப்பகிர்வு உள்ள அரசியல் தீர்வை உருவாக்கி செயற்படுத்திட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற முடிவை வலியுறுத்தி பேரணி நடத்த தி.மு.க. செயற்குழு முடிவு செய்துள்ளது.

போர்நிறுத்தம் இல்லாமல் எப்படி பேச்சைத் தொடங்க முடியும், அமைதி ஏற்படும், அதிகாரப் பகிர்வு ஏற்படும். இது மஹிந்த ராஜபக்ஷ கட்சியின் தீர்மானம் போல் உள்ளது. இவையெல்லாம் கருணாநிதிக்கே வெளிச்சம். மொத்தத்தில் அன்றாடம் செத்து மடியும் இலங்கைத் தமிழர்களை தி.மு.கவும், ஆளும் தி.மு.க. அரசும் கைவிட்டுவிட்டன. தமிழர்கள் நிர்க்கதியாக விடப்பட்டுள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கும், தி.மு.க. அரசுக்கும் கொள்கை அளவில் எந்த வேறுபாடும் இல்லையென வெளிப்படையாகவே கருணாநிதி அறிவித்துள்ளார்.

ஈழத் தமிழருக்காக நாம் உணர்வு பூர்வமாக நடத்தும் போராட்டத்தை, ஆட்சியை கவிழ்க்க சதி செய்கிறார்கள் என்று கருணாநிதி கொச்சைப்படுத்தியுள்ளார். இதை அவர்தான் அரசியலாக்கப் பார்க்கிறார்.

தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் உள்ளோம். அவர் ஒட்டுமொத்தமாக குரல் கொடுக்க வேண்டும் என்று காத்திருந்தோம். இப்போது என் மீதே கருணாநிதி குற்றம் சாட்டுகிறார். இப்பிரச்சினையில் இளைஞர்கள் யாரும் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும் செயல்களில் ஈடுபடக்கூடாது ; என்றார்.

## அமைச்சர் மணிசங்கர் ஐயரின் காரை வழிமறித்து கறுப்புக்கொடி

சீர்காழி, பெப் 05

சீர்காழியில் மத்திய அமைச்சர் மணிசங்கர் ஐயரின் காரை வழிமறித்து இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்பு குழுவினர் கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதையொட்டி, 16 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

மத்திய பஞ்சாயத்துராஜ் மற்றும் வடகிழக்கு மாநில மேம்பாட்டுத்துறை அமைச்சரும், மயிலாடுதுறை தொகுதி எம்.பி.யுமான மணிசங்கர் ஐயர் நேற்றுமுன்தினம் நாகை மாவட்டம் கொள்ளிடத்தில் வட் டார செயல்வீரர்கள் கூட்டத்தை முடித்துவிட்டு சீர்காழியில் நடைபெறவிருந்த நகர மற்றும் வட்டார செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக சீர்காழி நோக்கி வந்து கொண்டிருந்தார்.

அப்போது இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்புக் குழுவைச் சேர்ந்த பா.ம.க. மாவட்ட துணைச் செயலாளர் செந்தில்குமார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் வேலு. குணவேந்தன், ம.தி.மு.க. மாவட்ட பிரதிநிதி மார்க்கோனி, பெரியார் திராவிடர் கழக மாவட்டச் செயலாளர் பெரியார் செல்வம் ஆகியோர் கொள்ளிடம் முக்கூட்டில் மாலை 3.30 மணிக்கு திடீரென மணிசங்கர் ஐயரின் காரை வழிமறித்து கறுப்புக்கொடி காட்டினர்.

# உயிரை ஈழ மக்களுக்காகச் சமர்ப்பிக்கிறோம்!

## விஷம் அருந்திய மாணவர்கள் கடிதம்

200 அடி கோபுரத்திலிருந்து குதிக்க முயன்றவரும் மீட்பு



விஷமருந்தித் தற்கொலை செய்ய முயன்ற மாணவர்...



நெல்லை, பெப்.5

இலங்கைத் தமிழரைக் காப்பாற்றக் கோரி, நெல்லையில் 200 அடி உயர தொலைத்தொடர்புக் கோபுரத்தில் ஏறி தற்கொலைக்கு முயன்ற பல்கலைக்கழக மாணவரை தீயணைப்புப் படையினர் போராடி மீட்டனர்.

இதேவேளை, ஈழத்தமிழருக்காக விஷமருந்தித் தற்கொலை செய்ய முயன்ற தேனி மாவட்டம், பெரியகுளத்திலுள்ள அரசு ஆண்கள் பாடசாலை மாணவர்கள் மூவர், ''உயிரை ஈழ மக்களுக்காக சமர்ப்பிக்கிறோம்'' எனக் கடிதம் எழுதி வைத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை, நெல்லை சந்திப்பு ஸ்ரீபுரத்திலுள்ள 200 அடி உயர தனியார் தொலைத்தொடர்புக் கோபுரத்தில் ஏறி, பாலமுருகன் (வயது - 23) என்ற மாணவர் தற்கொலைக்கு முயன்றார். இவர், நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலையில், தொலைத் தொடர்பு கல்விப்பிரிவில் எம்.ஏ. தமிழ் இலக்கியம் படித்து வந்தார்.

மேலே நின்றபடி, மத்திய-மாநில அரசுகளுக்கு எதிராக உணர்ச்சிகரமான கோஷங்களை எழுப்பி துண்டுப் பிரசுரங்களை அவர் வீசிக்கொண்டிருந்தார். இதனால், கோபுரத்தின் கீழே பெருங்கூட்டம் கூடி பரபரப்பு ஏற்பட்டது. தகவல் அறிந்ததும் தீயணைப்புப் படையினர் மற்றும் பொலிஸார் அங்கு விரைந்து சென்று 2 மணி நேரப் போராட்டத்துக்குப்பின் அவரை மீட்டனர். பின்னர் பாலமுருகன் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இதேவேளை, தேனி மாவட்டம், பெரியகுளத்தில் உள்ள அரசு ஆண்கள் பாடசாலை மாணவர்கள் இலங்கைத் தமிழர்களை காப்பாற்றக்கோரி ஊர்வலம் நடத்த பொலிஸாரிடம் அனுமதி கேட்டனர். ஊர்வலத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டதால் மனம் உடைந்த 3 மாணவர்கள் விஷம் குடித்து மயங்கி விழுந்தனர். பிளஸ்-1 வகுப்பில் படித்துவந்த அன்பு, அழகன், சாம் என்ற அந்த மூன்று மாணவர்களும் உடனடியாக அருகிலுள்ள ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

அவர்கள் சட்டைப்பையிலிருந்த கடிதத்தில் -

இந்திய அரசே போரே நிறுத்து. எங்களின் ஊர்வலத்துக்குத்தான் தடை போட முடியும்; எமது உயிருக்குத் தடை போட முடியாது என்றும், ஈழத்தில் போரை நிறுத்த முடியாது; ஆனால், எங்கள் உயிரை மாய்த்துக்கொள்ள முடியும், என்றும், எங்கள் உயிரை ஈழ மக்களுக்காக சமர்ப்பிக்கிறோம் என்றும் உணர்ச்சிகரமாக எழுதப்பட்டிருந்தது.

இந்தத் தகவல் காட்டுத்தீ போல் பரவி, மருத்துவமனை முன்பு திரளான பேர் கூடினர். 3 மாணவர்கள் மீதும் தற்கொலை முயற்சி வழக்குப்பதிவு செய்து பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர்.

# தொடரும் ஈழத் தமிழர் படுகொலை; உணர்வற்ற நிலையில் மத்திய அரசு

## பா.ஜ.க. தலைவர் அத்வானி கவலை



டில்லி, பெப். 04

இலங்கைத் தமிழர்கள் தினந்தோறும் இன்னலைச் சந்தித்து வருகின்றனர். ஆனால், மத்திய அரசோ இந்த விவகாரத்தில் சிறிதும் உணர்வற்ற விதத்தில் நடந்து கொள்கிறது - என்று பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் எல்.கே. அத்வானி குற்றம்சாட்டியுள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் சந்தித்து வரும் இன்னல்கள் குறித்து ஆலோசிக்க தமிழக பாரதிய ஜனதா பிரதிநிதிகள் கூட்டத்தை எல்.கே.அத்வானி டில்லியில் நேற்றுமுன்தினம் கூட்டினார்.

இந்தக் கூட்டத்தில் தமிழக பாரதிய ஜனதா தலைவர் இல.கணேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதில் பேசும்போது இலங்கைத் தமிழர்கள் படும் துயர் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்த அத்வானி, இந்த விவகாரத்தில் மத்திய அரசு உணர்வற்ற நிலையில் இருக்கிறது எனவும் குற்றம்சாட்டினார்.

அத்துடன், மத்திய அரசின் இந்தப் போக்கு நீடித்தால் அது இலங்கை மண்ணிலிருந்து அகதிகளாக வெளியேறும் தமிழ் மக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவே வழிவகுக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

போர் முனையில் சிக்கித் தவிக்கும் மக்களை காப்பாற்ற உடனடியாக நடவடிக்கை எடுப்பதுஅவசியம் என்றும் அத்வானி வலியுறுத்தினார்.

# இலங்கைத் தமிழரை அழித்தொழிக்கும் இழிசெயலைச் செய்வதே இந்தியாதான்!

## குற்றஞ்சாட்டுகிறார் திருமாவளவன்



சென்னை, பெப்.5

ஈழத் தமிழர்களை அழித்தொழிக்கும் படு. பாதகச் செயலைச் செய்வது இந்திய அரசுதான். இலங்கைத் தமிழர் ஆதரவு காரணமாக, வரும் தேர்தலில் நாம் தனித்துவிடப்பட்டாலும் கவலையில்லை - என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.

இலங்கையில் இனப் படுகொலையை நிறுத்தக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் மேற்கொண்டு வரும் தொடர் உண்ணாவிரதத்தில் நேற்றுமுன்தினம் பங்கேற்று பேசியபோதே அவர் இதனைக்கூறினார்.

இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலை குறித்து மத்தியில் ஆட்சியில் இருப்பவர்களுக்குப் புரியவைத்து, போரை நிறுத்த வேண்டும் என்பது சிலரது வாதம்.

ஈழத் தமிழர்களை அழித்தொழிக்கும் படுபாதகச் செயலைச் செய்வது இந்திய அரசுதான்.

இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று மூன்று முறை சட்டப்பேரவையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அனைத்துக் கட்சிக் குழுவினர் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் நேரில் வலியுறுத்தினர். என்னும், தமிழ கத் தலைவர்களின் கோரிக்கைகள் மத்திய அரசால் பொருட் படுத்தப்படவில்லை. இலங்கை இராணு வத்துக்கு ஆதரவாக மத்திய அரசு ஆள்களை அனுப்புகிறது, பயிற்சி கொடுக்கிறது, புதிய ஆயுதங் களை வாங்க கடன் உதவி அளிக்கிறது.

ஈழத் தமிழர்களை அழிக்கும் செயலில் வெளிப்படையாக இந்திய அரசு ஈடுபட்டுள்ளது. இதைத் தோழமை அடிப்படையில் எடுத்துச் சொல்லி நிறுத்த முடியாது. இந்திய அரசைப் பணிய வைக்கக் கூடிய போராட்டங்களில் நாம் இறங்க வேண்டும். இதற்காக நாடாளுமன்றத் தேர்தலில் எங்கள் கட்சி தனித்து விடப்பட்டாலும் கவலையில்லை; இனமே அழிகின்றபோது, எம்.பி. பதவி போனால் போகிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தி.மு.க. சார்பில் அறிவிக்கப் ட்டுள்ள, இலங்கைத் தமிழர் உரிமைப் பேரவையை மனதார வரவேற்கிறேன் - என்றார்.

# இலங்கை அரசை ஒப்புக்குக் கூட இந்தியா போர் நிறுத்தம் செய்யக் கோராதமை ஏன்?



சென்னை, பெப். 05

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்று இந்திய அரசு ஒப்புக்குக் கூட ஏன் கேட்கவில்லை - என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கை அரசு இராணுவத் தாக்குதலை நிறுத்த வேண்டும் என்றும், இரு தரப்பும் போரை நிறுத்தி பேச்சு நடத்த வேண்டும் என்றும் ஐ.நா. பொதுச் செயலாளர் பான்-கி- மூன் கூறிவிட்டார். போர் நிறுத்தம் வேண்டும் என்று ஜேர்மனியும், ஜப்பானும், நோர்வேயும் கூறிவிட்டன.

ஐ.நா. மன்றத்தின் மனித உரிமைகள் ஆணையர் நவநீதம் பிள்ளை தனது அறிக்கையில், இலங்கையில் தமிழ்ப் பெண்களும், குழந்தைகளும் கொல்லப்படும் கொடுமையைச் சுட்டிக்காட்டி போர் நிறுத்தம் உடனடியாகத் தேவை என்று கூறியுள்ளார்,

தமிழர்கள் குடிமக்களாக இல்லாத இந்த நாடுகளெல்லாம் போர் நிறுத்தம் வேண்டும் எனக் கேட்கையில், ஏழு கோடித் தமிழ் மக்களின் இதய தாகமான வேண்டுகோளை, தமிழ்நாடு சட்டப் பேரவையின் ஒருமனதான தீர்மானத்தைக் காலில் போட்டு மிதித்துவிட்டு, இந்திய அரசு போர் நிறுத்தம் வேண்டும் என்று ஒப்புக்குக்கூட ஏன் கேட்கவில்லை? இது தான் விஸ்வரூபம் எடுக்கும் கேள்வி - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.பி. எல்லில் மற்றொரு பொலிவூட் நட்சத்திரம்

# ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை வாங்கினார் ஷில்பா ஷெட்டி



மும்பை,பெப். 05

ஐ.பி.எல்., அணி நிர்வாகத்தில் மீண்டும் பொலிவூட் ஸ்டார் நுழைந்து இருக்கின்றார். ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் உரிமையில் 12 சதவீத பங்கினை வாங்கி இருக்கிறார் ஷில்பா ஷெட்டி.

ஷாருக்கான் (கல்கட்டா நைட் ரைடர்ஸ்), பிரீத்தி ஜிந்தா (கிங் லெவன் பஞ்சாப்) என இருவரை அடுத்து ஐ.பி. எல்., தொடரில் மூன்றாவது நட்சத்திரமாக ஷில்பா ஷெட்டி நுழைந்து இருக்கின்றார்.

இந்தியன் பிரிமியர் லீக் சார்பில் (ஐ.பி. எல்.,) ருவென்ரி - 20' தொடரின் இரண்டாவது கட்டப் போட்டிகள் வரும் ஏப்ரல் மாதம் நடக்க இருக்கின்றன. இந்தநிலையில் வீரர்கள் பரிமாற்றம் தற்போது நடந்து வருகின்றது.

ஆஸ்திரேலிய சுழல் ஜாம்பவான் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் தென் ஆபிரிக்க அணியின் கப்டன் ஸ்மித், வாட்சன் உட்படப் பல பிரபல வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். கடந்த தொடரில் இந்த அணி சாம்பியன் கோப்பையைக் கைப்பற்றி இருந்தது. இதனிடையே இந்த அணியின் 12 சதவீத பங்கினை, பொலிவூட் நட்சத்திரம் ஷில்பா ஷெட்டி தன்னுடைய லண்டன் தொழில் அதிபர், பார்ட்னர் ராஜ்குந்தனுடன் இணைந்து இந்திய மதிப்பில் 57 கோடி ரூபா கொடுத்து வாங்கியிருக்கிறார்.

இதுகுறித்து ராஜஸ்தான் அணியின் உரிமையாளர் மனோஜ் பதலே கூறியது : நாங்கள் நல்ல திறமையான பங்காளியைத் தேடிவந்தோம். எங்கள் அணியின் உரிமையை உலகளாவிய அளவில் கொண்டு செல்ல விரும்பினோம். ஷில்பா ஷெட்டி, ராஜ்குந்தன் இருவரும் இணைந்து, அணியின் 12 சதவீத பங்கினை வாங்கி இருக்கிறார்கள். கடந்த ஆண்டு பங்கேற்ற அணிகளில் இது இரண்டாவது பிரபலம் வாய்ந்த அணி. ஆனால் முதன்மை யான அணி.

இந்தியாவில் கிரிக்கெட் பிரபலம். புதிய வீரர்களை உருவாக்கும் முயற்சியில் இந்த ஆண்டு 9 வீரர்களை அறிமுகம் செய்ய இருக்கின்றோம். இது தொடர்பாக கப்டன் வோர்ன் பலமுறை இந்தியாவுக்கு வந்து சென்றுள்ளார். பாகிஸ்தான் வீரர்கள் வராமை குறித்து கவலை இல்லை. நாங்கள் எந்தக் குறிப்பிட்ட வீரர் மீதும் ஆர்வம் காட்டுவதில்லை. 43 வீரர்களுடன் பங்கேற்க இருக்கும் எங்கள், அணி சரியான திறமையுடன் இருக்குமாறு பார்த்துக் கொள்வோம். இவ்வாறு மனோஜ் தெரிவித்தார்.

அணியின் பங்கை வாங்கியமை குறித்து ஷில்பா ஷெட்டி கூறுகையில், ''இது தொழில் ரீதியிலானது. தோல்வி பெறும் அணியின் மீது உரிமை கொண்டாடுவது எனது கொள்கை. ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி, கோப்பை வெல்லும் முன்பு தோல்வியுறும் அணியாகவே கருதப்பட்டது. இனி அணியின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவேன். விரைவில் இது குறித்து இசை அல்பம் வெளியிட இருக்கின்றேன்,' என்றார்.

## தென்னாபிரிக்க டெஸ்டில அன்ட்ரூ சைமண்ட்ஸ் இல்லை

மெல்போர்ன்,பெப்.05

தென்னாபிரிக்காவிற்கு எதிரான கிரிக்கெட் டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலிய அணி சார்பாக சகலத்துறை வீரர் அன்ட்ரூ சைமண்ட்ஸ் பங்கேற்கமாட்டார் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

சைமண்ட்ஸ் மீது விசாரணை நடக்க இருக்கிறது. எனவே, அவரை தெ. ஆ. தொடரில் சேர்க்க மாட்டோம் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

சைமண்ட்ஸின் விசாரணை முடியும் வரை அவரை அணியில் சேர்க்க வேண்டாம் என்று தேர்வுக் குழுவினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை - இந்திய அணிகள் மோதும் நான்காவது போட்டி இன்று கொழும்பில்

கொழும்பு, பெப்.5

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான 4 ஆவது ஒருநாள் ஆட்டம் இன்றும் பகலிரவுப் போட்டியாக கொழும்பு ஆர். பிரேமதாஸ விளையாட்டரங்கில் இடம்பெறுகின்றது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரை 3:0 என்ற அடிப்படையில் இந்திய அணி தனதாக்கியுள்ளது. தொடர்ந்து 3 ஆட்டங்களில் தோல்வியடைந்த இலங்கை அணி இன்றைய போட்டியிலாவது சிறப்பாக விளையாடுமா என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

அத்துடன் தற்போது 502 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ள இலங்கை வீரர் முத்தையா முரளிதரன் இன்னும் ஒரு விக்கெட் எடுத்தால், பாகிஸ்தானின் முன்னாள் தலைவர் வசீம் அக்ரமின் சாதனையை முறியடித்து புதிய சாதனை படைப்பார். எனவே இன்றைய ஆட்டத்தில் முரளி அச்சாதனையை முறியடிப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இது ஒருபுறமிருக்க டோனி தலைமையிலான இந்திய அணிதான் விளையாடிய 8 போட்டிகளில் தொடர்ச்சியான வெற்றியைப் பதிவுசெய்திருக்கின்றது. இன்னும் ஒரு போட்டியில் வெற்றிபெற்றால் அதிக போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் என்ற பெருமை டோனிக்குக் கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அடுத்த இரு போட்டிகளிலும் புதிய வீரர்களுக்கு வாய்ப்பு

## இந்திய அணித் தலைவர் தகவல்

கொழும்பு, பெப். 4

இலங்கைக்கு எதிரான தொடரில் எஞ்சிய ஒருநாள் போட்டிகளில் இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் என்று இந்திய அணியின் தலைவர் மகேந்திர சிங் டோனி கூறியுள்ளார்.

இந்திய அணி இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடி வருகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற 3 ஆவது ஒருநாள் போட்டியில் இந்தியா 147 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

அடுத்த ஒ[illegible]நாள் போட்டியில் வெற்றி பெற்றால் அதிக போட்டிகளில் தொடர்ந்து வென்று இந்தி[illegible]ா சாதனையை முறியடிக்கும். எனினும் இந்திய அணிக்கு சாதன்னை முக்கியமல்ல என்றும், எஞ்சிய இரு போட்டிகளில் இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கப் படும் என்றும் இந்திய அணித் தலைவர் டோனி கூறியுள்ளார்.

ஏற்கனவே தொடரை வென்றுவிட்டதால், அடுத்து வரும் போட்டிகளில் இது வரை ஆடாத இளம் வீரர்களை களம் இறக்கி அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் என்று டோனி கூறியுள்ளார்.

மேலும் இந்திய வீரர்கள் சிறப்பாக ஆடியமையால் வெற்றிபெற்றதாகக் கூறிய அவர், ஷேவாக் மற்றும் யுவராஜ்சிங்கின் அதிரடி ஆட்டத்தை டோனி மிகவும் பாராட்டினார்.

# டெண்டுல்கரின் ஆலோசனைப்படியே மெண்டிஸின் பந்துக்களை விளாசினேன்



கொழும்பு,பெப்.05

சச்சின் டெண்டுல்கர் அளித்த ஆலோசனையைப் பின்பற்றி இலங்கை சுழல் பந்துவீச்சாளர் அஜந்த மெண்டிஸின் பந்துவீச்சை எதிர்த்து திறம்பட விளையாடியதாகயுவராஜ்சிங் கூறியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் யுவராஜ் சிங் அதிரடியாக ஆடி சதம் அடித்தார். சதம் அடித்த மற்றொரு வீரரான வீரேந்திர ஷேவாக்கோடு இணைந்து அவர் 221 ஓட்டங்களைக் குவித்தார். ஆட்ட நாயகனாகத் தேர்வுசெய்யப்பட்ட யுவராஜ் சிங் பின்னர் கூறியவை வருமாறு:-

கடந்த தொடரின்போது, அஜந்த மெண்டிஸ் பந்து வீச்சில் நான் ஆட்டமிழக்க நேர்ந்தது. இதனையடுத்து சச்சின் டெண்டுல்கர் எனக்கு ஆலோசனை வழங்கினார். மெண்டிஸின் பந்து வீச்சைச் சமாளிப்பது எப்படி என அவர் எனக்கு எடுத்துரைத்தார். அதன் காரணமாகத் தற்போது சிறப்பாக ஆட முடிந்துள்ளது.

இந்த ஆட்ட நாயகன் விருதை நான் ஷேவாக்கோடு பகிர்ந்து கொள்கிறேன். ஷேவாக்கின் அதிரடி ஆட்டம் எளிதாக ஓட்டங்கள் குவிக்க எனக்கு உதவியது. மேலும் ஷேவாக்கோடு இணைந்து சதம் அடித்ததை பெருமையாகக் கருதுகிறேன். அதிலும் அவருக்கு முன்பாக சதம் அடித்ததை மிகப்பெரிய கௌரவமாக நினைக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.




# சச்சின் டெண்டுல்கர் மீது நடுவர்களுக்கு என்ன கோபம்?

## மூன்றாவது தடவையாகவும் தவறான தீர்ப்பு

இலங்கைக்கு எதிரான 3ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியிலும் நடுவரின் தவறான தீர்ப்புக்கு இந்திய நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் இரையானார்.

தம்புள்ளவில் நடந்த முதலாவது ஒரு நாள் போட்டியில் டெண்டுல்கருக்கு இலங்கை நடுவர் தர்மசேனா எல்.பி.டபிள்யூ. கொடுத்தார். அதனை சரியான கணிப்பு என்று சொல்லமுடியாத வகையில் அந்தத் தீர்ப்பு இருந்தது. இதைத் தொடர்ந்து கொழும்பில் நடந்த 2ஆவது ஆட்டத்தில் டெண்டுல்கருக்கு மறுபடியும் எல்.பி.டபிள்யூ அளிக்கப்பட்டது. டி.வி. மறுஒளிபரப்பிலும் பந்து விக்கெட்டைத் தாக்காமல் வெளியே போவது தெரிந்தது.

இந்த நிலையில் 3ஆவது போட்டியிலும் நடுவரின் மோசமான தீர்ப்பு தொடர்ந்து உள்ளது. நேற்றுமுன்தினம் டெண்டுல்கருக்கு, பெர்னாண்டோ பந்து வீச்சில் இலங்கை நடுவர் காமினி சில்வா எல்.பி. டபிள்யூ. கொடுத்தார். ஆனால் டி.வி. மறுஒளிபரப்பைப் பார்த்தபோது, பந்து விக்கெட்டை மிகவும் விலகிச்செல்வது தெளிவாகத் தெரிந்தது. இதனைக் கலரியில் இருந்து கவனித்த இந்திய பயிற்சியாளர் கிர்ஸ்டன், தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார். நடுவரின் தவறான முடிவுகளால் களத்தில் நீண்ட நேரம் நிற்க முடியாமல் ஏமாற்றத்திற்குள்ளான டெண்டுல்கர் முதல் 3 ஆட்டங்களில் முறையே 5, 6, 7 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருக்கிறார்.

டெண்டுல்கர் 'ஹெட்ரிக்' எல்.பி. டபிள்யூ ஆவது இதுவே முதல் முறையாகும். 422 ஒரு நாள் போட்டிகளில் ஆடியுள்ள டெண்டுல்கர் இதுவரை 34 முறை எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டம் இழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அக்ரமின் சாதனையை சமன் செய்தார் முரளி



இலங்கை சுழற்பந்து வீச்சாளர் 36 வயதான முத்தையா முரளிதரன், ஒரு நாள் போட்டியில் அதிக விக்கெட்டுகள் கைப்பற்றியவரான பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவர் வசீம் அக்ரமின் சாதனையை நேற்றுமுன்தினத்துடன் சமன் செய்தார். அக்ரம் 356 ஒரு நாள் போட்டியில் 502 விக்கெட்டுகளை வீழ்த்தி இருக்கிறார். நேற்றுமுன்தினம் இந்தியாவுக்கு எதிரான 3ஆவது ஒரு நாள் போட்டியில் முரளிதரன் யுவராஜ் சிங்கை ஆட்டம் இழக்கச் செய்தபோது அது அவரது 502ஆவது விக்கெட்டாக அமைந்தது. தனது 327ஆவது ஆட்டத்திலேயே அக்ரமின் சாதனையை முரளிதரன் சமன் செய்திருக்கிறார். அவரது சாதனையை முறியடிக்க இன்னும் ஒரு விக்கெட் மட்டுமே தேவை. அடுத்த ஆட்டத்தில் முரளிதரன் புதிய உலக சாதனையை நிகழ்த்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முரளிதரன் ஏற்கனவே டெஸ்டில் 769 விக்கெட்டுகள் (125 டெஸ்ட்) சாய்த்து முதலிடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை. சாளைப் பகுதியில் மோதல் இரு தரப்புகளிலும் பலர் உயிரிழப்பு

கொழும்பு, பெப்.5

முல்லைத்தீவு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சாளைப் பகுதியை நோக்கி படையினர் தீவிர முன் நகர்வு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் அப்பகுதி முழுவதும் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதுடன் தாக்குதல்களும் தீவிரமடைந்துள்ளன எனப் படைத்தரப்புத் தெரிவிக்கின்றது.

இதில் புலிகள் தரப்பில் 14 உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர் என அவ் வியக்கத்தினரது தகவல் பரிமாற்றங்களின் போது தெரியவந்துள்ளதுடன், இரு தரப்பு மோதலில் படைத்தரப்புக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

இதுதொடர்பில் பாதுகாப்பு ஊடக நிலையம் மேலும் பின்வரும் தகவல்களை அறிவித்துள்ளது:-

சாலை மேற்குப் பகுதியினூடாக முன்நகர்வு முயற்சியை மேற்கொண்ட இராணுவத்தின் 55ஆவது மற்றும் 58ஆவது படையணியினர் நேற்றுமுன்தினம் அதிகாலை முதல் மேற்கொண்ட முன்நகர்வு முயற்சியின் பயனாகவே அப்பகுதி முழுவதும் தற்போது சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. இதன்போது படையினர் மேற்கொண்ட தாக்குதல்களுக்கு புலிகள் நடத்திய பதில் தாக்குதலை அடுத்து மோதல் உக்கிரமடைந்துள்ளது.

**கரும்புலிகளின் முகாம் கண்டுபிடிப்பு**

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு, புதுக்குடியிருப்பு, இராமநாதபுரம் போன்ற பகுதிகளிலும் இரு தரப்புகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இதனை அடுத்து நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது புலி உறுப்பினர்களின் இரு சடலங்கள் உட்பட ஆயுதங்கள் பலவும் மீட்கப்பட்டன. அத்துடன் கரும்புலிகளின் தற்கொலைப் பிரிவினரின் முகாம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முல்லைத்தீவு களப்புக்கு அருகில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் இலக்கொன்றின் மீது விமானப் படைக்குச் சொந்தமான மிக் 27 ரக தாக்குதல் விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்குதல்களை நடத்தியுள்ளன. இதில் புலிகளின் ராடர் மத்திய நிலையமொன்று முற்றாக அழிவடைந்துள்ளது என விமானப் படையினர் உறுதி செய்துள்ளனர் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## பம்பலப்பிட்டியில் நாளை உண்ணாவிரதம்

கொழும்பு, பெப்.05

இன்னல்களை அனுப ...களின் பாதுகாப்பை வலியுறு... யுத்த அபாயத்திலிருந்து மக்களைக் ...றுங்கள்!', 'எமக்குத் தேவை சமாதானம் மட்டுமே', 'மக்களை மக்களாக நடத்துங்கள்!' ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து சுதந்திர மாணவர் முன்னணி நாளை ஒருநாள் அடையாள உண்ணாவிரத நிகழ்வை நடத் தவுள்ளது.

இந்நிகழ்வு கொழும்பு பம்பலப்பிட்டி, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணியளவில் நிறைவடையும் என்று சுதந்திர மாணவர் முன்னணி விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (அ-சி)

## புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியில் தங்கியுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் பணியாளர்கள் மற்றும் மக்களின் நிலைமைகள் மிகவும் ஆபத்தானதாக உள்ளமை குறித்து தாம் அச்சம் கொண்டுள்ளார் என்றும் கோர்டன் வெய்ஸ் தெரிவித்தார். (அ-சி)

## புதுக்குடியிருப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்மாற்றப்பட்டுள்ளனர் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் இலங்கைக்கான பேச்சாளர் சரசி விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

அப்பகுதியை நோக்கி நேற்றுமுன்தினம் மாலைமுதல் நேற்றுக்காலை வரை மேற்கொள்ளப்பட்ட கடும் பீரங்கித் தாக்குதலையடுத்தே புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மூடப்பட்டது என்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுப் பேச்சாளர் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் இருந்த அனைத்து மருந்துப் பொருள்களும், உபகரணங்களும் புதிய இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன என்று அவர் கூறினார்.

எனினும் வைத்தியசாலைக்கான புதிய இடம் எதுவென்று தெரியவில்லை என்றும் அவர் சொன்னார். (சி)

## காயமுற்றோரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)ண்

வருவதற்காக நாளை (இன்று) சில மணி நேரம் போர் நிறுத்தப்படும் என்று சுகாதாரத்துறையின் செயலாளர் என்னிடம் கூறினார். இது குறித்து நாங்கள் செஞ்சிலுவை சர்வதேசக்குழுவுக்கு அறிவித்திருக்கின்றோம்.

எத்தனை மணி நேரத்துக்கு போர் நிறுத்தம் என்று என்னால் கூற இயலாது. ஆனால் 6 மணி நேரம் என்று சுகாதாரத் துறையின் செயலாளர் கூறினார்.

வன்னியிலிருந்து நோயாளர்களைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் செஞ்சிலுவை சர்வதேசக் குழு மூலம் மேற்கொள்ளப்படும்.

வன்னியிலிருந்து வரும் நோயாளர்களுக்கு வவுனியா வைத்தியசாலையில் தனிப் பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதைவிட வசதிகளும் அங்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-சி)

## உடன் போர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியில் அவலப்படும் மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை உடன் அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கோரியும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாக அமைப்பாளர்களில் ஒருவரான தி.குணசிங்கம் தெரிவித்தார்.

இந்தக் கோரிக்கைகளுக்கு ஐ.நா. சரியான பதிலை இன்று (வியாழன்று) தராவிடில் மொத்தம் ஏழு பேர் ஐ.நா. அலுவலகத்தின் முன்னால் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்பார்கள் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இலங்கையின் சுதந்திர தினத்தை தாம் கரிநாளாக அனுஷ்டித்ததாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-1)

## தமிழகம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடைக்கப்பட்டிருந்தன. பல இடங்களில் சுமார் 40 பஸ்கள் கல்வீசித் தாக்கப்பட்டதில் கண்ணாடிகள் உடைந்து சேதமடைந்தன.

நேற்றைய முழு அடைப்புப் போராட்டத்தின்போது இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் சாலை மறியலில் ஈடுபட முயன்று பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தவேண்டும். அங்கு உடனடியாகப் போர்நிறுத்தம் வேண்டும் என்று கோரி இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் தமிழகம் முழுவதும் நேற்று முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இந்த முழு அடைப்பு சட்டவிரோதம் என்று தமிழக அரசு அறிவித்திருந்தது. ரயில்கள் மற்றும் பஸ்கள் முழுப் பாதுகாப்புடன் இயக்கப்படும் என்றும், அரச அலுவலகங்கள், பள்ளிகள் வழக்கம்போல இயங்கும் என்றும் அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடைகளை மூடச்சொல்லி வன்முறையில் ஈடுபட்டால் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வன்முறையாளர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அரசு எச்சரித்திருந்தது. இந்த நிலையில் நேற்றுக் காலை முழு அடைப்புப் போராட்டம் துவங்கியது. சென்னையிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் மட்டுமல்லாமல் மாநிலத்தின் பிற பகுதிகளிலும் பெரும்பாலான கடைகள் அடைக்கப்பட்டிருந்தன.

எனினும் தேநீர்க்கடைகள், மருந்துக் கடைகள், ஹோட்டல்கள், வெற்றிலை பாக்கு கடைகள், பத்திரிகை விற்பனைக் கடைகள் உள்ளிட்டவை திறந்திருந்தன.

## போரை நிறுத்தி சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சண்டையை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்தி நல்லிணக்கம் காணுமாறும் பாப்பரசர் நேற்றைய ஆராதனையின் பின்னர் பேசுகையில் இருதரப்பினரையும் கேட்டுக் கொண்டார்.

தற்போது போர் மிக மோசமடைந்து, பாதிப்புறும் அப்பாவி மக்களின் எண்ணிக்கை மிக வேகமாக உயர்ந்து வருவது கேட்டு, இரண்டு தரப்புகளிடமும் அழுத்தமான இந்த வேண்டுகோளை விடுக்கிறேன். சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளும் மனிதாபிமானச் சட்டங்களுக்கு மதிப்பளிப்பதோடு மக்களின் நடமாடும் சுதந்திரத்தையும் பாதுகாத்து உறுதி செய்ய வேண்டும் -

பொது மக்களின் - அப்பாவிச் சிவிலியன்களின் பாதுகாப்பை - உத்தரவாதப்படுத்துங்கள். காயமுற்றோருக்கு உதவி செய்வதை இயன்றளவு எல்லா வகைகளிலும் உத்தரவாதம் செய்யுங்கள் -

பொதுமக்களின் அவசர தேவைகளான உணவு மற்றும் மருத்துவ வசதிகள் திருப்திகரமாக கிடைப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள் - என்றும் பரிசுத்த பாப்பரசர் தமது அவசர வேண்டுகோளில் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச ரீதியில் போர் நிறுத்தத்தை கொண்டு வருமாறு அரசாங்கத்திடமும் விடுதலைப்புலிகளிடமும் வற்புறுத்தப்பட்டு வரும் வேளையில் பாப்பரசர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். (அ)

## இன அழிப்பில் ஈடுபடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பொருளாதார உதவிகளை வழங்குவது எந்த வகையில் நியாயம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுதொடர்பாக, தான் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கேள்வி எழுப்பியிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெளியுறவுக் குழு நேற்று விடுத்த மேற்படி அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

2009 பெப்ரவரி 3ஆம் திகதியில் நோர்வே, ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் ஆகியவை கூட்டாக வெளியிட்ட அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கவனத்தில் எடுத்துள்ளது. தமிழ் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் தொடர்பாக அந்த அறிக்கை கவலை வெளியிட்டிருப்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மதிக்கின்றது.

இதுதொடர்பாக பின்வரும் விடயங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்த விரும்புகின்றது.

1) தமிழ்த் தேசத்துக்கும் சிங்கள தேசத்துக்கும் இடையிலான பிணக்கு அடிப்படையில் அரசியல் ரீதியானது என்பதும் அதற்கு அரசியல் தீர்வே அவசியம் என்பதும் இலங்கைத் தீவின் தமிழ் மக்களின் மாற்றமடையாத நிலைப்பாடாகும்.

**இரண்டு தேசங்களின் வாழ்விடம்**

2) தமிழ்த் தேசம், சிங்கள தேசம் ஆகியவற்றின் வாழிடமே இலங்கைத்தீவு என்பதும் தமிழ் மக்களின் உறுதியான மாற்றமுறாத கருத்து நிலைப்பாடாகும்.

இந்த யதார்த்தப் புறநிலையை அங்கீகரிக்கும் அடிப்படையில்தான் - மேற்படி இரு தேசங்களினதும் உண்மையான பிரதிநிதிகள் - அதாவது புலிகளும், இலங்கை அரசும் -

இரண்டு தேசங்களினதும் எதிர்காலப் பாதுகாப்பு, பரஸ்பர நலன் போன்றவற்றுக்காக எவ்வாறு இரண்டு தேசங்களும் கூடிச் செயற்பட்டு, தமிழரின் தேசிய பிரச்சினைக்கு நீதியான, நீடித்து நிற்கக் கூடிய தீர்வைக் காணலாம் என்பது குறித்துப் பேச்சுகளில் ஈடுபட வேண்டும்.

3) பன்மைத்துவ இலங்கைக் குடியியல் உள்ளடக்க அடையாளத்தைத் தான் கொண்டதாக இலங்கை அரசு பிரகடனப்படுத்தி முன்னிலைப்படுத்தினாலும், உண்மையில் அந்த அரசு சிங்கள பௌத்த இனத் தேசியத்தையே கைக்கொள்கின்றது. இலங்கைத் தீவு முழுவதும் சிங்களவர்களுக்கு மட்டுமே உரித்தானது என்பதையே இந்தக் கொள்கை நிலைப்பாடு வலியுறுத்துகின்றது.

இந்தக் காரணத்தில்தான் - சிங்களவர்களோடு சமத்துவமாக வாழும் ஓர் அரசியல் ஏற்பாட்டை பேச்சு மூலம் காண்பதற்குத் தமிழர்கள் எடுத்த அனைத்து முயற்சிகளும் தோற்றுப்போயின.

4) சமத்துவமான தமிழ்த் தேசம் உள்ளது என்ற இந்த யதார்த்தத்தை ஏற்று அங்கீகரிப்பதற்கு மறுத்த இந்த பௌத்த - சிங்கள இன ரீதியான தேசியவாதமே, இன அழிப்பு நோக்கிலான இராணுவத் தீர்வுக்கு இலங்கை அரசை பலவந்தமாக நெட்டித் தள்ளியது.

அரசு தொடுத்துள்ள யுத்தத்தின் நோக்கம், தமிழ்த் தேசம் என்ற உண்மை இருப்பு நிலையைத் தனது இன அழிப்புச் செயற்பாடு மூலம் சிதைத் தழிப்பது தான்.

- இந்த அடிப்படையில்தான் மேற்படி நோர்வே, ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் விடுத்த கூட்டறிக்கை தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அதிருப்தியை வெளிப்படுத்துகின்றது.

இரு தரப்புகளையும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மதிக்கும்படி கோரும் இந்நாடுகளுக்கு, வேண்டுமென்றே தமிழர்களை இலக்கு வைக்கும் இலங்கை அரசு அதன் காரணமாக அந்தச் சட்டங்களை முழுவதுமாக மீறுகின்றது என்று நன்கு தெரியும்.

**மனிதகுலத்துக்கு எதிரான தீங்கியல் குற்றம்**

இலங்கையின் பாதுகாப்புச் செயலாளரே அண்மையில் பேட்டி ஒன்றில் பாதுகாப்புச் பிரதேசத்துக்கு வெளியில் எந்த வைத்தியசாலையும் கூட செயற்படக் கூடாது. இந்தப் பாதுகாப்புப் பிரதேசங்களுக்கு வெளியிலுள்ள எவையும் சட்டபூர்வமான இலக்குகள்தான் - என்று பிரகடனப்படுத்தியுள்ளார்.

இலங்கை அரசினால் முன்னெடுக்கப்படும் இந்தக் கொள்கை நிலைப்பாடு மனித குலத்துக்கு எதிரான தீங்கியல் குற்றமாகும்.

இந்தக் கொள்கையை முன்னெடுக்கும் இலங்கை அரசின் போக்கால் இந்த ஒரு வார காலத்துக்குள் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்படவும் ஆயிரக்கணக்கானோர் படுகாயமடையவும் நேர்ந்துள்ளது.

இந்த மனிதத் துன்பியல் கொடூரம் மனிதாபிமான உதவிகள் மக்களுக்குக் கிட்டுவதைத் தடைசெய்துள்ள இலங்கை அரசின் நடவடிக்கையால் மேலும் பூதாகரமாகியுள்ளது.

சர்வதேச சமூகம் - குறிப்பாக இந்தியாவும் மற்றும் சர்ச்சைக்குள்ளாகியுள்ள மேற்படி அறிக்கையில் ஒப்பமிட்டுள்ள நாடுகளும் - இந்த உண்மைகளை முழுமையாக அறிந்துள்ள போதிலும், சர்வதேசம் மனிதாபிமானச் சட்டங்களைப் பின்பற்றிக் கைக்கொள்ளுமாறு ஒன்றிணைந்து இலங்கை அரசை நெம்பித் தள்ளுவதை விடுத்து, இலங்கை அரசுக்கு இராணுவ மற்றும் பொருளாதார உதவியை வழங்கி வருகின்றமை பெரும் துர்ப்பாக்கியமாகும்.

தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கை அரசின் இராணுவ மற்றும் பௌதீக ரீதியான அடக்கு முறையை எதிர்த்து நிற்பது அவசியம் என்பதும், அதுவே ஆயுதம் தாங்கிய தமிழர்களின் எதிர்ப்புப் போராட்டத்தைத் தூண்டியது என்பதும் இங்கு கவனிக்கத் தக்கதாகும்.

இலங்கை அரசின் மேற்படி இன அழிப்பு நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மட்டுமே தடுத்து எதிர்கொள்கின்றது - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)


**DEATH ACKNOWLEDGEMENT**
**MR.S.G.SANTHIAPILLAI DIED ON 06.01.2009**

We wish to express our sincere thanks to His Lordship the Bishop of Jaffna, very Rev.Father Vicar General, Rev.Fathers, Rev.Sisters, Relatives, and Friends who attended his funeral, sent messages of condolence and assisted us in numerous ways during his sickness and in time of our grief with their presence, prayers, consoling words etc.

We also thank the doctors and the nursing staff of the Teaching Hospital, Jaffna for their interested attention during his illness.

We regret our inability to thank individually.

Puloly south,
Puloly.

Wife Elizabeth and Children.

A/L தமிழ் 2009 & Day Paper
சனி,ஞாயிறு I -9.00 II-10.00
நாக.தமிழிந்திரன்
Arts Academy நாவலர் (AOA) வீதி

CHEMISTRY
ஆரம்பமாகின்றது...
2011 : Fri - 3pm
2010 : Fri - 4.30pm (Inorganic)
N.VAKEESAN
கொழும்புத்துறை வீதி,
பாண்டியன் தாழ்வு.

சிங்களம்
இலகுவாகப்பேச, எழுத, வாசிக்க.
ஆசிரியை: சுலக்சனா
சனி, ஞாயிறு மாலை - 3 மணி
DMI நாவலர் வீதி, யாழ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.